தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 276

# பஞ்சதந்திர வசனம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 276

# பஞ்சதந்திர வசனம்

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்கள்

டாக்டர். பொ. சாம்டேனியல்

&

செல்வி. ஏ. ஜோசப்பின்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்.

2006 [ விலை : ரூ. 20-00

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : பஞ்சதந்திர வசனம் |
| பதிப்பாசிரியர்கள் | : டாக்டர். பொ. சாம்டேனியல்<br>செல்வி. ஏ. ஜோசப்பின் |
| வெளியிடுபவர் | : இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 276 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : செப்டம்பர், 2006 |
| தாள் | : TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 82 |
| படிகள் | : 250 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சுக்கோப்பு மற்றும்<br>ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : மெலிந்த அட்டை |
| பொருள் | : கதைகள் |
| விலை | : ரூ. 20-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

**"பஞ்ச தந்திர வசனம்"** என்னும் இந்நூல் வாழ்வின் அனுபவங்களை, வாழ்விற்குத் தேவையான நீதிக் கருத்துக்களைச் சிறுவர்கள் விரும்புமாறு அழகிய கதைகளாக்கி மாந்தருக்கு நீதி போதிக்கும் நல்ல நூலாகத் திகழ்கிறது.

பஞ்ச தந்திரம் என்பது (1) நண்பரைப் பிரித்தல், (2) நண்பரை அடைதல், (3) அடுத்துக் கெடுத்தல், (4) பேரழிவு, (5) ஆராயாமல் செய்தல் என்னும் ஐந்து முக்கிய நீதிகளைப் பலகதைகளைக் கொண்டும், மேற்கோள்களைக் கொண்டும் விளக்குகிறது. பஞ்ச தந்திர வசனம் என்னும் இந்நூல் நான்கு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்நூலில் நந்தகப் பிறகாண்டம், மண்டூகப் பிறகாண்டம் ஆகிய இரண்டு மட்டுமே உள்ளன.

இந்நூலைத் திறம்படப் பதிப்பித்துள்ள பதிப்பாசிரியர்கள் டாக்டர். பொ. சாம்டேனியல் மற்றும் செல்வி. ஏ. ஜோசப்பின் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக. இந்நூல் தற்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளிவருகின்றது. இந்நூல் வெளியீட்டுக்குத் தேவையான நிதியுதவியை நல்கியுள்ள நடுவண் அரசுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவனசெய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்ட நூலகப் பதிப்புத்துறை பணியாளர்களுக்கும், நூல் வெளிவரத் துணைநின்ற ஏனையோருக்கும் என் இனிய பாராட்டுக்கள்.

**சா. விஜயராஜ் குமார்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

*தஞ்சாவூர்*
***6-10-2006***



## பஞ்சதந்திரம் - ஓர் ஆய்வு

# முன்னுரை

அன்று முதல் இன்றுவரை கதை கேட்பாரும், கதை கூறுவாரும் உண்டு. கதை கூறுவாரைவிடக் கதை கேட்பார் மிகப்பலராவர். சிறுவர் முதல் பெரியவர் வரை, பாமரர் முதல் படித்தவர் வரை யாரும் கதையென்றால் அதில் நாட்டம் கொள்வர். அனைவரையும் ஆனந்திக்கவைக்கும், அமைதி பெறவைக்கும், ஆழ்கடல் இன்பத்துளாழ்த்தும் கதையினைப் பற்றி நாம் அறியவேண்டாவா? இக்கதை எவ்வாறு தோன்றியது, உருக்கொண்டு வளரலாயிற்று எனக் காண்போம்.

கதைகள் என்று தோன்றின, எப்படித் தோன்றின, யாரால் தோற்றுவிக்கப்பட்டன என்பதறிதல் கடினமாகும். ஆதிமனிதன் காட்டில் வேட்டையாடித் திரும்பிவந்தபின் காட்டில் தாம் பெற்ற அனுபவங்களை மற்றவர்களுக்குச் சொன்னதிலிருந்தே கதை தோன்றியிருக்கலாம், தொடங்கி இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறுவார்கள். உலக முழுவதும் கதைகள் பரவி இருப்பதையும், இக்கதைகள் உலக மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள் என்பதும் கண்கூடன்றோ?

### கதையின் வகைகள்

கதைகளில் பலவகை உண்டு. விலங்குக் கதை, தேவதைக் கதை, நாடோடிக் கதை, புராணக்கதை, காப்பியக் கதை, வரலாற்றுக்கதை, நீதிக்கதை என்று பலவாறாகப் பிரிக்கலாம். இப்பழங்கதைகளுக்கும் இன்று வளர்ந்து பெருகிவந்துள்ள சிறுகதைகள், நாவல்கள், புதினங்களுக்கும் வேறுபாடுகள் மிகப்பல உண்டு. எனினும் பழங்காலக் கதைகளின் வளர்ச்சியே, முன்னேற்றமே இவைகள் எனக் கூறலாம்.

## கதைகள் தோன்றக் கரு

பண்டு மக்கள் உலகத்தைப் பற்றியும் மனிதனைப் பற்றியும், பிற உயிர்களைப் பற்றியும் சமயத்தைப் பற்றியும் கற்பனையால் புனைந்துரைத்தவைகளை கதைகளாகப் பிறந்தன. பழம்பெருநாடாகிய எகிப்திய, கிரேக்க, ரோமானியப் பழங்கதைகள் உலகெங்கும் பெயர் பெற்றவை.

இப்பழம்பெரும் நாட்டுக்கதைகள், கதைக்கரு, அமைப்பு, சொல்லும் பாங்கு ஆகியவற்றில் ஒத்திருப்பதில் இருந்து பல்வேறு மக்கள் இனங்களும் பொதுவான வழிமுறைகளிலிருந்து கிளைத்தெழுந்திருக்கவேண்டும் என்பது பெறப்படுகின்றது. நாடோடி இலக்கியமும், பழங்கதைகளும் ஒத்துவிளங்குகின்றன. இப்பழங்கதைகளில் அறிவிற்குப் பொருந்தியனவும், பொருந்தாதனவும் இடம் பெற்றன.

ஆதிமனிதன் தம் மனத்தூண்டுதலின் பேரில் நடந்து கொண்டதற்கும், அவன் செய்த செயல்களுக்கும் காரணம் நாடினான். அவற்றைப் பிறருக்கும் விளங்கக் கதைகள் புனையலானான். ஆதிமனிதனின் வாழ்க்கையைச் சமூகம் எவ்வாறு ஒழுங்குபடுத்தியது, கட்டுப்படுத்தியது என்பதை ஆதிமக்களின் பழங்கதைகளின்று அறியலாம். மனிதனுடைய ஆழ்ந்த ஆசை, அச்சம், நம்பிக்கை, பற்று, உணர்ச்சி போன்றவற்றை உணர்த்துவது; சமூக முறையும் திட்டமும் சரியென வலியுறுத்துவது; உயர்வும், மேன்மையும் கற்பிக்க, உறுதிப்படுத்துவதுவே பழங்கதைகளின் நோக்கமாகும். ஆதிமனிதனின் ஆவியுலக நம்பிக்கை, பஞ்சபூதங்களின் வழிபாடு இவையெல்லாமும் பழங்கதையின் கருவாக உருப்பெற்றன.

## பிறநாட்டுக் கதைகள்

உலகெங்கும் மக்களை மகிழ்வில் ஆழ்த்தும் சுவை மிகுந்த கதைகள் பல உள. கிரேக்க, ரோமானியக் கதைகள் உலகப் புகழ்பெற்றவை. சாசர் என்ற ஆங்கிலேயர் எழுதிய

கான்டர் பரிக்கதைகள், டானியல் டிஃபோ எழுதிய ராபின்சன் குருசோ, ஸ்விஃப்ட் எழுதிய கலிவர் பயணங்கள், டெனிசன் எழுதிய அரசர் கதைகள், ஜெர்மானிய கிரிம் சகோதரர்கள் எழுதிய தேவதைக் கதைகள், ஷார்ல் பெரோ என்ற பிரெஞ்சுக்காரர் எழுதிய தேவதைக் கதைகள், அரபு மொழியில் முதன்முதலில் வெளியான அரபுக்கதைகள், சீனப் பழங்கதைகள் போன்றவை உலகப் புகழ் பெற்றவை. பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன வாகவும் உள்ளன.

**தமிழ்நாட்டுக் கதைகள்**

தமிழ்நாட்டிலே தொன்றுதொட்டு வாய்மொழியாகக் கூறும் கதைகளே இருந்தன. அவை எழுத்து வடிவம் பெறவில்லை. பெரும்பாலும் அச்சிடப்படவில்லை. பின் இவ் வாய்மொழிக்கதைகளில் சில அம்மானை என்ற எளிய செய்யுள் வடிவங்களாயின. பவளக்கொடி மாலை, புலந்திரன் களவு மாலை, கள்ளழகர் அம்மானை, ஏணியேற்றம், ஆரவல்லி சூரவல்லி கதை இவற்றில் சிலவாகும். தேசிங்கு ராஜன் கதை, ராமப்பையன் அம்மானை முதலியவைகள் வரலாற்று அடிப்படையில் எழுந்த வீரச்சுவை கதைகளாகும். விக்கிரமாதித்தன் கதை, ஆவிக்கதை, ஈசாப்புக்கதை போன்ற மொழிபெயர்ப்புக் கதைகள், பஞ்சதந்திரம், இதோபதேசம் முதலிய நீதிக்கதைகளும் மொழிபெயர்க்கப்பட்டன. பின் உயர்நீதி போதிக்கும் புராணக் கதைகள், கடவுள்தம் விளையாட்டைக் குறிக்கும் திருவிளையாடற் கதைகள் செய்யுள் வடிவில் தோன்றின.

**சமஸ்கிருத நீதிக் கதைகள்**

சமஸ்கிருத இலக்கியங்கள் பெரும்பாலும் நீதியைப் போதிப்பனவாகவே அமைந்துள்ளன. சமஸ்கிருதத்தில் நீதிக் கதைகள் எப்பொழுது தோன்றின என அதன் காலத்தை வரையறுத்தல் எளிதன்று. விலங்குகளையும், பறவைகளையும், வேறுபல பிராணிகளையும் கதாபாத்திரங்களாகக் கற்பனை செய்து அவற்றின் வாயிலாக

நீதிகளைப் போதிப்பதை இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்களிலும் மற்றும் பல புராணங்களிலும் காணலாம். பாரதத்தில் கிருத்திர கோமாயு சம்வாதம், நந்தா சரிதம், கபோதாக்கியானம் போன்ற கதைகள் பல இடம்பெற்றுள்ளன. பாரத காலத்திற்கு முன் வேத காலங்களிலும் இதுபோன்ற நீதிக்கதைகளைக் காணலாம். இருக்கு வேதத்தில் தியூத சூக்தம் முதலிய சூக்தங்களில் நீதி புகட்டப்படுகிறது. மீன்கள், மாடுகள், மரங்கள் முதலான உயிரினங்கள் பேசிக்கொண்டிருந்தன என்பன போன்ற கதைகள் வேதத்தில் காணப்படும். புத்தரின் முற்பிறப்புக் கதைகளைச் சொல்லும் ஆரிய சூரனின் ஜாதக மாலையாகும். இதில் தேவர், இயக்கர், கந்தருவர் முதல் விலங்குகள், பறவைகள் வரை கதா பாத்திரங்களாக இருத்தலைக் காணலாம். இக்கதைகள் படிப்பாரின் உள்ளத்தைக் கவரும் சுவைமிக்க கதைகளாகும்.

இந்நீதிக்கதைகள் பெரும்பாலும்இராஜதந்திரத்தைப் போதிப்பவை. பிற நீதிகளைப் போதிப்பவை என இரண்டு வகைப்படுகின்றன. பஞ்சதந்திரம், இதோபதேசம் போன்ற நூல்கள் இராஜதந்திரத்தைப் போதிப்பனவாக அமைந்தன. பிருகத் கதை, அதன்வழி நூல்களான கதாசரித் சாகரம், பிருகத் கதா மஞ்சரி, பிருகத் கதாச்லோக சங்கிரம் போன்றவையும் வேதாள பஞ்சவிம்சதி, கதா குசுமமஞ்சரி போன்றவையும் பிற நீதிகளைக் கூறும் கதைகளாகும்.

**பஞ்சதந்திர நீதிக்கதை**

உலகப் புகழ்பெற்ற பஞ்சதந்திரம் கிறிஸ்துவ சமய நூலாகிய பைபிளுக்கு அடுத்தபடியாக உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது எனச் சான்றோர் கூறுவர். இந்திய மொழிகளில் மட்டுமின்றி உலகின்கண் உள்ள வேறு அநேக மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மொழிகளிலும் பல்வேறு பெயர்ப்புகள் உள்ளன. சாணக்கியரின் நீதி சாஸ்திரம், பார்கஸ்பத்திய தண்டநீதி, சுக்ரநீதி போன்ற எல்லா நீதிகளிலும், மனு, பராசரர், வியாசர்

முதலானவர்களின் இயற்றிய நூல்களிலும் காணப்படும் சிறந்த கருத்துக்களைக் கதைவடிவில் பஞ்சதந்திரத்தில் காணலாம்.

விஷ்ணு சர்மாவால் எழுதப்பட்ட இப்பஞ்சதந்திர நூலுக்கு முதன் நூலாய், அடிப்படையாய் விளங்கியது தந்திராக்கியாயிகா (Tantrakhyayika). அது இப்போழ்து கிடைத்திலது; மாய்ந்து போயது. ஐந்து தந்திரங்களும் ஐந்து கதைகளாக வடிவெடுத்தன. இந்நூல் சாணக்கியரின் அர்த்த சாஸ்திரத்தைப் போன்று இராஜநீதிகளைப் போதிக்கின்றன. அர்த்தசாஸ்திரமோ, கற்றாரே பயிலும் ராஜ நீதி நூலாகச் சூத்திர வடிவில் எழுதப்பெற்றது. இப் பஞ்சதந்திரமோ இராஜ தந்திரத்தைக் கதைவடிவில் மற்றோரும் விரும்பிப் படிக்கும் வகையில், கதை, கதைக்குள் கதை வடிவில் எழுதப் பட்டுள்ளது.

**காலம்**

இந்நூல் கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டு இருக்கலாம் என்று அறிஞர் கருதுகின்றனர். பாரசீக அரசன் கொச்ரௌ கனோஷர்வன் (கி. பி. 531-79) என்பவரால் பஹ்லவி மொழியில் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளது. சிரிய மொழியில் (Syriac) கி. பி. ஆறாம் நூற்றாண்டில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதால், இந்நூல் 5-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்பது பெறப்படுகின்றது. கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் அராபிய மொழியிலும், கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் ஹிப்ரு(Hebrew) மொழியிலும், கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் ஸ்பானியர் (Spanish) மொழியிலும், 16-ஆம் நூற்றாண்டில் இலத்தின், ஆங்கில மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது என ஆய்வாளர்கள் கூறுவர். 12-ஆம் நூற்றாண்டில் பூரணபத்திரன் என்பவர் பஞ்சதந்திரத்தைச் சில மாறுதல்களுடன் எழுதியுள்ளார். சமஸ்கிருதத்திலேயே கதை வேறுபாடு களுடன் தந்தராக்யாயிகை முதலியனவும் இதோபதேசம் என்பதுவும் இதைத் தழுவிய நூல்களாகும்.

இப்பஞ்சதந்திரத்தை 1824இல் தாண்டவராய முதலியார் மகாராட்டிரத்திலிருந்து தமிழில் உரைநடையாக மொழி பெயர்த்தார். 19-ஆம் நூற்றாண்டில் வீரமார்த்தாண்ட தேவர் செய்யுள் வடிவாக அமைத்தார்.

**அமைப்பு**

இப்பஞ்சதந்திரத்தில் பல கதைகள் ஒரே வகையில் அமைந்துள்ளன. முதல் கதை, பின் கதைக்குள் கதை, கிளைக்கதைகள் பல இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கதைகளும் ஒரு நீதியைக் கற்பிப்பனவாக அமைந்துள்ளன.

இதுபோன்ற உபகதைகள் பல புத்தமத நூல்களில் காணப்படுகின்றன. புத்தரின் முற்பிறப்பைக் கூறும் ஆரிய சூரரின் ஜாதகமாலையிலுள்ள உபகதைகளைத் தழுவி எழுந்த கதை நூல்கள் பலவற்றில் சிறப்புடையது பஞ்சதந்திரமாகும்.

அரபு மொழியிலுள்ள பஞ்சதந்திரம் "கலியாதாம்நா" (Kaliah and Dammah) என்ற பெயர்கொண்டதால் "கரடக தமனகன்" என்பது இதன் பழைய பெயரென அறியலாம். இதன் முதற்பாகத்தில் கரடகன், தமனகன் என்ற இரு நரிகள் முக்கிய பாத்திரங்களாக அமைந்துள்ளதும் இதற்குப் பொருத்தமாகவே உள்ளன.

**பஞ்சதந்திரக் கதை எழுந்த கதை**

பாரததேசத்தின் தென்பகுதியில் மகிலாரூப்பியம் என்னும் நகரத்தை அமரசக்தி என்றோர் அரசர் ஆண்டுவந்தார். அவர் அனுபவத்தில் தேர்ந்தவர், ஆற்றலில் மிக்கவர், அறிவில் சிறந்தவர், அனைத்துக் கலைகளையும் கற்ற சகலகலா வல்லுநர். மாற்றார் பணிய, மற்றவர் கப்பம் செலுத்த, வல்லமை மிக்க மாமன்னனாய் விளங்கினார்.

அம்மாமன்னனுக்கோ வசுசக்தி, உக்கிரசக்தி, அனந்த சக்தி என மூன்று மகன்கள் இருந்தனர். மூவரும் சோம்பேறித் தனத்தில் மூழ்கியவர், முட்டாள்தனம் நிறைந்தவர். கல்வியில்

கருத்தும், கவனமும் இல்லாதவர். ஆர்வமும், அக்கறையும் அற்றவர்.

இத்தகு மக்களைப் பெற்றமை குறித்து அரசர் பெரிதும் வருந்தினார். தனக்குப் பின் தன்னாட்டை ஆளச் சிறப்பான வாரிசு இல்லையே எனக் கலங்கினார், இம்மக்களைக் கல்வி கேள்விகளில் சிறப்புறச் செய்வது யாங்கனம் எனச் சிந்திக்கலானார். ஒரு முடிவும் காணாது வேதனையுற்றார்.

நல் அறிஞரும் நல் அமைச்சும் நிறைந்த தம் அவையைக் கூட்டினார். தம் துயரினை அவைமுன் வைத்தார். என் மக்கள் கல்வியறிவு அற்றவர்களாய் உள்ளனர் என்பது தாங்கள் அனைவரும் அறிந்ததே. அவர்களைக் காணுந்தோறும், காணுந்தோறும் என் கவலை மிகுகின்றது. நல்லதோர் பேரரசைப் பெற்றிருந்தும் பெருமகிழ்வு அற்றவனாய் வாழ்கின்றேன்.

எனக்குப் பின் நாட்டினை ஆள அவர்கள் ஏற்புடையவரா? அவர்களிடம் இப்பெரும் அரசு சென்று சேர்ந்தால் முள் நிளைந்த காடாகவன்றோ ஆகிவிடும். இதைக் குறித்து நான் மனம் நொந்து வாடுகின்றேன், மகிழ்வற்றவனாய் வேதனையில் வீழ்கின்றேன். குழந்தை பிறவாமல் இருந்தால், அல்லது பிறந்து இறந்திருந்தால் பெறும் துன்பமோ கொஞ்சம்தான். ஆனால் புத்தியில்லா மூடக் குழந்தைகளைப் பெற்றவனுக்கு வாழ்நாளெல்லாம் துன்பமன்றோ! ஈனாமல், பால் கறவாமல் இருக்கும் கராம் பசுவினால் என்ன பயன்? அறிவும் ஆற்றலும் இல்லாக் குழந்தை இருந்தென்ன பயன்? சொந்த புத்தி இல்லாத, சொற்புத்தி கேளாப் பிள்ளைகளால் என்ன நன்மை விளையும்? அவர்கள் இருந்தென்ன, இல்லாமற் போயென்ன? எனவே என் மக்களை மாண்பு மிக்கவராக்க வேண்டும். என் புதல்வர்களைப் புத்திசாலிகளாக்க வேண்டும். அதற்கு வழிகாணவே, தக்க யோசனை கேட்கவே அறிஞர்களாகிய உங்களை அழைத்தேன் என்றார்.

அரசர் தம் கவலையை, பொறுப்புணர்வை உணர்ந்த அமைச்சர் ஒருவர் "அரசே ! தங்கள் புதல்வர் கல்வி கேள்விகளில் சிறக்க வேண்டுமானால் முதலில் பன்னிரண்டாண்டு இலக்கணம் கற்கவேண்டுமே! அதன்பின் வாழ்விற்கு அத்தியாவசியமான அற நூல், பொருள் நூல், இன்பம், வீடுபேறு (Dharma, Artha, Kama, Moksha) போன்றவற்றைக் கற்கவேண்டும். அதன் பிறகன்றோ கல்வி கேள்வியில் முதிர்ச்சியுறுவர், அறிவு மலர்ச்சி அடைவர்" என்று கூறினார். சுமதி என்கின்ற மற்றொரு அமைச்சர் எழுந்து, "மன்னவா! வாழ்வோ நிலையற்றது. இலக்கணம் பயிலவோ ஆண்டுபல வேண்டும். கற்கவேண்டிய கலைகளும், அறிவு நூற்களும் ஏராளம். அவற்றையெல்லாம் கற்று முடித்து அறிவு பெறுவது எப்பொழுது? வாழ்நாட்களே போதா! எனவே நீரைப் பிரித்துப் பாலை மட்டும் பருகும் அன்னப்பறவையைப் போன்ற ஆற்றலின் திறத்தை, அறிவுத்திறத்தை, சாரமுள்ளதை மட்டும் திரட்டி இளவரசர் களுக்குப் புகட்டவேண்டும். அதுவே ஏற்புடையதும் நன்மையும் பயப்பதாகும்.

நம் நகரில் விஷ்ணுசர்மன் என்ற புகழ்பெற்ற அந்தணர் ஒருவர் இருக்கிறார். சகலகலா வல்லவர். கற்பிப்பதில் கரை கண்டவர். அவரிடம் நம் இளவரசுகளை ஒப்படைத்தால் விரைவில் பயன்பெறலாம். வெகுவிரைவில் தன் திறனால் அவர்களை அறிவாளிகளாக்கி விடுவார் என்றார்.

இதனைக் கேள்வியுற்றவுடன் மன்னவன் விஷ்ணு சர்மனை அழைத்துவரச் செய்கிறான். விஷ்ணு சர்மனிடம், "அறிஞர் பெருமானே! எனக்கொரு நன்மை புரியவேண்டும். எனது மக்களுக்குக் கல்வியறிவு புகட்டி அவர்கள் அரசியல் ஞானம் மிக்கவர்களாய், தனக்கு இணையற்றவர்களாய் அறிவில் சிறப்புற்று விளங்கவேண்டும். அதற்குக் கைமாறாக என்ன வேண்டுமானாலும் தருகின்றேன், என் அரசில் பெரும் பகுதியைத் தருகிறேன்" என்றார்.

அதற்கு விஷ்ணுசர்மன், "மன்னரே! நிலத்திற்கும், பொருட்கும் ஆசைப்பட்டு கல்வியை விற்கும் கசடன் அன்று நான். அறிவுபெற விழைவோர்க்குக் கற்பிப்பதே சிறந்த அறிஞனின் கடனாகும். பொருளாசையும், தேவையும் அற்றவன், ஐம்புலன்களை அடக்கி ஆண்ட எனக்குப் பொருள் பயனற்ற ஒன்றே! எனினும் தங்கள் புத்திரர்களுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன். சரஸ்வதியின் அருளால் ஆறு திங்களில் அவர்கள் உலக அறிவிலும், அரச நீதியிலும் திறமையிலும் சிறந்தவர்களாக மேன்மையுறச் செய்கிறேன். அவ்வாறு செய்யவில்லை எனில் என் பெயர் விஷ்ணு சர்மன் இல்லை. இது உறுதி, என்னை நம்பலாம்" என்று அறுதியிட்டு உறுதியுடன் கூறினார்.

அந்தணரின் உறுதிமொழி கேட்ட மன்னவன் இன்பக் கடலில் மூழ்கினான். தம் மக்கள் மூவரையும் அழைத்து விஷ்ணுசர்மனிடம் மகிழ்வுடன் ஒப்படைத்து மனநிம்மதி உற்றான். பேரின்பமடைந்தான்.

விஷ்ணுசர்மன் மூவரையும் தன் குருகுலத்திற்கு அழைத்துச் சென்றார். உலகியல் அறிவு, அரசியல் சாஸ்திரங்களைச் சின்னஞ்சிறு கதைகளாக, சுவைமிக்க கதைகளாக வடித்து இளவரசர் மூவருக்கும் விளக்கிக் கூறினார். அந்தக் கதைகள் ஐந்து பிரிவுக்குள் அடங்கின. ஐந்து தந்திரங்களாகப் புனையப்பட்டதால் பஞ்சதந்திரம் எனப் பெயர்பெற்றது. நட்பைக் கெடுப்பது, நட்பைப் பெறுவது, அடுத்துக் கெடுப்பது, பேரற அழிவு, ஆராயாமல் செய்வது என்ற ஐந்து முக்கியமான, சிறப்பான நீதித் துறைகளைப் பல கதைகளாக்கி, சுவைகூட்டிக் கற்பித்தார். இளவரசர்கள் மூவரும் அதனைச் செவ்வையாகக் கற்றனர். அவர் கூறியது போல் ஆறே திங்களில் அறிவாளிகளாக புத்திசாலிகளாயினர். இதனைக் கண்டு மன்னன் மகிழ்ந்து அந்தணரைப் பாராட்டி, பரிசு வழங்கிக் கௌரவித்தான். இப் பஞ்சதந்திரம் உலகெங்கும் புகழ்பெறலாயிற்று. இதனைக் கற்றவர்

அனைத்து நீதி நூல்களையும் கற்றவராவார். இதனைக் கற்றோர் மனதில் நிலைபெற வைத்தவர்; இந்திரனே பகைத்து வந்தாலும் வாழ்வில் தோல்வியுறார், வெற்றியே காண்பர்.

இந்திய தேசிய நூலகங்களில் தலைசிறந்த நூலகம் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னனான சரபோஜி மன்னனால் பெரிதும் போற்றிக் காக்கப்பட்டு, வாழையடி வாழையாகச் சிறந்து விளங்கும் தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகமாகும். ஆன்றோர்தம் அருங்கருத்துக்கள் தாங்கிய ஓலைச்சுவடிகள் பல கண்ணெனப், பொன்னெனப் போற்றிக் காக்கும் பணிகளையும், அச்சுயேறாப் பல ஓலைச்சுவடிகளை ஆராய்ந்து வெளியுலகிற்கு அறிவுலகிற்கு அளிக்கும் அறப்பணியில், ஆக்கப்பணியில், அரிய பணியில் ஈடுபட்டு அரும்பெரும் தொண்டாற்றி வருகிறது.

ஓலைச்சுவடிகளை ஏட்டுப் படிவமாக்கி வைத்துள்ளனர். அதில் ஒன்றே பஞ்சதந்திரக் கதைகளைத் தாங்கிய ஏட்டுப் படிவம். அதனைப் பதிப்பிடுகின்ற பணி எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ் ஏட்டுப் படிவத்தில் பஞ்சதந்திர வசனம் என்று பெயரிட்டுப் புரிந்தும் புரியாமலும் சில பகுதிகள் விடப்பட்டும் இருந்தன. ஓரளவிற்குச் செப்பமாக்கி நூல் வடிவமாக்கியுள்ளோம். இதனுடைய காலத்தையும் ஆசிரியரையும் அறிய இயலவில்லை. மற்ற பஞ்சதந்திரக் கதைகளினின்று ஆரம்பம் சற்று மாறுபட்டுள்ளது. ஆனால் மற்ற கதைகளும், கிளைக்கதைகளும் பஞ்ச தந்திரத்தில் உள்ளனவாக உள்ளன. பெரும்பாலும் மணிப்பிரவாள நடையே இடம் பெற்றுள்ளது.

**நன்றியுரை**

இப் பஞ்சதந்திர வசனம் என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட அனுமதி அளித்த பெருந்தகையாளர் தஞ்சை மாவட்ட ஆட்சியாளரும், இந்நூலக முன்னாள் இயக்குநருமாகிய உயர்திரு சு. மச்சேந்திரநாதன், இ. ஆ. ப.,

அவர்கட்கு எமது உளம்கனிந்த நன்றிதனைச் சமர்ப்பிக்கிறோம். இந்நூலை வெளியிட பதிப்புரை நல்கி உதவிய நூலக இயக்குநர் பன்மொழிப் புலவர். பேராசிரியர் மு. சதாசிவம், எம். ஏ., எம். லிட்., அவர்களுக்கும், நூலக நிருவாக அலுவலர் சீ. கிருஷ்ணன் அவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக. இவ்வரும் பணியாற்ற நல்வாய்ப்பளித்த இந்நூலகப் பொறுப்பாளர் திரு. பஞ்சநாதன், M. A., B. Lib. Sc., அவர்கட்கும் எமது நன்றிதனை உரித்தாக்குகின்றோம். இந்நூல் உருவாகப் பல நூல்களைத் தந்துதவிய திரு. பத்மநாபன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்., நூலக இயர்குநர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை, அவர்கட்கும் எமது நன்றிதனை உரித்தாக்குகின்றோம். இப்பணி சிறப்புற உதவிய அனைவருக்கும் எம் நன்றிதனைச் சாற்றுகின்றோம்.

இவண்,

செல்வி. **அ. சோசேபின்,** எம். ஏ., எம். இட்.

திரு. **பொ. சாம்டானியல்,** எம். ஏ., எம்.ஏ., பி. எச்டி.,

கான்ஸ்தன்தயின் பல்கலைக்கழகம்,

அல்ஜீரியா.

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**

தஞ்சாவூர் **மற்றும் இயக்குநர்**

சரசுவதி மகால் நூலகம்.

# பஞ்சதந்திர வசனம்

பஞ்சதந்திரக் கதைகள் என்று பல கதைகள் நிலவுகின்றன. வாழ்வின் அனுபவங்களை வாழ்விற்குத் தேவையான நீதிக் கருத்துக்களை, சிறுவர்களும் விரும்பும்படி அழகு கதையாக்கி விலங்கு, பறவை இவைகளுக்குள் நடப்பதாக வடித்து மானிடருக்கு நீதி போதிக்கும் நன்னூலாகத் திகழ்கிறது.

இப் பஞ்சதந்திர வசனம் நந்தகப் பிறகாண்டம், மண்டூகப்பிறகாண்டம், பட்சி பிறகாண்டம், பிசாசு பிறகாண்டம் என்று நான்கு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒரு காண்டத்திற்குத் தொண்ணூறு கதைகளாக நாலு பிற காண்டத்திற்கும் முன்னூற்று அறுபது கதைகளும் தமிழில் எழுதப்பட்டுள்ளது என்று ஓலைச்சுவடி கூறுகிறது.

ஆனால் இப்பகுதியில் நந்தக பிறகாண்டம், மண்டூகப் பிறகாண்டம் இரண்டுமே உள்ளன. சின்னக்கதை, கிளை, கிளைக்கதைகளாக நந்தகப் பிறகாண்டத்தில் 15 கதைகளும், மண்டூகப் பிறகாண்டத்தில் 10 கதைகளுமே உள்ளன. மற்றவை செல்லரித்தும் காணாமலும் போயின.

நந்தகப் பிறகாண்டம் ஒரு கதை முடிவு உடையதாக உள்ளது. மண்டூகப் பிறகாண்டமோ முடிவு கிடைக்காது இடையிலே விடப்பட்டுள்ளது. மற்ற இரு காண்டங்களும் காணவில்லை.

எனினும், பண்டு நன்மக்கள் நல்லரும் கருத்துக்களை, அனுபவமொழிகளை, வாழ்வில் கெடாது வாழும் சாதூரியத்தை, கெட்டாலும் மீண்டும் உய்யும் வழிமுறைகளை நட்பினர், பகைவர் எவரென ஆயும் வழிமுறைகளை அழகாக, சிறுவர் விரும்பும் வண்ணம், விலங்குகள், பட்சிகள், மண்டூகங்கள் இவற்றின் வாழ்வில் ஏற்றிக் கூறியுள்ளார்கள்.

# பஞ்சதந்திர வசனம்

**தோற்றுவாய்**

அயவரிய பாலன் என்கின்ற அரசன், பரந்து விரிந்த எல்லைக்குட்பட்ட நாகலோகப் பெருந்தீவில் வருணாசிரமத்தில் சங்கராச்சாரிக்கு உட்பட்ட பகுதியை ஆண்டு வந்தான். கிரீட மாந்திராதிகள், இராசராசாக்கள், சகல சனங்களும் கப்பம் கட்டி சேவித்து வர மேனகை, அரம்பை, ஊர்வசி, திலோத்தமை, அப்சர ஸ்திரீகள், இரத்தினப் பிரபை போன்ற தேவலோகப் பெண்கள் நடனமாடிவர, வீணை, சுரமண்டலம், பதினெட்டுவகை மேள வாத்தியத்துடனே திரிகாலமும் ஆடல்பாடலுடனே, ஆடுகிறவர்கள் ஆட, பாடுகிறவர்கள் பாட, இராசராசாக்கள் நின்ற கொலுவாக நின்று சேவிக்க, மூன்று லட்சத்து அறுபதினாயிரம் மந்திரிமார்கள் காத்துச் சேவிக்க ஆண்டுவந்தார்.

இப்படியாக அரசன் கொலு கொண்டிருக்கிற வேளையிலே மந்திரிமார்களுள் ஒரு மந்திரி பிள்ளைக்குத் திருமணம் நடைபெற்றது. அயவரிய பாலன் என்கிற ராசாவின் சபையில் இருந்த பிரதான மந்திரி எழுந்திருந்து சென்று திருமணம் செய்துகொண்ட தம்பதிகளை நெடுநாள் வாழ வாழ்த்தி வெகுமதியும் கொடுத்து அவர்களை அனுப்பிவிட்டு மீண்டும் அரசனது கொலுவிற்கு வந்து சேர்ந்தான். அப்பிரதான மந்திரியைப் பார்த்து அரசன், "வாராய் மந்திரியே ! இத்திருமணத்தில் விசேடம் ஏது? என்று கேட்க, மந்திரியும் இவ்விவாக முகூர்த்தத்திலே மணமகன் மணமகளுக்கு மாங்கலிய சூத்திரம் தரிக்கும்போது புருஷோத்தமனும், காளகஸ்த்தியும், பிரமாவும், திருமூர்த்திகளும், முப்பத்து முக்கோடித் தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், கின்னரரும், புருஷாள், நாரதாதிகள் முதலாக அனைவரும் வந்து மூன்றே முக்கால் நாழிகை கூடிநின்று சன்னதி பண்ணினார்கள் என்று சொன்னார். அதைக்கேட்ட ராசாவானவர் சொல்வார்,

சொர்ணத்தை அன்னமாகவும், நவரத்தினங்களைக் கறியாகவும் உண்ணப்போவதில்லை. ஆனபடியால் விவாகம் பண்ணினால் புருஷோத்தமனும், காளகஸ்த்தியும், திருமூர்த்திகளும் மூன்றேமுக்கால் நாழிகை சன்னதி பண்ணுவார்கள் என்றால் நமக்கு நித்திய விவாகம் பண்ணிவைப்பாயாக. நமக்கு நித்திய விருத்தியும், புருஷோத்தமன் சன்னதியும் கிடைக்கும் அல்லவோ?" என்று இராசா கூறினார்.

அரசனின் சொற்கேட்ட மந்திரி மிகவும் பயப்பட்டு, "சுவாமி மகாராசனே! நீர் அனவரத காலமும் சருவ சனரட்சகனாய், சர்வாந்தியாய், புருஷோத்தமனாய் தேவரீர் எழுந்தருளி உள்ளீர். இந்த லோகத்தில் அற்ப வசனங்களைப் பாராமல் இராச்சியத்தை இரட்சித்து, துஷ்டநிக்கிரகம் பண்ணி (துட்டரைத் தண்டித்து) நல்லோர் விரும்ப இராஜிய பரிபாலனம் செய்து (இஷ்டபரிபாலனம்) ஆறில் ஒன்று கடமை கொண்டு, அல்லவை கடிந்து, நல்லவை நாடி, அந்தணர் அழிபசி தீர்த்து, தேவதாயம் விருமதர்யம் விளங்க, அன்றாடம் தர்மசாஸ்திரங்கள் வழுவாமல் ஏகனார் விருதம் பூண்டு செங்கோல் நடத்தி இராச்சிய பரிபாலனம் பண்ணுகிற கீர்த்தியே சிறப்பு" என்று சொல்ல, அரசன் வெகுசன்மானம் மந்திரிக்குக் கொடுக்க, மந்திரி பிரியமெய்தி அப்படியே திருமணம் செய்விக்கிறேன் என்று கூறினான்.

மந்திரி தான் கூறியபடியே, சர்வ இலட்சண ரம்பையனைய ஒரு ராசகன்னிகையைத் தேடி, கண்டு அரசனுக்குத் திருமணம் பண்ணிவைத்து, புது மாளிகை அமைத்துப் பள்ளிகொள்ளும்படி செய்தான். இவ்வாறு நாடோறும் அரசனுக்கு ஒரு கன்னிதேடி திருமணம் பண்ணி வைத்தான். ஒருநாள் அரசனுக்கேற்ற கன்னி தேடியும் கிடைக்காமல் பிரதான மந்திரி சோர்ந்து தன் அரண்மனை அடைந்து துக்கித்து மூர்ச்சிக்கும் தருவாயில் மந்திரி மகள் தத்துறு என்பாள் தன் தந்தையின் நிலைகண்டு வருந்திச் சொல்வாள்.

ஐயா ! தேவரீர், மனம் சலித்து வருந்தவேண்டாம். இன்றைக்கு என்னை விவாகம் பண்ணிக்கொடுங்கள் என்ன, மந்திரியும் இன்றைக்கு உன்னை விவாகம் பண்ணிக் கொடுத்தாலும் நாளைக்கு இந்நிலை தானே, ஒருநாள் அரசனுக்கேற்ற கன்னி கிடைக்காது திருமணம் பண்ணி வைக்காதபோது ஆக்கினை கிடைக்கும். இதில் ஐயமில்லை அன்றோ? ஆகையால் இன்று உன்னை அரசனுக்கு மணமுடித்து வைத்தும் பயனில்லை என்றுகூறி வருந்தினான்.

மந்திரி மகள் தத்துறு சொல்வாள் "நான் இராசாவை இனிமேல் விவாகம் பண்ண நினையாதபடி தவிர்க்க வல்லேன்" ஆகையால் என்னை மன்னனுக்கு மணம் முடித்துக் கொடுப்பாயாக என்ன, மந்திரியும் மிகவும் பிரியமெய்தி இன்றைக்குப் பிழைத்தோம் என்று மனம் மகிழ்ந்து அப்படியே தத்துறுவை விவாகம் பண்ணிக் கொடுத்து சன்மானம் பெற்றான். மீண்டும் நாளை என்ன செய்வோம் என்று மந்திரி துக்கித்து நின்றான்.

இப்பால் அயவரியபாலனும் தத்துறுவுடனே பள்ளி கொண்டிருந்தான். அப்பொழுது தத்துறு என்பாள் விளக்குத் தூண்டும் தாதியை நோக்கி சொல்வாள், "தாதி நீ ஒரு கதை சொல்லுதல் கேட்டல் வல்லையோ?" என்றாள். அதற்குத் தாதி, "நான் கதை சொல்ல அறியேன். ஆனால் கேட்க வல்லேன்" என்று கூறத் தத்துறுவும் நாம் நினைத்தபடி ஆனதென்று மகிழ்ந்து அன்றைக்கு ஒருகதை சொன்னாள். நாளைக்கு இதிலும் அழகிய கதை சொல்லுகிறேன் என்று நித்திரை கொண்டாள். இராசாவும் உறங்கினவன்போல் கதை கேட்டுக் கொண்டிருந்தான். அடுத்த நாளும் கதை கேட்க விரும்பி பிரதான மந்திரியை அழைத்து, இன்றைக்குப் பெண் விசாரிக்கவேண்டாம். நாளையும் நாம் சொன்னால் பெண் விசாரியும் என்று மந்திரிக்கு விடை கொடுத்து அனுப்பினான். அன்றைக்கு இராத்திரியும் மந்திரி மகள் தத்துறு ஒருகதை சொல்லி நாளை இதைவிட அழகிய கதை சொல்லுகிறேன் என்றாள். கதைகேட்ட ராசாவும் மிகுந்த விருப்பம்

கொண்டவனாய் கதைகேட்டு நின்றாள். இவ்வாறு முந்நூற்று அறுபது நாட்களும் மந்திரி மகள் கதை சொல்ல இராசா கதை கேட்கமுடிந்தது.

இவ்வாறு முன்னூற்று அறுபது நாளும் கதைகேட்டு முடித்த பின்பு அசரீரி வாக்கொன்று கேட்டது. "அயிராரோக்கியமும் இஷ்ட ஸ்திரிகாமியுமாய் உடைய இவளையே தேவியாகக் கொண்டு இந்தப்படி இருந்து இராச்சிய பரிபாலனம் பண்ணும் புள்ளாய்" என்று சொல்வது கேட்டு அந்தப்படியே இராச்சிய பரிபாலனம் பண்ணி வந்தான்.

இவ்வாறு இராச்சிய பரிபாலனம் பண்ணும் காலத்து ஒருநாள் தத்துறுவானவள் தானும் இராசாவும் ஏகமாய் இருக்கும் காலத்து, இராசாவின் முகம் பார்த்து, "எனக்கோர் ஆசையுள்ளது. அதை அவசியம் நிறைவேற்றவேண்டும்" என்று கேட்க, அரசனும் அப்படியே நிறைவேற கட்டளை இட்டோம் என்றான். அப்போது தத்துறு, "இராசாவே, நாம் இருவரும் கூடி ஒரு குலாறா வண்டியிலே ஏறிச் சதுரங்க பலத்துடன் வேட்டை மார்க்கம் போய்வரவேண்டும் என்று மனசிலே ஓர் ஆசை தோன்றுகிறது. ஆகையால் அவ்வாசையை நிறைவேற்றவேண்டும்" என்று கேட்க, அப்படியே நம்முடைய மனதிலும் விருப்பம் தோன்றியுள்ளது என்று சொல்லி இராசாவானவர் நம் இருவர் மனதும் ஒருமனதாய் இருத்தல் நன்று என்றுகூறி அந்நேரமே பிரதான மந்திரியை அழைத்து, "நாம் வேட்டை மார்க்கம் போகவேண்டும். இந்தச் சணமே வேட்டைக்காரர் ஆனைவலை, பன்னிவலை, கரடிவலை முதலானதெல்லாம் அழைத்து ஏற்பாடு செய்யும் என்ன," பிரதான மந்திரியும் சதுரங்க சேனையுடன் வேட்டை மார்க்கம் சென்று வெகுவாய் காடுகள், மலைகள், வனாந்தரத்திலே வெகுவாய் வேட்டை ஆடி மூன்றாம் நாள் சாமத்துக்குத் திரும்ப ஏற்பாடு செய்தான். அயவரிய பாலனும், தத்துறுவும் மகிழ்வுடன் குலாறா வண்டியில் ஏறி, வண்டியைச் செலுத்தச் சொல்லி

தேர்பாகனுக்குக் கட்டளை இட்டான். தேர்ப்பாகனும் வண்டியைத் திருப்பிச் செலுத்த முனைந்தபொழுது வண்டியிலிருக்கிற மாடு முன்னங்காலை மடித்து அவக்கிடமாய் விழுந்தது. அப்பொழுது இராசாவும் தேவியும் திக்கென எழுந்திருந்து மாட்டின் நிலை கண்டு வருந்தி மாட்டின் மேலுகள் கால்கள் சகலமும் பிடிப்பித்து, தண்ணீரும், புல் முதலானதும் வரவழைத்து அவற்றின் முன்னே வைத்தவிடத்தும் தண்ணீரும் குடியாமல், புல்லும் தின்னாமல் வெகுவாய் விதனப்பட்டு எழுந்திருக்க மாட்டாமல் நாலு காலும் பரக்க நீட்டி வருந்திக் கிடந்தது.

இராசாவும், தேவியும் இந்நிலைக்கு மிகவும் வருந்தி, இராசா தேவியிடம், "நாம் இருவரும் முதல்முதல் வேட்டை மார்க்கம் வந்த இடத்திலே நம்முடைய எருதுக்கு இப்படி ஒரு நோக்காடு வரலாமோ? என்று மிகவும் வருந்தி காரியப்பேரை அழைத்து இந்த மாட்டை நன்றாகக் கவனித்துப் பாதுகாத்துக் குணப்படுத்தவேண்டும் என்றுகூறி, அதனைப் பாதுகாக்க பல பணியாளரை நிறுத்தி பிரதான எருதை இழக்கின்றோமே என்று மிகவும் வருந்தி, இராசா தன் தேவியுடன் மீண்டும் அரண்மனைக்குப் போனார்.

காட்டில் நோயுற்றுக் கிடந்த எருது மேயவும் செய்யாமல், எழுந்திருக்கவும் இயலாமல் கிடந்த படியினாலே காத்திருந்த பணியாளரும் மனம் சலித்து, எருது மரித்தது என்று சொல்வோம் என்று தங்களுக்குள் முடிவு பண்ணி, ஒரு தூரை வெட்டிச் சுட்டு, அக்கரிக்கட்டையைக் கட்டிக்கொண்டு சென்று ராசா முன் காட்டுவோம் என்று எருதை அப்படியே விட்டுச் சென்றார்கள்.

அவர்கள் போனது அறிந்து அவ்வெருது எழுந்திருந்து புல்லும் மேய்ந்து நீர் குடித்துத் திகட்டிக் கோடை முகில்போல முழங்கிக் கொண்டு, மண்ணைக் குத்தி எக்காளமிட்டு நின்றது. அதனைக் கண்டு அவ்வனங்களில் இருக்கும் மிருகங்கள் கனைத்து அஞ்சி நடுங்கி பூதமோ, பிசாசோ என்று பயந்து ஓடி

சிங்கராசனிடம் அறிவித்தன. சிங்கராசனும் அவர்கள் யார் என்று அறிந்து வாரும் என்று செந்நாய்களை ஏவினான். சிங்கராசனும் மற்ற மிருகங்களும் ஆழ்ந்த ஆலோசனை செய்துகொண்டிருந்தனர். சிங்கராசன் கட்டளையை ஏற்று ஓடிச்சென்று தூர நின்று முழக்கமிடும் எருதினைக் கண்டு பயந்து வந்து சிங்கராசனுக்கு அறிவித்தது. சிங்கராசனும் அதைப் பார்க்கவேண்டும் என்று புறப்பட்டான்.

அப்பொழுது சங்கவதனம் என்னும் பேருடைய நரி, மந்திரியாய் இருப்பவன் சொல்வான். அரசே! பண்டு மிலேச்ச தேசத்துக் கிடந்த பறையை நரித்திரள் கண்டது. அப்பறையில் ஒன்று தன்னிலே முழங்கினது. அதைக்கண்டு ஒரு நரி பிரமித்து இது நிணத்தால் திரண்ட மாமிசமாய் இருக்குமோ? இது யாதென்று காண்போம் என எடுத்துக்கொண்டுபோய் வைத்துப் பீறிப்பார்த்து, அது மாமிசம் அல்லாததை அறிந்து இலஜ்ஜை எய்தியது. அந்நரிபோல பிரமியாதே சிங்கராசனே! பூதமா என்பதறிந்து போகுக என்று சொல்லவும் சிங்கராசன் அம்மந்திரி சொல் கேளாது அவ்வெருதினைக் காணச் சென்றான்.

சிங்கராசன் நந்தகன் என்னும் அவ்வெருதினைக் கண்டு "நீர் எந்த வனம்? எந்தப் பூமி? எந்த தேசத்தினின்று வந்தீர்?" என்று கேட்க, நந்தகன், "நான் சுரபி வங்கிஷத்துக்கு அக்கிறாணனாய் உள்ளேன். நந்தகன் என்பது என் பெயர்" என்று கூறியது. சிங்கராசனும் தன்னைப் பற்றிக்கூற இருவரும் பிரிய முற்று நட்பினராய் இணைந்தனர்.

சிங்கராசனுக்கும் புதிய எருதினுக்கும் ஏற்பட்ட இணைபிரியா நட்பினைக் கண்டு சங்கவதனன் என்னும் பெயருடைய நரி மற்ற மிருகங்களை எல்லாம் அழைத்துக் கூட்டி, "நம்முடைய ராசாவாகிய சிங்கராசன் நந்தகனுடன் கூடி நம்மையெல்லாம் இகழ்ந்து, நம்மை மறந்துவிட்டார். நம் ராசா நந்தகனுடன் கொண்ட நட்பு எது போன்றுள்ளது என்றால் தர்ம சீலனான ராசா ஒருவன் உண்டு. அவன்

போலாச்சு என்று சங்கவதனன் என்னும் நரி மற்ற மிருக ஆதிகளுக்குச் சொல்ல, மற்ற மிருகங்கள் எல்லாம் அது எப்படி என்று கேட்க, அதற்குச் சங்கவதனன் ஒரு உவமை கூறினான்.

**சேர்ந்த இனத்தால் மாறுபட்ட கிளிகள்**
**(பின் வருவதறியான் கெடுவான்)**

வேட்டுவச் சேரியில் கிளி ஒன்று அவ்வேட்டுவர்போல இருந்தது என்று சங்கவதனன் என்னும் நரி சொல்ல, கோமாக்கள் அது எப்படி என்று கேட்க, சங்கவதனன் என்னும் நரி சொல்லியது.

பண்டு மகாதேசத்தை மகேந்திரன் என்றொரு அரசன் ஆண்டுவந்தான். அவன் தன் பகைவர் மேல் போர் கொண்டு சென்றான். அவ்விடத்திலே பகைவர் சொன்ன சொல் கேட்டு. உண்மை என்று நம்பி தன்னுடைய மந்திரிகளை எல்லாம் கொன்று போட்டான். மந்திரிகளை இழந்த பின்பு அவனுக்குத் துணைநிற்க யாரும் இல்லாததால் பெரும் பகை அவனைச் சூழ்ந்து தாக்கி அவன் அரசாட்சியைக் கைப்பற்றிக் கொண்டு அவனை நாட்டை விட்டுத் துரத்தியது. அரசனும் மனம் ஒடிந்து, சதுரங்க பலமும் இழந்து, ஒரு குதிரையின் மேலேறி யாருமில்லா காடு நோக்கிச் சென்றான். வழியில் தாகவிடாயினால் மிகவும் சோர்ந்து, தண்ணீர் தேடி அங்கு கண்ட ஒரு வேடர் குடிலை நோக்கிச் சென்றான். வேடர் குடிலை அடைந்தபொழுது அங்கிருந்த கிளி ஒன்றுஇவனைக் கண்டு, “இங்கே வந்தவன் யார்? இவனைப் பிடியுங்கள்; இவன் மேல் நாயை விடுங்கள்; அது பிடித்துக் கொதறட்டும்” என்று கூறியது. அதைக்கேட்ட அளவில் அரசன் மிகவும் பயந்து கிளியின் வாக்கியமோ இது! வளர்த்த கிளியின் வாக்கே இப்படி என்றால் இதனை வளர்த்த வேடுவர் கண்டால் நமக்கு வாழ்வில்லை என்று மிகவும் அஞ்சி அவ்விடத்தில் நில்லாது விரைந்து சென்றான்.

அவ்வாறு சென்ற வழியில் ஒரு ஆசிரமம் கண்டு, இங்கு சென்றாவது நம் தாகவிடாய் தீர்த்துக்கொள்வோம் என்று அவ்

ஆச்சிரமம் நோக்கிச் சென்றான். அவ்வாச்சிரமத்திலே ஒரு கிளி இருந்தது. அது இவ்வரசனைக் கண்டு "நீர் யார்? அரச குமாரனைப்போல் உள்ளீர், பாலவிடாயத்து இருக்கிறீர்; உனக்கு நேர்ந்த துன்பம் யாது? அதோ அங்கு தெரியும் பொய்கையிலே குளித்துத் தாகவிடாய் தீர்த்து, குதிரைக்கும் தண்ணீர் காட்டி, புறப்பட்டு இங்குள்ள அரச மரத்தடியில் எழுந்தருளி உள்ள கௌதமா மகரிஷியை வணங்கி, உன் துயர் நீக்கி இளைப்பாறிப் போகுக" என்று சொல்ல, இராசா அதன் வாக்கைக் கேட்டு கலீரென்று சிரித்தார்.

ராசாவின் சிரிப்பொலியைக் கேட்ட கிளி ராசாவைப் பார்த்து, "இராசாவே நீர் நகைத்த காரணம் என்ன?" என்று கேட்க, ராசாவும், "வாராய் கிளியே, முன்பு ஒரு கிளி வார்த்தையினைக் கேட்டு அஞ்சினேன். இன்று உன் வாக்கினைக் கேட்டு அதிசயத்தினால் மகிழ்ந்து நகைத்தேன்" என்று சொன்னான். அதைக் கேட்ட கிளி, "வாராய் ராசாவே! அந்தக் கிளிக்கும் எனக்கும் மாதா, பிதா ஒன்றே. நாங்கள் சேர்ந்த இடத்தின் காரணமாக குணமும் வேற்றுமையானது. நிலத்தின் காரணமாக நீர் மாறுபடும். அதுபோல் இனத்தின் காரணமாக மக்கட்குக் குணமும் மாறுபடும் அல்லவா? அது எப்படி எனில் நான் ரிஷிகள் ஆசிரமத்திலே வளர்ந்தேன். அவர்கள் சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்டு பேசி வந்ததாலே இவ்வாறு சன்மார்க்கமாகச் சொன்னேன். அந்தக் கிளி வேட்டுவர் குறிஞ்சியிலே வளர்ந்தபடியாலே அவர்கள் தம் சொல்கேட்டு அவ்வாறு சொல்லியிருக்கும். தாம் சேர்ந்த இனத்தின் காரணமாக குணமும் வேறுபடும் அன்றோ!" என்று கூறியது.

கிளி கூறிய குணசரித்திரம் கேட்டு ராசாவும் உண்மை என்பதுணர்ந்து கிளி கூறியபடி கௌதம மகரிஷியைச் சென்று கண்டு தரிசித்து நின்றான். அவரும் அவனை ஆசீர்வாதம் பண்ணி வெகுமானம் கொடுத்து அனுப்பினார். அப்பொழுது இராசா மகரிஷியை வணங்கி எனக்கொரு விருப்பம் உள்ளது. அதை நிறைவேற்ற வேண்டுமென்று தெண்டனிட்டான்

முனிவரும் அது யாதென்று கேட்க, இந்தக் கிளியையும் என்னுடன் அனுப்பவேண்டும் என்று கேட்டான். ரிஷிகளும் உடன் அழைத்துச் செல்ல கட்டளை தந்தார். அரசனும் மகிழ்ந்து மகரிஷியை வணங்கி அந்தக் கிளியை உடன் அழைத்துச் சென்று மந்திரியாக வைத்துக்கொண்டு ராச்சியம் நடத்தினான். ஆதலால் **முன்னறிந்து நடவாதவன் கெடுவான்.** அது எது போலவென்னில் பகைவர் தம் கொளாவார்த்தையை கேட்டு மந்திரிகளைத் தரித்துப் போட்டு பின் ராசா அடைந்த துயரம் போல வரும் என்று சொல்லியது. மேலும், அனைத்து பரிவாரங்களையும் பார்த்து சங்கவதனன் சொல்வான். வாராய் நண்பர்களே! நம்முடைய ராசாவின் சீற்றத்தையும், நந்தகனின் நட்பினையும் பிரியச் செய்யலாம். என்ன, அதுகேட்ட மற்றும் உள்ள மிருக சாதிகள் சொல்லும், "வாராய் சங்கவதனனே! ராசாவின் சீற்றத்தை நம்மால் விலக்க முடியுமோ? என்ன, அது கேட்டுச் சங்கவதனன் ஒரு கதை சொல்வான்.

**நட்பில் சிறந்த அன்னம் ஆமை கதை**
**(சொன்னபடி கேளார் கெடுவர்)**

பண்டு ஒரு பொய்கையிலே இரண்டு அன்னமும் ஒரு ஆமையும் நட்பினராய் இருந்தனர். சிறிது காலத்திற்குப் பிறகு (விதற்பகாலம்) கோடைக்காலம் வந்தது. பொய்கையும் நீர் வற்றி வறண்டது. இனி இங்கு வாழ இயலா என்பதை உணர்ந்த அன்னங்கள், ஆமையைப் பார்த்து, "நண்பா! எங்களுக்கும் இனி இந்தப் பொய்கையிலே சீவனம் இல்லை. இமவானிலே மனசங்குசி என்னும் பொய்கை உண்டு. அதிலே பல பல நீலோற்பலமும், நெய்தலும் இருக்கும். அங்குபோகிறோம். நீயும் செல்வாயாக" என்ன - ஆமை மிகவும் வருந்தி, "என்னைவிட்டுப் பிரிந்து உங்களைப் போகவும் விடமாட்டேன், உங்களை விட்டுப் பிரியவும் மாட்டேன். அப்படியே பிரிந்தால் மரிப்பேன்" என்றது. "அப்படியானால் நாங்கள் சொல்லும்படி செய்" என்றுகூறி, ஒரு விறகு கோலை நடுவே கவ்வச்சொல்வி, அன்னப்

பட்சிகள் இரண்டும் ஆளுக்கொரு புறம் கோலை பற்றிக் கொண்டு ஆமையைத் தூக்கி வான் மேல் பறந்து சென்றன.

பரிஷிகன் என்றொரு நரி தன்னுடைய துணையாளோடு உண்ண உணவுதேடி திரிந்தது. அது கொட்டாவிப் போக்கி ஏறப் பார்க்கையில் இந்த அன்னப் பட்சிகள் ஆமையைச் சுமந்து போறதைக் கண்டது. தன் துணையாளுக்குக் காட்டி "நாம் விரும்பும் உணவு பாராய்" என்றது. அதுகேட்ட அதன் துணையாட்டி, "நான் பார்க்கமாட்டேன். அதனால் என்ன பிரயோசனம்" என்றது. நரி அதற்கு, "உபாயம் சொல்கிறேன் பார்" என்றது. "பெரிய புத்தியுடையவர், இவர் புத்தியுடைமையை நான் கண்டதில்லையோ" என்று துணையாட்டிகூற, "மகாசனங்களும், மன்னனும் வியக்கும் படியான எனது புத்தியுடைமை காண்" என்றது.

"அன்னங்கள் தன் இனம் இல்லா கீழ்ச்சாதியானதொரு ஆமையைச்சுமந்து கொண்டு போவதை அங்கு பாராய்" என்று இகழ்ச்சியாகக் கூறியது. அதனைக் கேட்ட ஆமை கோபம் கொண்டு, நாங்கள் "பாலமித்து உற்ற நண்பராய் வாழ்ந்தோம். ஆகையால் இவர்கள் என்னைச் சுமக்கிறார்கள். உனக்கு இதனால் வரும் கேடு யாது என்று கேட்க" வாய் திறந்த அளவில் பிடியினின்று நெகிழ்ந்து வீழ்ந்து மாண்டது. நரியும் மிகவும் விருப்பமுடன் தன் துணையாட்டிக்குக் காட்டி மகிழ்ந்து உண்டது.

யார்க்காலும் பெரும் துன்பம் வந்த காலத்து நல்லோர் ஆகுங்காரியங்கள் காட்டி புத்தி கூறுவார்கள். நல்லோர் சொன்னபடி கேளாதவர்கள் கெடுவார்கள். அது எது போல என்னில் அன்னத்தின் வார்த்தையைக் கேளாமல் கெட்ட ஆமை போல நான் சொல்லும் காரியம் கேளீராகில் கெடுவீர் என்ன? சில கோமாக்கள், "நீர் இருக்கவும் உம்மில் புத்தி அறிவுடையார் உண்டோ? மனிதரானாலும் சொன்ன புத்திகேளாதவர்கள் கெடுவார்கள். நீரன்றோ எங்களுக்கு அபய இரட்சகன். எந்த வகையிலாயிலும் உபாயம் பண்ணி

சிங்கராசனையும், நந்தகனையும் பிரியச் செய்யவேண்டும் என்றன. அப்படியே செய்கிறேன் என்று போனது.

அதன்பின்பு சங்கவதனன் என்கிற நரி நந்தகன் பக்கம் சென்று தெண்டனிட்டு, அஞ்சலித்தவனாய் நிற்ப, நந்தகனும் சங்கவதனனைப் பார்த்து, 'உனக்கு வேண்டிய காரியம் என்ன' என்று கேட்க, மாபெருமானே சிங்கராசாவோட சங்கார்த்தம் வேண்டாம். பண்டு ஒரு முகட்டுக்கு இடம் கொடுத்தார்ப் போல அனந்தப்படப் போகிறீர்' என்று சொல்ல, 'அது எப்படி?' என்று நந்தகன் கேட்க, சிங்கவதனன் என்ற நரி சொல்லும்:

சலேவான் என்றொரு ராசா பள்ளிகொள்ளுகிற மெத்தையிலே கிடப்பதொரு அலாடல் என்னும் பேனுடனே சுண்டெலி என்னும் முகடு சொல்வது, 'நீர் ராசாவினுடைய பஞ்சணை சயனத்திலே உறைந்து வாழ்கிறாய், நான் எங்கேனும் சுவரிலே கிடந்து துக்கப்படலாமா? உன்னுடைய அருகிலேயே நானும் சேர்ந்திருக்கிறேன்' என்றது. உன் சரீரம் கோடிகாயிருக்கும் (வளைந்திருக்கும்) ராசாவின் சரீரம் மிகவும் மிருதுவாக இருக்கும். ஆகையால் எப்படி இருக்கிறது. பண்டு நண்டும் கொக்கும் கெட்டாப்போல எனக்கும் கேடு வரும் என்ன, அது எப்படி என்று சுண்டெலி என்னும் முகடு கேட்க அலாடன் என்னும் பேன் செல்லும்.

**நண்டும் கொக்கும் பட்டகதை**
**(பாவம் செய்தவன் கெடுவான்)**

பண்டு மச்ச தேசத்தில் ஒரு தடாகத்தில் அனேக மச்சங்கள் இன்பமாய் வாழ்ந்துவந்தன. இதனைப் பேகம் என்னும் கொக்கு கண்டு இவையெல்லாம் நமக்குச் சில நாட்களுக்கு ஆகாரமாகும். இதனை புத்திசாலித்தனத்தாலே செயிக்கவேண்டும் என்று எண்ணி ஒரு உபாயம் செய்து கரையிலே நின்று அழுதது. இதனை மட்சராசன் என்னும் வாளை கண்டு பயப்பட்டு மச்சங்களை எல்லாம் கரை சேரப் புறப்படச் சொல்லி, மச்சராசன் தானே முதலாக வந்து நீர்

அழுத காரியம் என்ன என்று கேட்க, நீர் எப்பிரதேசத்திலிருந்து எழுந்தருளினீர் என பேகம் என்னும் கொக்கு சொல்லும்.

'நமக்குத் தேசம் வெகுதூரம், தீர்த்தயாத்திரையாகப் புறப்பட்டு வந்தேன். கொல்லா விரதம் கை கொண்டுள்ளேன். பிறர் துக்கத்தை என் துக்கமாக எண்ணி விசாரித்துத் துயர் தீர்த்து வாழ்வேன். ஆதலால் உம்நிலை எண்ணி வருந்தி அழுதேன் என்றது. எங்கட்கு யாதொரு துயரும் இல்லையே. இன்பமாகத்தானே வாழ்கிறோம். எங்களுக்காக நீங்கள் அழுவானேன்' என்று மச்சராசன் கேட்க, ஒரு ராசகுமாரன் வேட்டைக்குப் புறப்பட்டு வந்துகொண்டு உள்ளான். சிசு பாலராய் உற்றார் உறவினருடன் பாசத்துடன் கூடி வாழ்கிறீர். உமக்குத் துன்பம் வரப்போகிறதே. துன்பப்படுவீரே! என்று எண்ணி அழுதேன்' என்றது. அதைக் கேட்ட மச்சராசன், இத்துயரினின்று விடுபட பரிகாரம் ஏதேனும் உண்டோ? என்று கேட்க, கொக்கும் உண்டு, உங்கள் இன பந்துக்களை எல்லாம் இரட்சிக்க தக்கதொரு விசேஷமான பாலாறு ஓடி முடியும் இடத்து ஒரு பொய்கை உண்டு. அதனைச் சென்று சேர்வீரானால் மாதாவினுடைய கர்ப்பத்தில் இருக்கும்படி சுகமாக இருக்கும் என்று சொன்னது.

மட்சராசனும் அதன் வாக்குக்கு உடன்பட்டு அந்தப் பொய்கையை நாங்கள் பார்க்கவேண்டும். ஆகையால் நாங்கள் காண அப்பொய்கையைக் காட்டவேண்டும் என்று கேட்க, கொக்கு உங்களுக்கு நம்பகமான ஒருவரை என்னுடன் அனுப்புங்கள். பொய்கையைக் காட்டி அழைத்து வருகிறேன் என்றது. மச்சங்களெல்லாம் சம்மதித்து இரா என்னும் மச்சத்தைக் கொக்குடன் அனுப்பின. கொக்கும் இரா என்னும் மச்சத்தை நோகாமல் கவ்விக்கொண்டுபோய் ஒருகாலும் நீர்வற்றாத, தாமரையும், நெய்தலும், அல்லியும், ஆம்பலும் படர்ந்து சமுத்திரம் போன்றிருப்பதொரு பொய்கையிலே போகவிட்டுக் காட்ட, இரா என்னும் மச்சம் மகிழ்வுடன் நாலு திக்கும் ஓடிப்பார்த்து கரையேறி வர அதனை நோகாமல் கவ்விக்கொண்டு வந்து மச்ச இனங்கள் முன் விட்டது.

புதுப் பொய்கையைக் கண்ட இரா தன்னுடைய இனப் பந்துக்களைப் பார்த்து, நம்முடைய பந்துசனங்களுக்கு அந்தப் பொய்கையிலே அநேக காலத்திற்குச் சீவனம் பண்ணலாம். ஆகையால் நீங்கள் அனைவரும் அங்கே போங்கள். சுகமாக வாழலாம் என்று சொல்ல மச்சங்களும் இதற்குச் சம்மதித்துப் பேகம் என்னும் கொக்கை அழைத்துப்போகச் சொல்ல, கொக்கும் அப்படியே ஒவ்வொன்றாய் பாறையில் கொண்டு போய் பலனாளும் பிடித்துத் தின்றுகொண்டிருந்தது.

ஒருநாள் அங்கே கிடக்கும் நண்டு ஒன்று இந்தப் பேகம் என்னும் கொக்கைக் கண்டு இதுநாள் நாடோறும் இந்த மச்சங்களைக் கொண்டுபோய் நீரிலே விட்டதோ, ஆகாரம் செய்ததோ என்று அறியவேண்டி என்னையும் கொண்டுபோய் அம்மச்சங்களுடன் விடுவாய் என்ன, கொக்கு மிருள மிருளப் பார்த்தது, நண்டும் மச்சமும் மோற்கூழும் பாற் சோறும் போன்றதாகும். தற்போது மோற்கூழ் உண்டால்தான் பாற்சோற்றைச் சுவைக்கமுடியும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு நண்டைக் கொண்டுபோய் பாறையிலே அடிக்கமுனைந்தது. நண்டு ‘இம்மகாப் பாவியான கொக்கு இப்படி அல்லவா எல்லா மச்சங்களையும் வினியோகம் செய்துள்ளது. நம்மையும் கொல்லாமல் விடாது. ஆதலால் இதனையும் கொன்று, நாமும் செத்தால் மற்ற மச்சங்களாவது (பிராணிகளாவது) பிழைக்கும்’ என்று தனக்குள்ளே எண்ணி கொக்கு தன்னைக் கொல்லும் முன் அதனை நாம் கொல்ல வேண்டும் என்று முனைந்து கொக்கின் கழுத்தைத் திருவினபடியால் கொக்கையும் கொன்று தானும் பட்டது. இப்படி யாதாவதொருவன் செல்லும் செல்லாதென்று பாவத்தைப் பண்ணுகிறவன் கெடுவான். அது என்போல என்னில் நண்டினால் பட்ட கொக்கினைப் போலாகும் என்றது அலாடன் என்னும் பேன்.

தன் புத்தியின் பலத்தால் சாதுரியத்தால் சுண்டெலி என்னும் முகடு பாலமித்து இருவரும் ஒன்றி வாழ்ந்தோம். ஒரு அற்ப ஆனையை நிறைவேற்றக்கூடாதா என்று அன்பொழுகக் கேட்க அலாடன் என்னும் பேன் இடம் கொடுத்தது.

இவ்வாறு சிறிது நாட்கள் கழிந்தன. ஒருநாள் இராசாவினுடைய மிருதுவான திரேகத்தின் சுவையை அறிய வேண்டி ராசாவை நித்திரையிலே கடித்தது. ராசாவும் அப்பொழுதே எழுந்திருந்து பள்ளிப் படுக்கை, பாய் போன்றவற்றைச் சோதிக்கச் செய்ய முகடு ஓடிப்போய் சுவரிலே ஏறிக்கொண்டது. படுக்கையில் இருந்த பேனைக் கண்டு கொன்றார்கள். ஆதலால் பொல்லாதவருடைய நட்பு இப்படியாகும். அறிந்துகொள் என்று நந்தகனிடம் நரி சொல்லிற்று.

பின் நரி சிங்கராசனைக் கண்டு தண்டனிட்டு அஞ்சலித்த வனாய் நின்று, பெருமானே! தேவரீர் நந்தகனுடன் கூடின நாள் முதல் இராச்சிய பரிபாலனம் செய்யாததால் குறைபட்டுள்ளது. இராசாக்கள் வாழும் நிலை கூறுகிறேன் கேளும் என்றது.

**எளியாரை வலியார் அழிக்கலாமா ?**

பண்டொரு காலத்து சில செட்டிகள் ஒட்டகங்களைக் கடலோடங்களாகக் கொண்டு சரக்கேற்றி மறு மண்டலத் திற்குச் சென்று விற்று வருவார்கள். அப்படி ஒருநாள் சில செட்டிகள் விலையுயர்ந்த சரக்கேற்றி செல்லுங்காலத்து அவர்களை, கள்ளர், மறவர் வழியிடை மறித்து பொருட்களை எல்லாம் பறித்துக்கொண்டு செட்டிகளைக் கொன்று போட்டுச் சென்றனர். அக்கலத்திலே சரக்கேற்றி நின்ற ஒட்டகம் ஒன்று தன் சரக்கையெல்லாம் தள்ளிப்போட்டு விட்டு சுதந்திரமாக வனத்திலே திரியும் கோமாக்களுடன் கூடித் திரிந்தது. புதிதாக தங்களுடன் திரியும் ஒட்டகத்தைக் கண்ட கோமாக்கள் ஒட்டகத்திடம், "நீர் எங்கள் ராசாவாகிய சிங்கராசனைக் கண்டு பின் அவர் அறிக்கையில் திரியவேண்டும்" என்று கூறின.

ஒட்டகமும் அதற்கு இசைந்து, "உங்கள் ராசாவை நான் அறிவதெப்படி" என்று வினவ, சசனந்தகன் என்றொரு நரியும், சிந்துகன் என்றொரு காகமும் அவர்களுக்கு மந்திரியாய்

இருப்பார்கள். அவர்கள் துணையுடன் சென்று காணவேண்டும் என்று சொல்ல, ஒட்டகமும் அம்மந்திரிகளுடனே சென்று சிங்கராசனைக் கண்டு வணங்கி அவர் அறிக்கையிலே வாழ்ந்து வந்தன.

இவ்வாறு இருக்கையில் ஒருநாள் சிங்கராசனுக்கு உணவாகிய மாமிசம் எங்கு தேடியும் கிடைக்கப் பெறாமல் பட்டினியாய் கிடந்தது. அப்போது சிந்துகன் என்ற மந்திரி நம்மிடம் அடைக்கலமாக வந்த ஒட்டகத்தை உணவாகக் கொள்ளலாம் என்று இராசாவிடம் சொல்லியது. இராசா அதற்கு ஒப்பவில்லை. நல்லதோர் உபாயத்தாலாவது, பலத்தாலாவது நம்மிடம் புகலிடம் தேடிவந்துள்ள ஒட்டகத்தை இன்றைய பசிக்கு உணவாக்கிக் கொள்வோம். அதன்பின் வரும் தோஷத்திற்குப் பிராயச்சித்தம் பண்ணிக் கொள்ளலாம். ஒட்டகத்தினை அடித்துத் தின்னும் என்றுகூற, நீர் என்ன கருதி இதனைக் கூறுகிறீர், எளியவரை, வலியார் அழிக்கமுயன்று தோற்ற கதையைக் கேளும் என்று சிந்தகனுக்குச் சிங்கராசன் சொல்வான்.

**பத்தா சொல்மீறா பதிவிரதை சிட்டுக்குருவி**

முன்பு சமுத்திரக் கரையிலே சிசிலிகன் உத்திரபாதன் என்பதொரு குருவி வாழ்ந்துவந்தது. அதன் பேடாகிய பிறதவதிக்குச் சூதகாலமானதாலே 'நான் முட்டை இடுவது எங்கே' என்று தன் பத்தாவைக் கேட்க, 'இங்கே முட்டை இடு' என்று சமுத்திரக் கரையைக் காட்டியது. 'இங்கே முட்டை இட்டால் சமுத்திரங் கொள்ளாதோ' என்று பிறதவதி தன் பத்தாவைக் கேட்க, 'அஞ்சாதே! சமுத்திர ராசன் கொள்ளாதிருக்குமோ? நீ இவ்விடத்தில்தான் முட்டை இடவேண்டும் என்று கூறிற்று. தன் பத்தாவின் சொல்லை மறுக்க இயலாமல் பிறதவதியும் அங்கேயே முட்டை இட்டது. சமுத்திர ராசன் இக்குருவிகளின் உரைகேட்டு, 'இது என்ன பலன் கொண்டு இவ்வாறு சொன்னது. இதை அறிய வேண்டும்' என்று ஒரு பெரும் திரையெழுப்பி முட்டையை

எடுத்துப் பொய்த்தலமாய் வைத்தது. இதைக் கண்டு பிறதவதி தன் பத்தாவின் காலிலே விழுந்து பிரலாபிக்க, சச்சிலிகன் அஞ்சாதே நான் உன் முட்டையை அழைப்பிக்கிறேன்.

## வேடன் குரங்கிடம் அடைக்கலம்

அப்படி இல்லையாகில் பாவகாரி என்னும் வேடன் வேட்டைக்குச் சென்றான். அங்கே அவனை ஒரு புலி துரத்தியது. அஞ்சி ஓடிய அவன் ஒரு விருட்சத்திலே ஏறினான். அங்கே இருந்த ஒரு பெண் குரங்கு இவனைப் பார்த்து 'அஞ்சாதே !' என்றுகூறி அவனுக்கு அடைக்கலம் கொடுத்து வேடனை மடியில் தூங்கச் சொல்லி வைத்திருந்தது. புலி கீழே நின்று குரங்கைப் பார்த்து, 'நீயும் நம் இனம் ஒழித்து வேறல்ல. அவனோ மனிதன். மனிதர் செய்நன்றி அறியார்கள். இவனைக் கீழே தள்ளு, உனக்கு இந்த உபகாரத்திற்குப் பிரதி உபகாரம் பண்ணுகிறேன்' என்று கூறியது. அப்போது குரங்கு மனுஷர் செய்நன்றி அறியாதபடி சொல் என்ன, புலி சொல்வது.

## பிராமணனும் அவன் யாத்திரையும்

பண்டு ஒரு தூரிலே விழுந்தவர்கள் மேல் ஏற இயலாமல் தூரினுள் கிடந்து துன்புற்றார்கள். அவ்வழியே யாத்திரை சென்ற பிராமணன் ஒருவன் தாகவிடாய் கொண்டவனாய் நீர் மொள்ள கமண்டலத்துப் பாத்திரத்திலே தாம்பைக் கட்டி தூரினுள் விடுத்துத் தண்ணீர் மொள்கையில் அந்தத் தாம்பைப் பற்றிக்கொண்டு ஒரு குரங்கு தூரினின்று ஏறி வந்து பிராமணனை நமஸ்கரித்து, 'உன்னாலே பிழைத்தேன். இன்னமும் சிலபேர் இத்தூரினுள் கிடக்கிறார்கள். அவர்கள் யாரை எடுத்துவிட்டாலும் தட்டானை மட்டும் எடுத்து விடாதே, மீண்டும் நீ திரும்பி வரும்பொழுது என் இருப்பிடத்திற்கு எழுந்தருளி என்னையும் விசாரித்துச் செல்லவேண்டும் என்றுகூறி தானிருக்கும் அடவியும் சொல்லி அவனை அழைத்துவிட்டுச் சென்றது.

அடுத்து, அதனுள்ளிருந்த புலியை எடுத்துவிட அதுவும் வந்து பிராமணனை நமஸ்கரித்து, 'உம்மாலே பிழைத்தேன். உன் அரிய உபகாரத்திற்குப் பிரதி உபகாரம் என்ன செய்யப் போகிறேன்' என்று உபகாரமொழி பல சொல்லி இன்னும் சிலபேர் இருக்கிறார்கள். அவர்களில் தட்டானை ஒழிய மற்றபேரை எடுத்துவிடு. மீண்டும் வரும்பொழுது நான் இருக்கிற மலை முழஞ்சுக்கு ஏறிவந்து என்னை விசாரித்துப் போகவேண்டும் என்று அடையாளமும் சொல்லி அவனை அழைப்பித்துவிட்டுச் சென்றது.

அடுத்து அதுக்குள்ளிருக்கிற பாம்பை எடுத்துவிட அதுவும், அந்த பிராமணனை நமஸ்கரித்துச் சொல்லும், தட்டான் இருக்கிறான் அவனை எடாதே என்று சொல்லி, என்னால் உனக்குச் செய்யத்தக்க உபகாரம் என்ன இருக்கிறது. ஆனாலும் உனக்கு ஆபத்துக் காலம் வந்தநேரத்தில் என்னை நினையும் என்றுகூறி விடை பெற்றுக்கொண்டு சென்றது.

பிராமணன் விசாரப்பட்டு நம்மினம் இல்லாத மிருக சாதிகளைக் கரையேறவிட்டோம். அறிவுடைத்தாய் இருக்கப்பட்ட மனுஷனை ஏறவிடாதிருத்தல் தர்மமல்ல என்று எண்ணித் தட்டானையும் ஏறவிட்டான். அவனும் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, 'தேவரீர், தீர்த்தயாத்திரை போய் திரும்பி வரும்பொழுது அடியேனுடைய கிரகத்திற்கு எழுந்தருளவேண்டும் என்று தன்னுடைய தேசமும் ஊரும் பேரும் சொல்லி அவனை அழைப்பித்துவிட்டு விடை பெற்றுக்கொண்டு போனான்.

பிராமணன் தீர்த்தயாத்திரை போய் மீண்டு வரும் பொழுது இவ்வனத்திலே சில பிராணிகளைத் தூரிலிருந்து ஏற உதவி செய்ததற்கு அவர்கள் செய்கிற நன்றியை அறிய வேண்டும்மென்று குரங்கினுடைய தேசம் செல்ல அதுவும் பிராமணனைக் கண்டு எதிர்சென்று சாஷ்டாங்கமாகத் தெண்டன்பண்ணி குரங்கினாற் செய்யத்தக்க பிரதி உபகாரம், உண்டோ? அன்று காட்டிலுள்ள பதார்த்த தேனும், கனியும்

கொண்டுவந்து கொடுத்து பிரிய வசனஞ்சொல்லி பிராமணனை மகிழ்வித்தது. குரங்கின் உபசரிப்பில் மகிழ்ந்த பிராமணன் குரங்கை அனுப்பிவிட்டு புலியிடம் சென்றான்.

புலியும் அவனை எதிர்கொண்டு நமஸ்கரித்து தானிருக்கும் முழைஞ்சுக்கு அழைத்துப்போய் முன்னாள் காட்டிலே தன்னால் கொல்லப்பட்ட இராசாக்களுடைய திவ்விய ஆபரணங்களை எடுத்துவைத்திருந்தது. அந்த ஆபரணங்களைக் கொடுத்து அனுப்பியது. பிராமணனும் மனங்களித்தவனாய் தட்டானிடத்தே சென்றான். அவனும் பிராமணன் வருகையைக் கண்டு எதிர்சென்று தெண்டனிடு கிறேன் என வணங்கி தன்னகம் அழைத்துக்கொண்டுபோய் ஆசனம் தந்து மகிழ்வித்தான். பிராமணனிடமுள்ள ஆபரணங்களையெல்லாம் ஒன்றாய் உருக்கித் தந்து அனுப்புகிறேன் என்று அவனைத் தங்கவைத்தான். ஆபரணங்கள் அனைத்தையும் அபகரித்துக்கொள்ள மனதிலே திட்டமிட்டான். அவ்வாபரணங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு ராசாவிடம் சென்று முன்பு ராசாவினுடைய அரண்மனையிலே காணாமல்போன ஆபரணத்திற்கு ஈடாக இதிலே உள்ளது என்றால் இப்பொருள்களைக் கண்டு அரசன் பிராமணனை ஆக்கினையிடுவான். நமக்குத்துன்பமொன்றும் வாரா என்று சொல்லிக்கொண்டு இராசாவினுடைய அரண்மனைக்குச் சென்றான். அரசனைக் கண்டு, தேவரீர் அவர்களுக்கு அடியேனுடைய தகப்பன் பண்ணின ஆபரணங்கள் களவு போயிற்று அதனை வாங்கி வந்துள்ளேன் என்று பிராமணனிடமிருந்து பெற்ற ஆபரணங்களைக் காட்ட, அரசன் அவ்வாபரணங்களைக் கண்டு இதை வைத்திருந்த கள்ளனை அழைத்துக்கொண்டுவருக என்ன, அரசனின் பணியாளர்களை அழைத்துக் கொண்டுபோய் பிராமணன் பக்கல் சென்று, ராசா தேவரீரைத் தெரிந்துகொள்ளவேண்டும் எழுந்தருள், என்று அழைத்துக்கொண்டுபோய் இராசாவின் முன்னேவிட, இராசாவும் பிராமணனைப் பார்த்து, “நீ எத்தேசத்தீர்? எங்கிருந்து இதனைப் பெற்றாய்?” என்று கேட்க, பிராமணனும் மிகவும் வருந்தி புலி தந்தது என்றால்

நம்பார்கள். நாமென்ன சொல்லப்போகிறோம் என்று வாய் திறவாமல் துக்கித்து நின்றான். ஆகையால் இவனைக் கள்ளன் என்று கட்டி ஊரைச் சுற்றி இழுத்து அடிப்பித்துத் தலையாரி கையிலே ஒப்புவித்து விலங்கிட்டுச் சிறையிலே வைத்தார்கள்.

அப்போது பிராமணன் மிகவும் வருந்தி மிருக சாதிகள் கூறிய புத்தியைக் கேளாமல் தட்டானை யேறவிட்ட பாபம் இப்படிப் பலித்தது என்று விசாரமிட்டு அன்று கரையேற விட்ட பாம்பு ஆபத்துக் காலம் வந்தபொழுது நினை என்றதே அதன் வாக்கை அறிவோம் என்று பிராமணன் பாம்பை நினைத்தான்.

அந்தப் பாம்பு அவ்வூரில் அம்பலத்தில் இருக்கும் பாம்பு. அது இச்செய்திகேட்டு இந்தப் பிராமணனுக்கு உபகாரம் செய்யவேண்டும் என்று எண்ணி அந்த ராசாவின் குமாரத்தி கன்னிகா மாடத்தில் இருக்கிறவளைப்போய் கடித்தது.

இந்தச்செய்தி கேட்டு ராசா விஷகாரியரை அழைத்து மீட்பிக்கச் செய்ய விஷம் மீளாதிருந்தபடியாலே இராசா மிகவும் வருந்த, "இந்த விஷம் மீட்ட பேருக்கு அர்த்த ராசியமும் கொடுத்து அந்தப் பெண்ணையும் அவனுக்கு மணம் முடித்துவைப்பேன்" என்று பட்டணமெங்கும் பறை அறிவித்தான். ஒருவராலும் மீளாதிருப்பதைக் கண்ட பாம்பு "தானே ஒருவர் பேரிலே ஏறி காவல் வீட்டிலே விலங்கிலே கிடக்கிற பிராமணன் மீட்க மீளுவேன்" என்றது. அதைக் கேட்ட அரசன் அந்தப் பிராமணனை சிறைவிட்டு அழைப்பித்து இந்த விஷத்தை மீளும் என்ன, பிராமணனும் தன்னுடைய வேதத்தால் விஷதேவதையை அனுஷ்டானம் பண்ணி தான் உபகாரம் பண்ணின பாம்பையும் நினைத்து செபம் பண்ணினான். பாம்பு இராசக் கன்னியின் விஷம் தீர்த்து, நீ முன் எனக்குச் செய்த உபகாரத்திற்குப் பிரதி உபகாரம் செய்தேன் என்றுகூறி விடை பெற்றுக்கொண்டு

போனது. அதுகண்டு அந்த ராசாவும் மகிழ்ந்து அந்தப் பிராமணனுக்கு ராச்சியம் கொடுத்து, அந்தப் பெண்ணையும் அவனுக்குக் கல்யாணம் பண்ணிவைத்தான். அந்தப் பிராமணனைப் பார்த்து தலைநாள் முதல் நடந்தபடி யெல்லாம் சொல்லுமென்று கேட்க, பிராமணனும் முன்னாள் நடந்தனவெல்லாம் ராசாவுக்கு ஒன்றொழியாது சொல்ல, அதனைக் கேட்ட ராசாவும் தட்டான் வசத்திலே இருந்த ஆபரணங்களை அழைப்பித்துக் கொடுத்து தட்டானையும் ஆபரண விஷயமாக ஆக்கினை இட்டான். பிராமணனும் மனுஷரால் செய்நன்றி இல்லை. மிருக சாதிகளால் செய்நன்றி பெற்றோம் என்று நினைத்து இராசபோகம் அனுபவித்துக்கொண்டு இருந்தான். ஆதலால் மனுஷரால் அபசதிப்பட்ட பிராமணன் சர்ப்பத்தினால் பிரதி உபகாரம் பெற்றான்.

ஆதலால் மனுஷர் செய்நன்றியறியார்கள். நீ இவனைத் தள்ளிவிடு என்ன, குரங்கு புலியைப் பார்த்து, என்னை அடைந்த வேடனை விடுவதில்லை. புலிகளோடு உறவும் இல்லை என்ன, அது எங்கனே என்று புலிகேட்கக் குரங்கு சொல்லும்.

**துச்சனருக்கு உபகாரம் செய்பவர் கெடுவர்**

பண்டு தட்சண மதுரையிலே ஒரு பிராமணன் தேசாந்தரம் போய் சகல வித்தையும் கற்று தீர்த்தங்களும் ஆடி வாரா நின்றான். வழியிலே ஒரு புலி விஷம் தீண்டப்பட்டு கிடப்பது கண்டு, பிராமணன் அந்தப் புலிக்கு விஷம் மீட்டான். விஷம் மீட்ட புலியும் எழுந்திருந்து அந்தப் பிராமணனைத் தானே பட்சித்துப் போட்டுப் போனது. ஆகையால் யார்க்காகிலும் முன்பின் அறியார்க்குச் செய்யும் பாக்கியம் நன்றியறிய ஒவ்வாது. துர்ச்சனருக்கு உபகாரம் செய்தவன் கெடுவான். அது எதுபோல எனில் புலிக்கு விஷம் தீர்த்த பிராமணனைப் போன்றது. அதனால் புலி செய்நன்றி அறியாது. புலிக்கு உபகாரம் உண்டோ? என்று குரங்கு சொல்லியது.

வேடனும் குரங்கின் மடியிலிருந்து எழுந்திருந்தான். குரங்கு வேடனைப் பார்த்து எனக்கு நித்திரை வருகிறது. புலி உன்னை வேறுவகையிலே பேதலிக்கவைக்கும். அதுகேட்டு விஷசாதகம் பண்ணாதே என்று சொல்லி ,வேடன் மடியிலே குரங்கு தூங்கியது. அவ்வளவிலே ஒரு நரி வந்து எம்பெருமானே! இங்கு எழுந்தருளின விவரம் எது? என்ன, இந்தக் குரங்கிற்கும் எனக்கும் மித்துரு பாந்தகமான படியினாலே வந்தேன் என்று புலி சொல்லக் கேட்டு நரி சொல்வது.

**தூக்கணாங் குருவியும், குரங்கும்**

முன்பு ஒரு குரங்கும் குஞ்சுகமுக்கி என்பதொரு தூக்கணாங்குருவியும் மித்ருபாந்தராய் இருந்தார்கள். ஒருநாள் பெரும் மழைக்காலம். தூக்கணாங்குருவி மின்மினியை விளக்கமாகக் கொண்டு தன் கூட்டினுள் இருந்தது. மின்மினியைப் பார்த்து கையும் காலும் உடைத்தாய் பலவானாய் இருக்கும் என் தோழனான குரங்கு. இம்மழை சீத வாதப்படாமல் இருக்க ஒரு கூடு கட்டமாட்டாமல் நனைகிறது என்று எனக்கு மனஸ்தாபமாய் இருக்கிறது. வேறொரு மனஸ்தாபம் எனக்கு இல்லை என்று மின்மினியிடம் கூறி வருத்தப்பட்டது.

அதுகேட்டு குரங்கு, இது என்னிலும் பலவானோ? எங்கள் வங்கிஷத்தாருக்கு அடுத்தப்படியே ஒழிய எங்கட்கு ஈடாகுமோ? எங்கள் தலைவரான பேர்கள் முடைபடக் கூடு கட்டியிருந்தார்களோ நான் கூடு கட்டி நனையாமலிருக்க, கூடு கட்ட அறியாமையால் மழையிலே நனைந்தேனாகச் சொன்னாய் என்று கோபித்துக்கொண்டு குருவியின் கூட்டைப் பிய்த்துப்போட்டது. இதுகண்டு மின்மினியிடன் குருவி சொல்வது, ***மூர்க்கருக்குக் காரியம் சொன்னார் கெடுவார்*** அது எதுபோல எனில் குரங்குக்கு நன்றி சொல்ல விரும்பி குடி இழந்தார் போல் உழந்தாரென்று சொல்லி பின்னும் சொல்லும்.

**குரங்கை வளர்த்து அறிவு புகட்டிய கதை**

நரி மகேந்திரம் என்னும் நகரிலே மகேந்திர ராசன் என்பான் ஒரு குரங்கை வளர்த்து அதற்கு அறிவு கற்பித்துத் தனக்கு மித்ருவாகக் கொண்டிருந்தான். ஒருநாள் வேட்டைக்குப்போன இடத்து ஒரு விருட்சத்தின் கீழே இருந்து தன்னுடைய கையில் இருந்த மந்திர வாளை குரங்கின் கையிலே கொடுத்து "தம்மேல் சத்ருவராமல் காத்துக் கொண்டிரும்" என்றுகூறி உறங்கினான். ராசாவின் மேலே வசந்தமாலை என்பதொரு வண்டு வந்திருக்கவும் தன்னைச் சுற்றும் என்றறியாது வண்டு வந்து மொய்க்கலாகாதென்று தன் கையில் இருந்த வாளை விட்டெறிந்தது. மந்திரவாள் பட்டு இராசா இறந்தான். ஆகையால் குரங்கோட உறவு உண்டோ? என்று நரி சொல்லிப் போனது.

அதன் பின்பு புலி வேடனைப் பார்த்து உன் மடியிலே கிடக்கிற குரங்கைத் தள்ளிவிடு உன்னை விடுவிக்கிறேன் என்று சொல்லியது. அதற்கு ஒப்பி நன்றியறியா வேடன் குரங்கை தள்ளிவிட்டான். குரங்கு கீழே வந்து விழுந்தது. விழுந்த அளவிலே புலிவந்து பிடித்துக்கொண்டு கொல்ல முனைந்தது. அதைக்கண்டு குரங்கு நகைத்தது. புலி, நீ சாகும் நிலையில் என் கையில் அகப்பட்டிருந்தும் நகைப்பானேன்? என்று கேட்டது. அதற்கு குரங்கு வாராய் புலியே! நீ என்னிலும் பலவானாய் இருந்தும் என்னைப் பிடிக்க இத்தனை ஆர்ப்பாட்டம் வேண்டுமோ? இம்மட்டோ புலிகளின் பலன் என்று சொல்ல அதைக் கேட்டு புலி மலைத்து பிடி நழுவ பார்த்து நின்றது. புலி அசரும் தருணம் பார்த்துக் குரங்குகொம்பைப் பார்த்து தாண்டிப் பிடித்து உசர ஏறி வேடனை அடைந்தது. வேடன் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து, தானும் நித்திரையிலே பிரண்டு விழுந்ததாய் எண்ணியது. யாவன் ஒருவனுக்கும் பிராண விபத்து வந்தாலும் குழம்பாதே விசாரித்தே தப்பவேண்டும். அது எதுபோல என்னில் புலியின் வாய் அகப்பட்ட குரங்கு, உபாயத்தாலே பிழைத்ததுபோல என்றவாறு.

அவ்வளவிலே வேடனும் மெத்தவும் பயந்து ஒடுங்கி போயிருந்தான். அவனைக் குரங்கு பார்த்து, "நீ அஞ்சாதே, உன்மேல் குறையில்லை. நான் தூங்கி தடுமாறி விழுந்தேன்" என்றுகூறி அவனைத் தேற்றியது. புலியும் இனி நாம் காத்திருப்பதில் பிரயோசனம் இல்லை என்று புறப்பட்டு போனது.

புலி போன பின்பு குரங்கு வேடனைப் பார்த்து, "நீ என் குட்டியை வைத்துக்கொண்டிரு நான் போய் காய், பழம் ஆதிகள் கொண்டுவருகிறேன். நீ மெத்த களைப்பிலே இருக்கிறாய்" என்றுகூறி அவனிடம் குட்டியைக் கொடுத்து விட்டு நெடுந்தொலை சென்று காயும் கனியும் பறித்துவரும் அளவில் வேடன் நெருப்பை வளர்த்து குட்டியினைச் சுட்டு தின்று புறப்பட்டுப்போக ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது குரங்கு நல்ல காய் கனிகளும், தேனும் தாமரையிலையிலே தண்ணீரும் கொண்டுவந்து வேடனைப் பசி தீர்த்து தன் குட்டிகளைத் தேடியது. காணாதபடியால் இவன் பசியின் கொடுமையால் குட்டியைத் தின்றிப்பான் என்று மனதிலே எண்ணி, வேடனைப் பார்த்து பயப்படாதே "உன்னிலும் சிறியரோ எம் மக்கள். உனை ஒன்றும் செய்யமாட்டேன்" என்றுகூறி அவன் பயம் தேற்றியது.

பின் உன்னுடைய ஊருக்குப் போகையில் வழியிலே புலி உன்னைத் தொடராமல் இருக்க நான் துணையாகக் கூட வருகிறேன். நீ பயப்படாதே என்று அவனை அழைத்துக் கொண்டு காடும் செடியும் கொடியும் கடக்கவிட்டு மீண்டது. வேடன் நாம் நேற்றே மீண்டோம் இல்லை. வெறுங்கையுடன் ஊருக்குப் போகலாமோ என்று குரங்கை முள் கம்பியாலே கொன்று உரித்து தோலெடுத்துக் கொண்டு போகும் அளவில் புலி எதிரே வந்து வேடனைப் பிடித்துக்கொண்டது. வேடனும் நடுநடுங்கி நின்றான். அவனைப்பார்த்து புலி சொல்லியது செம்மாக்களைக் கொன்றாரையும் செய்ந்நன்றி குன்றினாரையும், பஞ்சபாதகம் பண்ணினாரையும் தீண்டவும் பார்க்கவும் தின்னவும் கூடாது. தோஷம் என்று புராண வேதங்களிலே எழுதப்பட்டுள்ளது. ஆகையால் உன்னைத்

தின்னேன். உன் முகத்திலேகூட விழிக்கக் கூடாது. நீ போ. போய்விடு என்று புலி அவனை விரட்டி விட்டுச் சென்றது.

அந்த நன்றியறியாத வேடனைப்போல உன் முட்டையை நான் வாங்கித் தந்திலேனாகில் கொடுமையாளனாவேன் என்று உத்திரபாதன் தன் பாரியாளுக்குக்கூறியது.

காட்டில் ஒரு யானை மாலியான் என்றுபேர் உடைத்தாய் மதப்பட்டு மலைகளையும் சிகரங்களையும், சுனைகளையும் உடைத்து, மகா விருட்சங்களையும் மிதித்தும் அழித்தும் அதமிதி ஆக்கி பிரளய காலம் போலவும் யூகாந்த காலம் போலவும் ஆக்கிற்று. அப்போது பயபக்தியினால் பட்சி ஜாதிகளெல்லாம் திரண்டு வெகுஜனங்களாகக் கூடி இருந்த இடத்திலே உத்திரபாதனும் தன் பாரியாளுடனே சென்று பட்சிகளை நோக்கி, அடைக்கலம் புகுந்தேன் என்றுகூறி சரணம் பண்ணி தங்களுடைய வாரிசாகிய முட்டைகளை இழந்தமையும் சொல்லி, நீங்கள் மீட்டு தந்திலிராகில் உங்கள் முன்னே என் பிராணனை ஒழிவேன் என்று கூறியது. உத்திரபாதன் கூறிய செய்திகளைக் கேட்ட பட்சி ஜாதிகளெல்லாம், சபையாகக் கூடி இருந்த இடத்திலே முறையிட்டதை விசாரியாமல் இருக்கலாமோ? உத்திரபாதன் தன் பாரியாளுக்குச் சொன்ன பிரதிக்கையும், சமுத்திரராசன் பண்ணின மிகையும் நாம் விசாரியாத பொழுது நம்முடைய பட்சி ஜாதிகளுக்கு மதிப்பில்லை. பட்சி ஜாதிகளெல்லாம் மலைகளிடத்தும், விருட்சங்களிடத்தும், சமுத்திரங் களிடத்தும் அல்லோ சஞ்சரிக்கும். இப்படி அவை வாழும் இடங்களே அபகரிக்குமாகில் பட்சி ஜாதிகளுக்கு நிலை ஏது? என்று சாபங்கன் என்ற பட்சி கூறியது. பின் சக்கரவாளம், சாதகம், கேயபங்கம், சேலசாதி, சீரலகமை, கண்டனன் முதலாகிய பட்சிகளையெல்லாம் விசாரித்துக் கொண்டு நம்முடைய பட்சி ஜாதிகளுக்குத் தலைவனாய், இராசாவாய் இருந்துள்ள கருடபகவானை சரணம் பண்ணி நாம் அனைவரும் பிராயச்சித்தம் வேண்டுவோம் என்று பட்சிகளெல்லாம் தன் தலைவனை எண்ணி அபயகுரல் எழுப்பின.

அப்பொழுது ஸ்ரீமன் நாராயணன் சன்னதியிலே நமஸ்கரித்து நிற்கின்ற கருடபகவான் தன்னுடைய வங்கிஷத்தினங்கள் அபயகுரல் எழுப்பியதைத் தனது நன்ஞானத்தால் அறிந்து மனோவேகத்துனே விரைந்து மனமருளி அபயம் கொடுத்தது. உங்களுக்கு ஏற்பட்ட விதனம் ஏது? என்று அருளிச் செய்ய பட்சி சாதிகளெல்லாம் பணிந்து புகழ்ந்து எம்பெருமானே! இந்த உத்திரபாதனன் பாரி இட்ட முட்டைகளையும் குடிலையும் சமுத்திரராசன் கொண்டு போனான். மீண்டும் கொடுக்காதபோது எங்களுக்கு நிலை ஏது? என்று விண்ணப்பம் செய்தன. கருடபகவானும் அப்படியே தருவிக்கிறோம் என்று அருளிச்செய்து அன்று இராத்திரியேபோய் ஸ்ரீமந்நாராயணன் சன்னதியை அடைந்து அவரை நமஸ்கரித்து, அடியேனுடைய வங்கிஷத்தார்க்குச் சமுத்திரராசன் பண்ணின பங்கம் ஈது என்று விண்ணபஞ் செய்தது. தேவரீருடைய ஸ்ரீபாதம் தாங்கப்பெறும் அடியேனுடைய வங்கிஷத்தார் ஈனப்படலாமோ என்று பலகாலும் விண்ணப்பம் செய்தது. அதனைக் கேட்ட ஸ்ரீமந்நாராயணன், சமுத்திரராசனை அழை ப்பித்து உத்தரபாதன் ஸ்ரீ இட்ட முட்டையையும் குடிலையும் சிறிதும் அலட்சியம் செய்யாது கொடுத்து, பட்சி சாதிகளுடன் பாசமாய் நட, என்று அருளிச் செய்ய, சமுத்திரராசனும் பயந்து அப்படியே செய்வேன் என்று விடைகொண்டு, கருட பகவானும், பட்சி ஜாதிகளும் கூடி இருக்கும் இடத்துக்கு வந்து, கருடபகவான் முன்பாக உத்தரபாதனுடைய முட்டையையும் குடிலையும் கொடுத்து என்னுடைய அற்பப்புத்தியைப் பொறுத்துக்கொள்ளுங்கள் என்று சமுத்திரராசன் வணங்கி நின்றான். கருடபகவானும் சமுத்திர ராசனுக்கு பிரியவசனம் சொல்லி அனுப்பிவிட்டு பட்சி சாதிகளையும் அவரவர்கள் இடத்திலேபோக விடை கொடுத்து கருடப்பகவான் ஸ்ரீமந்நாராயணனிடம் எழுந்தருளினான். ஆகையால் "எளியாரை வலியார் வதம் பண்ணினால் வலியார்க்கு வெல்ல முடியாத காரியம் விளைந்துவிடும்" என்று சிங்கராசன் சொல்ல சிந்துகன் என்னும் மந்திரி சொல்வது.

சிங்கராாசன் கேளாராயின் இனி நாம் ஒட்டகத்தைக் கொண்டு சொல்லவைப்போம் என்று போய் ஒட்டகத்தைக் கண்டு ராசா பட்டினி இருக்க உனக்குச் சம்மதமோ? நீர் இராசாவை விசாரிக்க வேண்டும் என்று சொல்ல, ஒட்டகமும் சம்மதித்துச் சிங்கராசன் பக்கம் சென்று தேவரீர் பசி தீராததென்ன? இன்றைக்கு என்னை ஆகாரம் பண்ணிக் கொள்ளுங்கள் என்றலும், சிங்கராசன் உன்னைக் கொன்று தின்பதிலும் பட்டினியே நன்று என்றது. அப்பொழுது சந்துகனும், சிந்துகனும் இன்றைக்கு எங்கள் இருவரையும் புசித்துப் பசியாறும் என்றுகூற அதற்குச் சிங்கராசா, வாராய் சிந்துகனே, சந்துகனே! ராசாவானவன் மந்திரிகளைக் கொன்று தின்றான் என்ற அபகீர்த்தி என் வங்கிஷத்தாருக்கு ஈனமாம். அது தன்னிலும் ராசாக்கள் நரி மாமிசமும், காக்கை மாமிசமும் உண்ணார் என்று பட்டினி கிடந்தது. விகடன் என்ற ஒட்டகம் என்னைக் கொன்று தின்னாமல் பட்டினியாய்க் கிடந்து சாவது எதன் பொருட்டு என்று கேட்க, ராசா, உன்னைத் தின்னப்பொறா, தின்றால் பாவதோஷமாகும் என்று நீ அறிந்ததில்லையோ? ஆகையால் இதற்கு நான் உடன்படேன் என்றது. இவ்வாறு இராசா கூறக்கேட்ட விகடனும் இன்னாள் வரையும் தேவரீரிடம் சார்ந்து சுகம் அனுபவித்தேன். இவ்விடம் இருந்தும் தேவரீருக்கு உயிர் கொடுக்கும் மாமிசமன்றி இருக்கிற இடுக்கண் கண்டு என்னுயிர் வைத்திருந்து வாழேன். என் வசனம் மறந்தீராகில் தேவரீருடைய குருவின் வசனம் மறந்த பாவம் உண்டாகும். அதனால் என்னைப் பாய்ந்து கொன்று தின்பீரென்று கூறி நின்றது.

சந்தகனும், சிந்துகனும் ராசாவே நீர் உண்ணவில்லை யானால் மற்ற மித்துருக்களான பேர்களெல்லாம் உயிர் கொடுப்பார்கள். விகடனிடத்திலே உத்தம வசனம் கண்டோம். பசியாறி உயிர்வாழும் என்றுகூற, சிங்கராசனும் சம்மதித்தான். விகடன் மந்திரிகளைப் பார்த்து என்னைக் கொன்று இராசாவுக்கு இடும் என்ன, மந்திரிகளும் 'யாவன் ஒருவன் செய்யும் உபகாரங்களை விலக்க ஒண்ணாது' என்று

விகடனைக் கொன்று இராசாவுக்கு இட்டார்கள். ஆதலால் முள்ளை முள்ளால் எடுப்பதுபோல தீய காரியங்களைத் தீய காரியத்தாலே கொல்வார்கள்.' அது எதுபோல என்னில் முன்பு கொல்லலாகாது என்ற ஒட்டகத்தைப் பின்பு கொல்லு வித்தாற்போலாகும் என்றது. பின்பு நந்தன் பக்கல் போய் உம்மைச் சிங்கராசன் குரோதித்து உள்ளான். பலரோடு குரோதித்திருந்த யானைபோலக் கெடுவீரென்ன, 'பலரோடும் குரோதித்து யானை கெட்டபடி' எப்படி என்று நந்துகன் கேட்க, நரி சொல்லும், ஒரு யானை மதப்பட்டு மூங்கில் வனத்தை முறித்துத் திரியாநின்றது. ஒரு மூங்கில் பொந்திலே குருவி ஒன்று முட்டை இட்டு வைத்திருந்தது. அந்த முட்டையும் உடைந்துபோனது. அந்தக் குருவி நம்முடைய குடிலையும் குலைத்து முட்டையையும் உடைத்து யானை செய்த அநியாயத்திற்குப் பகைவெல்ல வேண்டுமென்று தன்னினத்துக் குருவிகளிடம் முறையிட்டது. இவ்யானையை கொன்று தாரீராயில் நான் மரிப்பேன் என்று கூறியது. சத்துருக்களுக்கு அஞ்சினவனும் பிரியப் பிள்ளையினை இழந்தவர்களும் மரிப்பார்களோ? என்று ஒரு குருவி சொல்ல, காக்கை நீ மரித்தாலும் பிரயோஜனம் இல்லை. உன் பிள்ளைக்கு ஆயுசு அதிகம் சுமந்திருத்தலை காணேன் அது எப்படி என்று கேளாய் என்று கூறியது.

**கிளியின் ஆயுசு**

தேவேந்திரனால் வளர்க்கப்பட்ட சமர்தன் என்னும் கிளி சகல வித்தைகளையும் கற்றுச் சிறந்திருந்தது. தேவர்கள், ரிஷி ஈஸ்வரர்கள், சித்தவித்யாதரர்கள், கின்னரர், காந்தர்வர், அஷ்டவசுக்கள் முதலானவர்கள் கற்பித்துத்தந்த அறமெல்லாம் சொல்லும். தேவேந்திரன் மடியிலே வாழ்ந்திருக்கும். ஒருநாள் தேவேந்திரன் பக்கம் யமதர்மராசன் வந்து உரையாடிச் சென்றான். அவன் சென்ற பின்பு கிளி ஒளிந்திருந்தது. வெளிவந்தது. அதுகண்டு நீ ஒளிந்திருந்தது ஏன் என்று தேவேந்திரன் கேட்டான். அதற்குக் கிளி எல்லாப் பிராணிகளையும் கொல்விக்கிறவன், ஆனபடியால் பயந்து

ஒளிந்திருந்தேன் என்றது. அதைக் கேட்ட தேவேந்திரன் உனக்கு அதிக ஆயுசு தரவைக்கிறேன் வா என்று இயமதர்மராசன் பக்கம் சென்றான்.

அப்பொழுது இயமதர்மராசன் எதிர்கொண்டுவந்து தேவரீர் இங்கே எழுந்தருளிவந்த காரியம் ஏது என்று கேட்டான். அதற்குத் தேவேந்திரன் இக்கிளிக்கு ஆயுசு அதிகம் கொடுக்கவேண்டும் என்றான். ஒருவர்க்கு ஆயுசு கொடுக்கவும் தவிர்க்கவும் எனக்குச் சுதந்திரமில்லை. இதற்குக் கால பகவானைக் காண்பீர் என்ன, காலபகவான் பக்கம் சென்றார். அவனும் எதிர்கொண்டு தேவரீர் வந்த காரியம் எது? என்ன, இக்கிளிக்கு ஆயுசு அதிகம் கொடுக்கவேண்டும் என்றான்.

சித்திரபுத்திரன் வார்த்தை கேட்டு ஏவல் செய்கிற தொழிய எனக்குக் கொடுக்கச் சுதந்திரமில்லையென, அவனையும் அழைத்துக்கொண்டு சித்திரபுத்திரன் பக்கம் செல்ல, அவரும் எதிர்கொண்டு இவர்கள் வருகையைக் கண்டு அஞ்சினனாய் நின்று தேவரீர் எழுந்தருளின காரணம் எது என்ன, இக்கிளிக்கு ஆயுசு அதிகம் கொடுக்கவேண்டும் என்று கூற, என்னால் கொடுக்கவும், குறைக்கவும் ஒண்ணாது. பட்டோலைப் படித்துச் சொல்வேன். யாதொரு பிராணிக்கும் ஆயுசு முதலானவை எல்லாம் கெற்பகாலத்தே சிருஷ்டித்த பொழுதே சென்மிக்குமென்று சொல்லி பட்டோலை எடுத்தான். பட்டோலை பார்த்த அளவில் தேவேந்திரனும், இயமதர்மராஜனும், காலபகவானும், சித்திரபுத்திரனும் கூடினபொழுது மரணம் என்றிருக்க சமத்தானன் என்ற கிளி அப்பொழுதே மரித்தது. தேவேந்திரனும் வெறுத்துப் போனான்.

ஆதலால் உன் பிள்ளைக்கு மரணம் வந்தால் வெறுக்க வேண்டாம். அந்த யானையைக் கொன்று தருகிறேன் என்ன, ஒரு குருவி சொல்லும். சுற்றத்தார் பலர் கூடினால் வல்லாரைச் செயிக்கலாம். ஸ்ரீகருடாழ்வானை செயித்தது கேள் என்று சொல்லுவது.

### கருடாழ்வானை ஆமை வென்ற கதை

ஒரு கருடாழ்வான் பசி மிகுதியால் ஒரு ஆமையைப் பிடித்துத் தின்னப் புக்கது. புக்கவாறே ஆமை சிரித்துச் சொல்வது, 'நீ என்னை எளியன் என்றா நினைக்கிறாய் நானும் ஓடினால் உனக்குமுன் ஓடினேனாகில் என்னைக் கொன்று தின்னுமென, கருடாழ்வானும் சந்தோஷித்து இதைத் தோற்கப் பண்ணித் தின்போம் என்று உடன்பட்டு இன்னாள் என்று தவணையிட்டுக் கொண்டுபோனது. ஆமை தன்னிடம் சென்று சமுத்திரத்திலுள்ள ஆமைகளிடம் நான் கருடாழ்வானிடம் ஒரு போட்டியிட்டு வந்துள்ளேன். நீங்கள் கருடாழ்வான் குரல் காட்டின் அவ்விடத்திலே நீங்களும் உங்கள் குரல் காட்ட வேணுமென்று வேண்ட, அப்படியே செய்வோம் என்று எல்லா ஆமைகளும் சம்மதித்தன. இதனை அறியாமல் ஸ்ரீகருடாழ்வானும் சமுத்திரம் எட்டுத்திக்கும் ஓடிப்பறந்து பார்க்க ஆங்காங்கு உள்ள ஆமைகளும் ஆர்ப்பரித்தன. அதுகண்டு கருடாழ்வானும் அதிசயித்துப் போனான். ஆகையால் நீங்களும் அதுபோல சனங்களெல்லாம் ஒன்று பட்டால் சத்துருக்களை வெல்லலாம். அது என்போல என்னில் கருடனை ஆமை ஜெயித்தாற்போல் நாம் எல்லோரும் ஒன்று பட்டு யானையைக் கொல்வோம் என்ன, ஒரு குருவி சொல்லுவது. நாம் எல்லோரும் கூடி நாமும் உபாயத்தாலே வெல்லவேண்டும். உபாயம் அறியாத வேடனைப்போல் நாமும் பதற ஒண்ணாதென்ன. அது எப்படி என்னில் -

### உபாயம் அறியா வேடன்

பண்டு ஒரு பிராமணன் பசுவையும் கன்றையும் தன்னுடன் கொண்டுபோனான். போன இடத்திலே வேடர்களின் தலைவனுக்குப் பால் காய்ச்சியும், தயிர் தோய்த்தும் நெய்யுருக்கியும் கொடுத்து வந்தான். அதை உண்டு மகிழ்ந்த வேடன் உனக்கு வேண்டியதைத் தருகிறோம் அந்தப் பசுவைத் தாரும் என்றுகேட்க, பிராமணனும் சம்மதித்தான். வேடனும் பிராமணனுக்கு வேண்டும் தனம்

கொடுத்துப் பசுவை வாங்கிக் கொண்டான். வேடன் பிராமணனைப் பார்த்து இதன் காயோ, கிழங்கோ பால் வருவதெப்படி என்று கேட்க, இந்த முலையிலே பால் வரும் என்று சொல்லிப் பிராமணன் புறப்பட்டுப் போனான். வேடன் அந்தப் பசுவுக்குக் கெந்தபுஷ்பம் முதலாகிய மோட்சஉபகாரம் செய்து திவ்விய வஸ்த்திரம் உடுத்தி பசுவின் முன் குடுவையை வைத்துப் பால், தயிர், நெய் தருக என்ன, பசு பேசாதிருந்தது. பிராமணன் நம்மை ஏமாற்றிவிட்டான் என்று கூறி பசுவைக் கட்டிவைத்து அடித்துக் கொன்றான். பசுவைக் காத்துப் பால் கறந்துகொள்ள உபாயம் அறியாமல் பசுவை அடித்துக் கொன்ற வேடனைப்போல நாமும் அறியாது செய்யாமல் விசாரித்துச் செய்யவேண்டுமென்று கூறி பின்னையும் சொல்லியது.

**சிறியாரென்று பகை கொள்ளலாகாது**

ஒரு புலி மிருகத்தைத் தின்னாநிற்க ஒரு எலும்பு தொண்டையிலே தைத்து விதனப்பட்டுக் கிடந்தது. அதனைக்கண்ட வயன் என்னும் பட்சி நான் உன் துன்பம் தீர்க்கிறேன் எனக்கு என்ன செய்யவல்லாய் என்ன, புலி உனக்கு நல்ல மாமிசம் தருகிறேன் என்றது. பட்சி புலியை அண்ணார்ந்து பார்க்கச் சொல்லி மூக்காலே குத்தி அந்த எலும்பை எடுத்துவிட்டது. பின் புலி ஒரு மிருகத்தைத் தின்றுகொண்டு இருப்பதைப் பார்த்து, பட்சி எனக்கு மாமிசம் இடவேண்டும் என்று கேட்டது. 'நீ யாரடா, என்னைப் பார்த்து அஞ்சாதே கேட்கிறாய்' என்று புலி உறுமிற்று. என்னால் பிழைத்தவனுக்கு என்னை யாரடா என்று கேட்கத் தோணுகிறதோ என்று பட்சி கேட்க, புலி சொல்லுவது பால் குடித்தவனுக்குப் பசுவாலும், பழம் தின்னவனுக்கு மந்தத்தாலும் மாற்றம் கடந்தவனுக்கு நாவாலும் பிரயோஜனமில்லை. ஆதலால் நீ என்னுடைய வாயிலே புகுந்து பிழைத்து வந்ததே உனக்குப் போதாதா என்று கேட்க, பட்சி அப்புலியைச் செயிக்கவேண்டும் என்று எண்ணியது. புலி நித்திரை கொண்டிருந்தபோது பாய்ந்து ஒரு கண்ணைக் குத்திப் பிடுங்கி செல்லுவது திண்மையுடையவனாய் பார்க்க

வல்லோனுமாய் இருக்கும் நான் உன் இரு கண்களையும் திருகியிருக்கலாம். ஆனால் ஒரு கண்ணை விடுத்தேன். அதுவும் உனக்கு லாபம் என்று சொல்லி குருவி பறந்து போனது. ஆகையால் யாவரும் சிறியாரென்று பெரியவரா யுள்ளார் பகை கொள்ளலாகாது. அது என் போல என்னில் முன்பு குற்றம் செய்த புலி சிறியதாகிய குருவியினாலே கண் பறியுண்டாற்போல நாம் எல்லோரும் ஒன்று பட்டு உபாயத்தாலே யானையைக் கொல்வோம் என்று சம்மதித்தது. கண்ணைக் குத்தி கண்ணிரண்டையும் காக்கை தின்பேன் என்றது. மின்மினி அப்புண் புழுக்க எச்சம் இடுவேன் என்றது. மண்டூகம் தண்ணீரிலே பாய்ச்சிக் கொல்வோம் என்றது. இப்படி இப்படி செய்வேன் என்று பட்சிகள் அனைத்தும் உறுதி இட்டது. யானை நித்திரை செய்கையில் காக்கை அதன் இரண்டு கண்களையும் கொத்தி விழுங்கியது. மின்மினி அப்புண்ணிலே எச்சம் அப்பிவைத்து புழுக்கப் பண்ணியது. இதனால் துன்பம் தாங்காமல் நாவறண்டு திரிய மண்டூகம் ஒரு பாழும் தூரிலே (துரகிலே) இருந்து கத்தியது. அதன் குரல் கேட்ட யானை குளம் என்று கருதி போய் துரகிலே விழுந்தது. ஆகாரம் கிடைக்காமல் செத்தது. ஆதலால் மித்துருபாந்தராய் வாழும் குடியினால் பெலவான்களையும் வெல்லலாம். அது எதுபோல என்னில் யானையைப் பட்சிகள் கொண்ணாப் போலே ஆகாதோ. (என்ன).

சிங்கராசனோ வேண்டாமென்ன சங்கவதனனை நோக்கி நந்தகன் சொல்வான். சிங்கராசன் எனக்கு வெகு மித்துரு ஆவான். துரோகம் செய்வானாகில் பூர்வ சுகிர்தத்தை யாவராலும் தள்ள இயலாதே. தன்னாற் செய்யப்பட்ட புண்ணிய பாவம் அனுபவிக்கறதே ஒழிய வினாச காலத்தை மும்மூர்த்திகள் கூடினாலும் கிடைக்க ஒண்ணாதென்ன அது எப்படி என்னில் நந்துகன் சொல்வான்.

**விதியை வெல்லமுடியாது**

பண்டு சாதிக் கள்ளனொருவன் இருந்தான். அவனுக்குப் பூர்வ சினேகத்தினாலே வந்தபடி கேள் (என்று

சொல்லலாயிற்று) உஞ்சை என்னும் மகா நகரிலே சிவகாமி என்னும் ஒரு பிராமணன் சகல சம்பனனாய் ஓதுதல், ஓதுவித்தல், கொள்ளல், கொடுத்தல், வேட்பித்தல் ஆகிய சகல வித்தைகளுக்கும் நிபுணனாய் பொய்யுரைத்தலன்றியும், பொருள் தேடலன்றியும், இவ்வுலக துன்பத்தைத் துறந்தும், மகாஞானியாய் இருந்தான். இவனை ஒரு சாதிக்கள்ளன் பல நாளும் கண்டு ஆச்சரியப்பட்டு அவன் அருள்வேண்டி நின்றான். ஒருநாள் அப்பிராமணன் இக்கள்ளனைப் பார்த்து உனக்கு வேண்டிய காரியம் என்ன என்று கேட்டான். கள்ளனோ, நான் சாவதெங்கனே என்று தேவரீர் அருள்செய்ய வேண்டும் என்று விண்ணப்பஞ் செய்தான். சிவகாமியும் நான் சொன்னபடி கேள் என்று ஊடறுத்துச் சொல்வான்.

கன்னி ஞாயிற்று கிருஷ்ணபட்சத்து அஷ்டமி நாள் அர்த்தராத்திரியிலே சுடுகாட்டிலே வேகின்ற பிணத்தைத் தள்ளிவிட்டு நீ அந்தக் கட்டையின்மேல் படுத்துக் கொண்டால் அந்தப் பிணம் எழுந்திருந்து நீ பாடலிபுத்தூரில் ஆலடியிலே மணமாகி மகிழ்ந்திருக்க ஏன் என்னுடைய சிதையிலே வந்து கிடக்கின்றாய்? என்றுகூறி உன் காலைப் பிடித்து இழுத்துப்போட்டுவிட்டு தான் போய் அக்கட்டையின் மேல் கிடக்கும் என்றார். அப்படியே அவனுக்கு நடக்க அதிகம் துக்கித்தவனாய் அன்று முதலாக களவு தவிர்த்து அத்துவான ஆரணியத்திலே தபசாய் நின்றான்.

அப்படி அவன் தபசு மேற்கொண்டிருக்குங்காலை அங்கே கர்வன் என்பான் ஒரு கன்னிகை ரூபம் கொண்டு சகல லக்ஷண சம்பனனாய் இவன் முன்னேவந்து நின்றான். இவனும் அவள் மீது விருப்பம் கொண்டான். பெரிதாகிய அல்குலும் சிறிதாகிய இடையும், பெரிதாகிய முலையும், நீண்ட கண்ணுமாய் நின்றவளை நீ யார் என்று கேட்டான். ஒரு வியாபாரி சரக்கேற்றி தீவாந்திரத்திற்குப் போகையில் படாவிரிபட்டுச் சிதைந்துபோக பிழைத்து வந்தேன். உன்னைக் கண்டபின் போக கால் எழாதே நிற்கின்றேன் என்று

கூறினான். அவனும் அவளுடைய இளமையும் அழகுங் கண்டு அவள் தன்னுடன் கூடி மகாசுகமனுபவித்துச் செல்லா நிற்கையில் ஒரு பிள்ளையும் பெற்றெடுத்தாள்.

இவ்வளவில் இவனுக்கு மரண நாள் நெருங்கிற்று. ஒருநாள் அவன் மனைவி அழுதாள். நீ அழுகின்ற காரியம் ஏது என்று கேட்டான். நான் பிள்ளைப் பெற்றபொழுது பாடலிப்புத்தூரில் உள்ள தேவிக்குப் பிரார்த்தனை செய்கிறேன் என்று பிராத்தித்திருந்தேன். நீயும், நானும் பிள்ளையையும் கொண்டுபோய் பிரார்த்தனை கொடுக்க வேண்டும் என்றாள். அவசியம் செல்லவேண்டுமா? என்னால் வரயியலாது என்றான். ஒருநாள் அவள் அவனை மகிழ்விக்க அவனும் மகிழ்ந்து அவளோடுகூட வருகிறேன் என்று உடன்பட்டு அவளுந்தானுமாக பாடலிபுத்தூரில் வடக்கு வாசலில் ஆலடியில்போய் இருந்தார்கள்.

அப்பொழுது அந்த ஊரிலே ராசா சருவசுவாமி என்பான் வளர்ந்த ஆட்டுக்கிடாய் காணாமல் போனது. பாடிகாப்பார் எங்குந்தேடிக் காணாமல் திகைத்து நின்றனர். அவ்வேளை இந்தக் கள்ளன் பெண்சாதி தன்னைப் போர்வை மூடிக் கொண்டு ஆட்டுக்கிடாய் போலக் கத்தினான். காணாமல் போன ஆட்டுக்கிடாய் கூப்பிடும் சத்தம் எங்கேயோ கேட்கிறதே என்று குரல் வந்த வழி தேடி ஆலடிக்கு வருகையில் அருகில் இருந்த இவனைக் கண்டு கிடாய் திருடன கள்ளன் என்று பிடித்து கொண்டுபோய் இராசாவிடம் ஒப்படைத்தனர். ராசா இப்போதே இந்த ஆலடியிலே தானே வெட்டிக் கழுவிலே வையுங்கள் என்றான். அப்படியே அவனை ஆலடியிலே வெட்டி கழுவிலே வைத்தார்கள். ஆதலால் சாவு இன்ன இடம் என அறிந்திருந்தும் போவானேன். நிராகரிப்பு, நிந்தையிலே இவனுக்குச் சாவு வருவானேன். ஆதலால் ***விதியால் வருவதை யாவராலும் தப்ப ஒண்ணாது காண்*** என்று நந்தகன் சொல்லக்கேட்டு சங்கவதனன் நீ புவிஷியனைப் போலக் கெடுக்கிறாய் என்ன, அது எப்படி என்று நந்தகன் கேட்க சங்கவதனன் சொல்வான்.

**வருவதை அறிந்து வாழவேண்டும்**

ஒரு ஏரியிலே மேல்தாவினான் என்றும், பிறவீதி என்றும் புவிஷியன் என்றும் மூன்று மச்சங்கள் இருந்தன. அதில் மேல் தாவித்தான் மேலே வருங்காரிய மறிந்து அதுக்குத் தக்கது செய்யும். பிரவீதி என்பது அப்போதைக்கப்போது தக்கபடி செய்யும். புவிஷியன் என்பது, உள்ளது கண்டு வழிதப்பாது என்றிருக்கும். ஒருநாள் வலைகாரன் வந்து நாலு மூலையும் மதித்துப் பார்த்துத் தண்ணீர் வடிஞ்சதும் வலை போடலாம் என்று இருப்பதைக்கண்டு மேல்தாவித்தான் என்கிற மச்சம் முதலைக் கிடங்கிலே ஒளிந்துகொண்டது. பிற வீதி என்னும் மச்சம் வலை விரிப்பைதக் கண்டு சேற்றிலே போய் ஒளிந்து கொண்டது. புவிஷியன் என்னும் மச்சம் விதிதப்பாது, உள்ளது உண்டென்று இருந்தது. வலையில் அகப்பட்டு விலையுண்டு செத்துப்போயிற்று. ஆதலால் மேல்வருவ தறிந்து வாழவேண்டும் என்று நந்தகனுக்குச் சொல்லியது.

பின்பு போய், சிங்கராசனைக் கண்டு, தேவரீர் என்னை மந்திரியாகக் கொண்டு ராச்சியம் செலுத்தா நின்றீர் (ஆளுகின்றீர்). நான் சொன்னபடி செய்தருள்க. நான் சிறியேன் ஆகினும் என் வார்த்தை கேட்டால் குறையில்லை. ஊட்டுஞ்சொல் கேட்ட ராசாவைப்போல என்ன, அது எப்படி என்னில் சங்கவதனன் சொல்லுவான்.

அயோத்தி மாநாகரை நயக்கியன் என்னும் ராசா ஆண்டு வந்தான். ஒருநாள் நகர சோதனைக்குப் புறப்பட்டுச் சென்ற போது அவ்வூரில் ஒரு பாழும் பள்ளத்திலே கன்னிகை நாகமுடன் ஒரு சாரைப் பாம்பு இழையக்கண்டு கன்னி சங்கம் ஆகாதென்று இரண்டையும் துரத்திவிட்டான். அந்த கன்னி நாகம் தன் தந்தையிடம் சென்று நம் மகாராசா என்னை ஸ்ரீயாக அபேட்சித்தான் நான் அவனை இச்சித்திலேன். அதனால் என்னை விரட்டி விட்டார் என்றுகூற நாகராசன் கோபித்து, ராசாவானவன் நீதி ஒழித்து அநீதி செய்யலாமோ? அநீதி செய்தவனைக் கடிக்கவேண்டுமென்று ராசாவின் பள்ளிக் கட்டிலுக்குக் கீழே போய் இருந்தது.

ராசா தன் தேவியுடன் சுகம் அனுபவியா நிற்கக் கண்டு இந்த வேளையிலே கடித்தால் தோஷமாகும் பொறுத்திருப் போம் என்று இருந்தது. அப்போது தேவி ராசாவிடம், இந்த நாள் ராத்திரி தேவரீர் நகரச் சோதனைக்குப் புறப்பட்ட பொழுது பட்டணத்தில் விசேஷம் ஏதேனும் உண்டோ என்று கேட்க, ராசாவும் ஒரு பாழும் பள்ளத்திலே கன்னி நாகத்துடன் சாரைப் பாம்பு இழையக் கண்டு கன்னி சங்கம் ஆகா தென்று பாம்பைத் துரத்தி ஒட்டிவிட்டேன். அது ஒழிந்து வேறொரு விசேஷமும் இல்லை என்றார். இதை நாகராசன் கேட்டு, என்ன காரியம் நினைத்தோம். ராசாக்கள் அநீதி செய்வார்களோ? உண்மை விசாரியாமல் கடித்திருந்தோ மாகில் ராஜ்யம் அரசனை இழக்க பாவியாகி இருப்போம் என்று எண்ணி விரைந்து திரும்பி தம் இருப்பிடம் சென்று தன் மகளாகிய கன்னிகையை அழைத்துத் தான் அறிந்த செய்தி உண்மையா என்று கேட்க, கன்னி நாகமும் பொய்யாக குற்றத்தை ராசா மேல் இட்டேன் என்று குற்றத்தை ஒப்புக் கொண்டது.

மற்ற நாளும் ராசா நகர் சோதனை புறப்பட்டபோது அந்த அம்பலத்தின் வழி போகாநிற்க ராசராசனும் ஒரு பிராமணன் வேஷம் கொண்டு நடந்த செய்திகளை யெல்லாம் ராசாவுக்குச் சொல்லி நீர் செய்த உபகாரத்திற்கு நன்றியாக என்னாலாகும் சிறிய உபகாரம் பெறவேண்டுமென்று ராசாவிடம் சொல்லியது. ராசாவும் அது என்ன என்ரு கேட்க, விலங்கு சாதிகளின் பாஷையை உள்ளபடி உபதேசிக்கிறோம் என்று கூறி ராசாவுக்கு உபதேசம் பண்ணிவைத்தது. ராசாவும் சந்தோஷப்பட்டு தேவரீர் அனுக்கிரகத்தாலே விலங்கு சசிகளின் பாஷை அறியப்பெற்றேன் என, இந்தப் பாஷை மனிதருக்கு உள்ளபடி சொன்னால் உனக்கு மரணம் உண்டாகும் என்றுகூறி போனது.

பின்பு ராசாவும் சகல ஜீவன்களின் பாஷையும் அறிந்து ராஜ்யம் பண்ணி நின்ற காலத்து ஒருநாள் ராசா பள்ளி கொண்டிருக்கிற கட்டிலை வெயிலிலே போட்டு உள்ளே பிடித்தார்கள். அவ்விடத்திலே சிற்றெறும்பும் வளை இருந்தது.

வளையினுள் இருக்கும் சிற்றெறும்புக்குக் கல்யாணம் ஆகையால் அரிசியும் நெல்லும் கொண்டு செல்கிற வேளையிலே கட்டிலின் கால்சிற்றெறும்புகளின் வளை வாசலை மூடிக்கொண்டதால் உள்ளே போகமுடியாமல் நின்றன. முந்தி உள்ளே போன எறும்பு திரும்பி வந்து இந்நேரம் மட்டும் தாமதம் ஏன்? என்று வழி பார்த்து அழைத்துக் கேட்ப, கட்டிலின் கால் வழியை அடைத்துள்ளது என்று புறம்பே இருக்கும் எறும்புகள் கூறக்கேட்டு உள்ளே இருக்கிற எறும்பு கட்டிலையும் ராசாவையும் எடுத்து ஏறப்போட்டுவிட்டு வாருங்கள் என்று கூறியது. இதைக் கேட்ட ராசா நகைத்தான்.

பள்ளிக் கட்டிலில் திடீரென்று ராசா தானே சிரிப்பதைக் கண்டு தேவி சந்தேகப்பட்டு இவ்விடத்தில் நீர் நகைப்பானேன்.என்று கேட்க ராசாவும் ஏதோ காரணம் சொன்னார். இது உண்மையல்ல. உண்மை சொல்லவேண்டும். சொல்லீராகில் நான் மரிப்பேன் என்று தவிச்சுக்கிடந்தாள். மந்திரியும் இந்த வர்த்தமானம் கேட்டு தேவி முன்னாள் பாடு கிடந்தான். தேவரீர், தேவி மூச்சி இருக்க உண்மை சொல்ல வேண்டுமென்றான். உள்ளபடி சொன்னால் எனக்கு மரணம் உண்டாகும் என்று ராசா சொல்ல, அச்செய்தியை மந்திரி அப்படியே தேவியிடம் கூறினான். இச்செய்திகேட்டு ராசா சினம் கொண்டு உள்ளபடி சொல்வோம் என்று யானை ஏறி நகர்வலம் சென்றார். அப்போது அவ்வழியே சில ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. அவைகளில் பெண்ஆடு ஒன்று அழகுபொலி கிடாயைப் பார்த்து அந்தக் கிணத்திலே நல்ல புல் இருக்கிறது. அந்தப் புல்லை எனக்குப் பறித்துத் தரவேண்டும் என்றுகேட்டது. அதற்குக் கிடாய் நான் பறித்துத் தரமாட்டேன். எப்படியாகிலும் நீ சென்று பறித்துக்கொள் என்றது. அப்பெண் ஆடு எப்படியாகிலும் நீதான் பறித்துத் தரவேண்டுமென்ன, அதற்கு அந்தக் கிடாய், தன்னுடைய தேவி வார்த்தையைக் கேட்டு சம்மதித்துச் சாகப்போற ராசாவாகியவன் புத்திபோல என்னையும் ஏழையாகக் கருதினாயோ? என்னைத் துரவிலே இறங்கி புல் பறிக்கச் சொல்கிறாய், யானையின் மேலே இருக்கிற ராசாவைப் போல முட்டாள் அல்லன். நீ மரித்தாலும்

பின்னையும் ஒரு விவாகம் பண்ணிக்கொள்வேனே ஒழிய நான் துறவிலே விழுந்து மரிக்கமாட்டேன் என்றது.

இந்தச் செய்தியை ராசா கேட்டு மொத்தைக்கு உள்ளது நமக்கு இல்லாது போனதே என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டு தன் தேவியை முனிந்து வேறொரு விவாகம் பண்ணிக் கொண்டான். ஆதலால் உத்தம மத்திபமான காரியம் அறிவில்லாதவர்களாயினும் சொன்ன நற்காரியத்தைப் பெரியோர்கள் கேட்பார்கள். அது எது போல என்னில் ஆட்டுச் சொற்கேட்ட ராசாவைப் போல நீயும் என் சொல் கேட்டால் குற்றமில்லை.

நந்தகன் உம்மைக் கொல்ல கொம்பு தீட்டியுள்ளான் என்று சண்டைக்கு அச்சாரம் இட சிங்கராசனும் இது பொய்யோ மெய்யோ என அறிந்துவருவோம் என்று சென்று நந்தகன் கொம்பு தீட்டுவதைப் பார்த்து, சிங்கராசன் வருகைக்கு நந்தகனும் நரி சொன்னபடியே ஆனதென்று அவர்களைப் பார்த்து எக்காளமிட்டது. மலைத்தது. சிங்கராசனும் நந்தகன் வருவதைக் கண்டு, தன்னைக் கொல்ல வருமுன் அதனைக் கொல்வது காரியம் என்று எதிர் மலைத்தது. சிங்கராசனும் நந்தகனும் மகாயுத்தம் பண்ணி இரண்டுபேரும் ஒருவரை ஒருவர் பாய்ந்து தாக்கி கொன்று மாய்ந்தனர். சங்கவதனன் சொன்னபடியே இரண்டு பேரும் செத்தார்கள். நந்தகன் மாமிசமும், சிங்கராசன் மாமிசத்தையும் நரிகள் தின்று திகட்டி நின்றன. நந்தகனும் சிவலோகப் பராப்த மானான். சிங்கராசன் விஷ்ணு லோகப் ப்ராப்தமானான். சிங்கத்தையும், ரிஷபத்தையும் விரோதமாக்கி கொல்லுவித்து இரண்டினுடைய மாமிசத்தையும் நரி தின்றது. ஆதலால் துர்ச்சனரைச் சேர்ந்த பேருக்கு இந்தப்படி வரும். ஆதலால் துர்ச்சனர், சங்கார்த்தம் ஆகாது என்றவாறு.

**மண்டூகப் பிறக்காண்டம்**

விலங்கு சாதிகளின் ஆதரிப்பை தயிர் கடைந்து வெண்ணெய் திரட்டினால் போல சொல்கிறேன். தர்ம சாஸ்திரம் கேட்கவும், மண்டூகம் பிறக்காண்டம் சொல்கிறேன்.

உத்தியோகமம் என்னும் நகரிலே மகாவனத்தினிலே மூன்று யோசனை விரிவுடைத்தான ஒரு துரவு. அதில் நாலா பக்கத்திலுமுள்ள மண்டூகங்களெல்லாம் கூடி கிருஷ்ண சேனன் என்கிற மண்டூகத்தை மண்டூக ராசன் என்று அபிஷேகம் பண்ணி சகல மண்டூகங்களும் அவன் ஏவல் கேட்டு நின்றன. ஒருவரை ஒருவர் அடர்ந்தோதம் செய்யாமல் இணைந்து அன்புடன் வாழவேண்டுமென்று கட்டளை இட்டு ராஜ்ஜியம் பண்ணிவந்தது.

அவ்வாறு இராஜ்ஜியம் செய்துவந்த காலத்து துர் அதிஷ்டகாலமாய் மாரி மறுத்தபடியால் ஒரு நாகம் தண்ணீர் தாகத்தால் ஏரி குளங்களில் தண்ணீர் கிட்டாமல் வருத்தப்பட்டு திரிந்து, இம்மகாவனத்திற்கு வந்தது. இம்மகாவனத்தில் துரவிலே இருந்த மண்டூகத்தின் ஆரவாரம் கேட்டு ஜலமுள்ள இடமில்லாதிருந்தால் மண்டூகம் கூப்பிடாது. நாம் அங்கே போனால் தண்ணீரும் ஆகாரமும் பெறலாம் என்று மண்டூகங்கள் கத்துகிற திசையை வழி பார்த்துச் சென்று துரவை அடைந்து அவர்களைக் கண்டு பயப்பட்டதுபோல் ஒதுங்கி நின்றது.

மண்டூக ராசன் அதனைக் கண்டு நீ இங்கு வந்த காரியம் யாது என்று கேட்க, நான் இருந்த வனத்திலே மாரி பொய்த்த தால் என்னுடைய பந்துக்களெல்லாம் தண்ணீர் தாகத்தாலே மரித்தார்கள். அங்கேயே மரிக்கவேண்டிய நானும் இங்கே தண்ணீர் கண்டு பிழைக்கலாம் என்று வந்தேன். உங்கள் ராசாவைக் கண்டு அவனிடம் அடைக்கலம் புகவேண்டும் என்றுகூற,"மண்டூகராசன் நான் தான்" என்னுடைய ஜனங்களை விட்டு தனியே வந்தேன். என்னிடம் சரண் அடையவந்தேன் என்கிறாய். எனினும் என்னுடைய பந்துக்களின் எண்ணம் அறிந்து பின் உறவு கொள்ளவேண்டும். நான் வரும் அளவும் நீர் இரும் என்று துரவினுள் புகுந்து தன்னுடைய பந்துக்களை நோக்கி நம்முடைய மகாசேனைக்கு ஒரு அனர்த்தம் வந்தது என்றுசொல்லத் தொடங்கியது.

கொடியதாகிய குரோதத்தையுடைய மிகவும் பிரமாணிக்கப்படாத துர்மார்க்கன் விவேகத்தையுடைவனாக இங்கு வந்து இருக்கிறது. நாமெல்லாம் பிழைக்க வழியில்லை. நம்முடனே வாசம் பண்ணி இருக்கவேண்டும் என்றும் தன்னுடைய தண்ணீர் தாகம் தவிர்க்கவேண்டும் என்றும் வந்திருக்கிறது. என்ன செய்வது என்று கேட்டு நிற்க, கிருஷ்ணரூபி என்பதொரு மண்டூகமாகிய மந்திரி சொல்லும் அது புகுமாகில் நமக்கெல்லாம் கேடாகிவிடும். என் சொல் கேளும். என் சொல் கேளீராகில் பண்டு மூதறிவாளன் வார்த்தை கேளாமல் குரங்குகள் பட்டாற்போலத் துன்பப்படுவீர் என்றுகூற, அது எப்படி என்றுமண்டூக ராசன் கேட்கச் சொல்லும்

**கிளைக்கதை : குரங்குகள் அழிந்த கதை**

நீதி சுகபான் என்பான் நாகபுரம் என்னும் நகருக்கு ராசா வாயும், சமஸ்தல லோகங்களுக்குச்சுவாமியுமாய் இருந்தான். அவனுடைய சந்தனச் சோலையிலே பல வருணத்திலும் பதினாயிரம் குரங்குகள் இருந்தன. அந்தச் சந்தனச்சோலை அருகிலே ராச பண்டிதனுக்குச் சில மானியமுண்டு. அந்த மானியத்தில் இடப்பட்ட பயிரை இந்தக் குரங்குகள் புகுந்துபிடுங்கிப் போட்டுவிட்டன.

இந்தக் குரங்குகளுக்கெல்லாம் பெரியவனாயிருக்கிற மூதறிவாளன் என்கிற ஒரு குரங்கு அதிபல பராக்கிரமனாயும் செல்காலம், வருங்காலம் அறிந்து புத்தி சொல்லும் திறன் பெற்றிருந்தது. அது தன்னுடைய சேனைகளைக் கூட்டி நீங்கள் இராச பண்டிதனுடைய மானியத்தை அழித்தீர்களாகில் அனர்த்தம் வரும் என்றுசொல்லியும் கேளாமல் அழித்து நின்றன. இராச பண்டிதன், சேனை, குரங்குக் கூட்டத்தினை அழித்து நின்றன.

அந்நாளில் மூதறிவாளன் அளருடகளப் பட்டணத்திற்குள் புகுந்து அதன் சரித்திரம் விசாரிக்கையில் இராசாவின் குமாரன் ஒரு கிடா வளர்த்து வந்தான். அந்தக்

கிடாவிற்கும் விளக்குத் தூண்டும் தாதியைக் கிடாய் பாய்ந்து கொன்றது கண்டு அங்குள்ள சேனைகளை விசாரிக்கையில் மூதறிவாளன் தன்னுடைய பந்து ஜனங்களெல்லாம் கொன்றது இக்கிடாக்கள் என்பதை அறிந்து இக்கிடாக்களைக் கொல்லுவிப்பேன் என்று பிரதிக்கினை பண்ணிக்கொண்டது.

இராச பண்டிதன் சேனையை அழிக்க பிரதிக்கினை செய்துகொண்ட மூதறிவாளன் அத்துவானமான ஆரணியம் செல்லா நின்றது. அவ்விடத்திலே தண்ணீர் தாகம் எடுக்க தண்ணீர் தேடிச் சென்று அங்கு ஒரு குளம் இருப்பதைக் கண்டது. அக்குளத்திலே ஒரு மகாபூதம் உள்ளது. அது குளத்துக்குள் புகுந்த பேரை எல்லாம் தின்றுவிடும். அதனை மூதறிவாளன் தன்னறிவால் உணர்ந்து ஒரு நீண்ட குழலை நீட்டித் தண்ணீரை உறிஞ்சி குடித்தது. குளத்துக்குள் புகாமல் தண்ணீர் குடித்து நிற்கும் குரங்கை குளத்தினுள் நிற்கும் பூதம் கண்டு ஆச்சரியப்பட்டு என்னே, என்னே ஒரு குரங்கினுடைய புத்தியின் சிறப்பு என்று சந்தோஷித்து, முன்னால் தன்னால் கொல்லப்பட்டதொரு ராசாவினிடத்திலிருந்தே இரத்தின மாலையை இந்தக் குரங்கின் கழுத்திலே போட்டு அனுப்பியது. அதைக் கண்டு மகிழ்ந்த மூதறிவாளன் என்கிற குரங்கு பூதத்தைப் பார்த்து, நீ செய்த நன்றிக்கு ராசாவின் சேனையையெல்லாம் உனக்கு ஆகாரமாகக் கொண்டுவந்து தருகிறேன் என்று சொல்லி மகாபூதம் கொடுத்த இரத்தின மாலையை வாங்கிக் கொண்டு பட்டணத்திலே புகுந்து ராசாவின் தேவியும் கூடியிருந்த இடத்திலே போய் நின்றது. தேவி குரங்கின் கையிலிருந்த இரத்தின மாலையைக் கண்டு அதனை வாங்கித் தரவேண்டுமென்று இராசாவைக் கேட்க, இராசாவும் குரங்கின் கையில் இருந்த மாலையைப் பெற குரங்கைத் தொடர்ந்தான். குரங்கும் பிடி கொடாமல் பட்டணம் விட்டு வெளியே புறப்பட்டு போனது. ராசாவும் சில சேனைகளுடனே குரங்கைத் தொடர்ந்து போனான்.

குரங்கு தனக்குப் பூதம் தந்த இரத்தின மாலையை அக்குளத்திலே விட்டெறிந்து தான் ஒரு விருட்சத்தின்

மேலேறி இருந்தது. இராசா தன்னுடன் வந்த சேனையை அழைத்து 'இந்தக் குளத்தின் நடுவில் குரங்கு இரத்தின மாலையைப் போட்டது. அதனைப் புக்கு எடுத்துக் கொடுங்கள் என்று கட்டளையிட, சேனைகள் குளத்தினுள் புகுந்தன. புக்க பேரையெல்லாம் பூதம் பட்சித்துவிட்டது. அதனை அறியாது இராசா வும் குளத்தினுள் புக முனைந்தான். அதனைப் பார்த்து மூதறிவாளன் என்கிற குரங்கு, இராசாவே! நீ குளத்தினுள் புகாதே! புகுந்தால் உன்னைப் பூதம் பட்சித்து விடும். குளத்தினுள் புகாதே. என்னுடைய வம்சத்தினரை யெல்லாம் நீ கொல்லுவித்தபடியாலே நானும் உன்னுடைய சேனைகளைக் கொல்லுவித்தேன். உன்னைக் கொன்றால் ராச துரோகமாகும். நாடும் அழியும். நீர் போகவேண்டாம் என்று மூதறிவாளன் சொல்லக் கேட்டு, அது உண்மை என்பதை விசாரித்தறிந்து அரசன் மீண்டான். ஆதலால் பெரியோர் சொல்லும் காரியத்தைக் கேட்பதே பெருமை. கேளாதார் கெடுவர். அது எதுபோல என்னில் உபாயத்தாலே குரங்கு பூதத்தினை உறவு கொண்டு இரத்தின மாலையையும் பெற்று பகைமையையும் வென்றது. அதன் சொல் கேட்ட அரசன் பிழைத்தான். அதன் சொல் கேளா குரங்குகள் இறந்து பட்டன.

**முன்கதை தொடர்ச்சி**

அது போல மகாநாகமும் உபாயத்தாலே உட்புகுந்து நம்மையெல்லாம் கொல்ல உபாயம் பண்ணுகிறது. அதை உள்ளே விடப் போகிறீர்கள். உள்ளே விட்டால் ஸ்ரீ வார்த்தையை விசுவாசித்துக் கெட்ட வித்யாதரனைப் போல கெடுவீர்கள் என்ன அது எப்படி என்று மண்டூக ராசன் கேட்க மந்திரியாகிய ரூபி சொல்லும்.

## *கிளைக்கதை - 2*

**வித்தியாதரனும் கர்ப்பம் கொண்ட மனைவியும்**

(எதையும் முழுவதும் ஆராய்ந்து செய்தல்வேண்டும்)

சேதுப விசேஷத்திலே சகல வித்தைகளையும் கற்றவனாய் வித்யாதரன் என்பவன் ஒருவன் இருந்தான்.

அவன் ஊரிலே பெரிய விழா ஒன்று நடைபெற்றது. அவனுடைய பாரியாளாகிய (மனைவி) சைவரூபதீபமேனி என்பாள் தன் பத்தாவைப் பார்த்து எல்லோரும் விழாக் காணப்போகா நிற்கிறார்கள். நான் கர்ப்பவதியாய் இருப்பதால் போகமுடியவில்லையே என்று துக்கித்து நின்றாள். வித்யாதரனும் தன் மனைவிமேல் உள்ள மோகத்தால் நீ ஏன் துக்கித்து நிற்கிறாய். வருந்த வேண்டாம். நீ போய் விழாக் காண், நீ விழா கண்டுவரும் அளவும் உன்னுடைய கர்ப்பத்தை நான் தரிக்கிறேன் என்று அவளது கர்ப்பத்தைத் தரித்துக் கொண்டான்.

சைவரூபதீபமேனி என்பாளும் மிக்க மகிழ்வுடன் போய் விழாகண்டு சேவித்து நின்றபொழுது, திருக்கூடத்திலே ஆடுகிற நாயகியைக் கண்டாள். நாம் கர்ப்பம் தரித்து விதனப்படுவதைவிட இந்த நாயகியுடன்கூடி பரசுகம் அனுபவிப்பதே நல்லது என்று சைவரூபதீபமேனி என்பாளும் அவர்களுடனே சேர்ந்து தூர தேசாந்திரம் போனாள். வித்யாதரனும் தன் மனைவியைக் காணாது தவித்தான். தன் வயிற்றிலே கர்ப்பம் முற்றி பெறமுடியாமல் மரித்தான். ஆதலால் ***யாதொரு காரியமும் செய்யுமிடத்து முழுவதும் விசாரித்துச் செய்யவேண்டும்.*** விசாரியானாகில் ஸ்ரீவார்த்தையைக் கேட்டு விசுவசித்துக் கெட்ட வித்யாதரனைப் போலக் கெடுவார்கள் என்று சொல்ல பின்னும் மற்றமுள்ள மண்டூக சனங்கள் சொல்வது. நம்முடைய ராசாவாகிய கிருஷ்ணசேனன் மகாநாகத்தைப் புக விட்டால் நமக்கெல்லாம் வினாசகாலம் (இறுதிகாலமாகும்) என்று சொல்ல, சர்ப்பத்துக்கும் துஷ்டருக்கும் இடம்கொடுக்கலாகாது என்று மகாசங்கரன் என்னும் மந்திரி சொல்லும் சர்ப்பம் உபகாரம் அறியாதது. அதற்கு உபகாரம் செய்யலாகாது என்றுகூற, அது எப்படி என்று மண்டூக ராசன் கேட்க மந்திரி மகாசங்கரன் சொல்வது.

### *கிளைக்கதை - 2* சர்ப்பமும் எலியும்

ஒரு விஷகாரி, சர்ப்பம் ஒன்றைப் பிடித்துக் குடத்திலே இட்டு அடைத்து அதற்கு உணவாகும்படி ஒரு எலியையும்

பிடித்து உள்ளே போட்டு, குடத்தின் வாயைக் கட்டி வைத்தான். பாம்பு எலியைத் தின்ன புகுந்தது. அப்போது பாம்பைப் பார்த்து எலி சொல்வது, 'நீ பதறாதே. உன்னைச் சிறையில் இருந்து விடுவிக்கிறேன். என்னைத் தின்னாது விடுவாயோ' என்ன, சர்ப்பம் இதற்கு இசைந்து சத்தியம் பண்ணிக் கொடுத்தது. எலியும் 'உன் படத்தை விரித்து விடு. நான் உன்னுடைய படத்தின் மேல் ஏறி நின்று குடத்தின் வாயைக் கட்டியுள்ள சீலையைக் கடிக்கிறேன்' என்றுகூற, பாம்பும் இசைந்து தன் படம் விரித்து நின்றது. குடத்தின் கீழே நின்ற எலியும் பாம்பின் படத்தின்மேல் ஏறி குடத்தின் வாயைக் கட்டியிருந்த சீலையைக் கடித்து முந்திக் குதித்துப் புறப்பட்டது. பாம்பு பிறகே புறப்பட்டது. பாம்பு நாம் பிழைத்தோம். இனி உபாயத்தால் எலியைத் தின்போம் என்று திட்டமிட்டு எலியைப் பார்த்து, 'நீ என்னை விட்டுப் புறப்பட்டுப் போறாயோ என்ன, எலியும் தூர நின்று, இந்தக் காலத்தும் பாம்பிற்கும் எலிக்கும் பகையேயன்றி உறவு உண்டோ? ஒரு காரியத்தாலே நீயும் நானும் மித்தருவானோம். அந்தக் காரியம் இருவருக்கும் நிறைவேறிற்று. இனிப் பழைய படியே நாம் இருவரும் சத்துருக்கள் அல்லவோ? என்று சொல்லி எலி போனது.

ஆதலால் தன்னைப் பிழைக்க வழிவகுத்தது என்றில்லாமல், அது தன்னையே கொல்ல ஆசைப்பட்டது. ஆதலால் சர்ப்பம் உபகாரம் அறியாது. அதற்கு இடம் கொடுக்கலாகாது என்று கூறக்கேட்ட மகாநாகம் சொல்வது நான் தண்ணீர் குடித்தால் உங்களுக்கென்ன தண்ணீர் குறையுமோ? நான் கரையிலே தண்ணீர் தாகத்தால் வருந்தி நிற்க என்னை விசாரித்து உபகாரம் செய்யாது நிற்கிறீர். முன்னே லோபியாய் கெட்ட நரிபோல நீங்களும் கெடுவீர் என்றுகூற நரி லோபியாய் கெட்டதைச் சொல் என்று கேட்க மகாநாகம் சொல்வது.

## *கிளைக்கதை - 4*

### வேடனும் நரியும்

இந்திரபுரம் என்பதொரு மகாநகரம் இருந்தது. அங்கு வாழும் வேடன் ஒருவன் வேட்டைக்குப் புறப்பட்டுப் போகா

நின்றான். ஒரு காட்டானை இவனைக் கண்டு இவனைப் பிடிக்க ஓடிவர வேடன் உயர்ந்ததொரு புற்றின் மேல் ஏறி நின்றான். யானையும் புற்றின்மேல் ஏறிவர, ஒரு சரத்தாலே எய்தான். அம்பு பட்டு யானை விழுந்தது. அந்த அதிர்ச்சியாலே புற்றுக்குள் இருந்த பாம்பு புறப்பட்டு வெளிவந்து வேடனைக் கடித்தது. வேடனும் பாம்பின் தலை அடிவெட்டி தானும் செத்தான்.

இவற்றை ஒரு நரி ஆசையுடன் சம்பிரமித்துக் கண்டது. ஆனை ஆறு மாதத்திற்குப் போதும், வேடன் ஒரு நாளைக்குப் போதும், பாம்பு ஒரு பகலுக்குப் போதும். ஆதலால் இவற்றை அழியாதே வைத்துக்கொண்டு, இன்றைக்கு வில் நாணின் உள்ளதே போதுமென்று கடித்தபோது வில் அம்பு பிண்டத்திலே தைத்து நரியும் செத்தது. மேலும் மகாநாகம் சொல்லலாயிற்று.

## கிளைக்கதை - 5

### இரும்பும் இரண்டு செட்டிகளும்

பண்டு உத்தியோகம் என்னும் நகரிலே தர்மசெட்டி என்றும், அதர்மசெட்டி என்றும் இரண்டு பேர் இருந்தார்கள். அவர்கள் இருவரும் கூட்டாகச் சேர்ந்து இரும்பு வியாபரம் செய்தார்கள். இரும்புகளை இரண்டு நாவாய்களில் ஏற்றிக் கொண்டு இருவரும் ஆளுக்கொரு திக்காகச் சென்றார்கள். தரும செட்டி ஏறிய நாவாய் காற்றுப் பிழையாய், மேற் செல்ல இயலாது மீண்டு புறப்பட்ட இடத்துக்கே வந்தது. அதர்ம செட்டி தீவாந்திரம் போய் விற்று ஒன்றுக்கு நாலாகப் பொன்னேற்றி வந்து ஒருவரும் அறியாத இடத்திலே தனமெல்லாம் புதைத்து வைத்தான். பின் தரும செட்டியிடம் வந்து அவன் வருத்தமானமும் கேட்டு, தான் கொண்டுபோன இரும்புகளை வைத்திருந்த அகத்திலே எலி தின்று விட்டது என்றான். தருமசெட்டி நம் பாவத்தின் விளைவுபோலும் எலி இரும்பைத் தின்றுள்ளது என்று நம்பி இருந்தான். இதை அறிந்த பரிவாகுலத்தானும், பூமிசெட்டி என்பானும் தரும செட்டியை அழைத்து, ‘ஏடா இரும்பை எலி தின்று விடுமோ

இதுவும் அம்மி மிதந்த கணக்கானது என்று சொல்ல, அது எங்ஙனே என்னில்,

## கிளைக்கதை - 6

### அம்மி மிதந்த கதை

மூலக்கிழவன் என்பான் ஒருவன் அம்மி மிதக்கக் கண்டேன் என்று இராசாவுக்குச் சொல்ல, ராசாவும் அது எப்படியாகும் எனக்குக் காட்டு என்ன, என் தகப்பன் கண்டார் என்றான். உன் தகப்பனை அழைத்துக் காட்டச் சொல் என்றான் இராசா. காட்டுகிறேன் என்றான் மூலக்கிழவன். நீ காட்டாவிட்டால் உன்னுடைய எல்லாப் பொருட்களையும் என் படைகள் எடுத்துக்கொள்ளும் என்று சொல்ல அவனும் இசைந்து, காட்டுகிறேன் என்று இராசாவையும்கூட அழைத்துக்கொண்டுபோய் தன்னுடைய தகப்பனைக் கேட்க, அவனும் அம்மி மிதக்கக் கண்டேன் என்றான். நீயே கண்டோம் என்றால் ஒப்பாகுமோ? அன்னிய சாட்சியாகிலும் உண்டானால் சொல்லுவாய் என்றுகேட்க, அன்னிய சாட்சி ஒருவரும் இல்லை என்றான். சாட்சி ஒருவருமில்லாமல் ஒப்புக்கொள்ள இயலா என்று அவன் தனமெல்லாம் பறித்துப் பண்டாரத்திற்குக் கொடுத்தான்.

மூலக்கிழவனும் இராசாவை செயிப்பது எப்படி? பொருளெல்லாம் இழந்தோமே என்று விசனப்பட்டு வனத்திலே திரிந்தான். சில குரங்குகளை வளர்த்து ஆடல் பாடல் கற்பித்து வந்தான். இராசாவைத் தனியாகக் கண்டால் ஆடிப்பாடுங்கள். வேறொருவர்கண்டால்ஓடிப்போங்கள் என்று கற்பித்திருந்தான்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் ராசா வேட்டைக்குப் புறப்பட்டான். மூலக்கிழவனும் கூடப்போனான். ராசா ஒரு மானைக் குறித்துவைத்து அதைத் தொடர்ந்து போனான். மான் போன திசை காணாமல் அவன் ஒருவன் தனியாக நிற்பதைக் கண்டு மூலக்கிழவன் வளர்த்த குரங்குகள் ஆடல்பாடல் நிகழ்த்தின. அதைப் பாத்துக் கொண்டே ராசா நின்றான். ராசாவை நெடுநேரம் காணாது மந்திரகள் ராசாவைத்

தேடிவந்து ராசாவைக் கண்டு, தேவரீர் தனியாக நிற்பானேன் என்று கேட்க, ராசா, சில குரங்குகள் ஆடல்பாடல் கண்டு நின்றேன் என்றான். அதனை நாங்களும் காண்கிறோம் என்று மந்திரிமார்கள் நின்றார்கள். அக்குரங்குகள் ஓடிப்போயின. அதைப் பார்த்த மந்திரிகள் குரங்குகள் ஆடுவதும் பாடுவதும் உண்டோ? இராசாவுக்குப் பித்தேறிற்றோ என்றுகூற, இராசாவும் மலைத்துப் போய் அருகே நின்ற மூலக்கிழவனை அழைத்து, 'நீ சாட்சி சொல்' என்று வேண்ட, மூலக்கிழவனும் சொல்லுவான், மெய்கண்டேனாலும், கடமைக்குச் சாட்சி சொல்லுதல், பிறர்க்குக் காட்டுதல் போன்றவை நான் செய்யாதவையாகும். நீர் சொன்ன குரங்குகளின் ஆடலும் பாடலும் கண்டாற்போல என் தகப்பனும் அம்மி மிதக்கக் கண்ட கதை எப்படிப் பொய்யாகும் என்றுகூற, அது கேட்ட ராசா மூலக்கிழவனிடமிருந்து பெற்ற தனமெல்லாம் திரும்பக் கொடுத்து அவனையும் தன் மந்திரியாக வைத்துக்கொண்டான்.

அதுபோல நீயும் அதர்மசெட்டி அகத்திற்குச் சென்று அவன் செய்த துரோகத்திற்குப் பிரதியாக ஒன்றும் செய்யாய் ஆகிலும், செட்டியகத்திலே செட்டியவன் சொன்ன வார்த்தையைச் செய்கிறேன் என்றுபோய் அவன் புத்திரனை எடுத்துக் கொண்டுவந்தான். அதர்மசெட்டி தன் பிள்ளையை தருமசெட்டி எடுத்துச் சென்றதை அறிந்துவந்து தன் பிள்ளையைக் கொடு என்றான். அதற்கு தர்மசெட்டி 'உன் பிள்ளையைப் பருந்து கொண்டு சென்றது. நான் என்ன செய்ய' என்றான். இரண்டுபேரும் விரோதித்துத் தம் வழக்கை தீர்த்துக்கொள்ள இராசாவிடம் சென்றனர். ராசாவும் இருவரின் வாய்மையையும் கேட்டு உண்மை அறிந்து தர்ம செட்டியிடம் இருந்த பிள்ளையை வாங்கிக் கொடுத்தான். அதுபோல அதர்ம செட்டியிடமிருந்த திரவியத்தைப் பெற்று தர்ம செட்டிக்குத் தந்தான். மேலும் அதர்மசெட்டியை இராசா தண்டித்தார். பொய்யாரும் பொய்யும், மெய்யாகும் மெய்யும் சொல்லிச் செயிக்கவேண்டும். பணமெல்லாம் கொடுக்க மனமில்லாமல் அல்லவா அதர்மசெட்டி தண்டனை அடைந்து கெட்டுப்போனான்.

### முன்கதைத் தொடர்ச்சி

அப்படி நீங்களும் லோபியாய் கெடாதீர்கள். எனக்குத் தண்ணீர் தாருங்கள் என்று பாம்பு வேண்டி நின்றது. அதற்கு கிறுக்கீனனென்னும் மண்டூக மந்திரி சொல்வது, வாரீர் இராசாவே பாம்புக்கும் இடம் கொடுத்தீராகில் ஆப்புப் பிடுங்கின குரங்கு கெட்டாற்போல நாமும் கெடுவோம் என்ன, அது எப்படி என்று மண்டூக ராசன் கேட்க சொல்லுவது.

### ஆப்பு பிடுங்கின குரங்கு

சிங்கவதனம் என்னும் மகாநகரிலே வாழுகின்ற இராசாவுக்கு கூடம் கட்டவேண்டி மேற்கூரைக்காரரும் பனை மரங்களை வெட்டிப் பிளந்தார்கள். அக்காட்டிலே திரிகிற குரங்குகள், நம்முடைய தேசத்திலே புகுந்து மரம் வெட்டுவதேன் என்று அப்பனை மரத்திலே ஏறி இரண்டு புறத்திலும் காலை நீட்டி இருந்து ஆப்புக்களைப் பிடுங்கின பொழுது அதன் இடுக்கில் அகப்பட்டு வெளிவர முடியாமல் கூப்பிட்டுச் செத்தன. ஆதலால் தனக்கு வசமல்லாத காரியத்தைச் செய்தவன் ஆப்புப் பிடுங்கின குரங்குபோல கெடுவான். நமக்கிது ஏற்ற காரியமல்ல என்றுகூற, அதுகேட்ட நாகம் சொல்லும்.

### இரண்டு சக்கரவர்த்திகள்

பண்டு வித்திற சக்கரவர்த்தி என்னும் இராசாக்கள் இருவர் வாழ்ந்து வந்தனர். அவ்விருவருக்கும் ஜனனம் மரணம் இல்லை என்று வாழ்ந்து வந்தார்கள். இருவரும் இராஜ்ஜியம் பண்ணி வாழ்ந்துவரும் காலத்து ஒருநாள் இருவரும் வேட்டைக்குப் போனார்கள். அப்படி போன இடத்திலே யாரும் இல்லா ஒரு தனியிடம். அப்பொழுது அண்ணனுக்கு ஒரு எண்ணம் உதித்தது. தம்பியைக் கொன்றுவிட்டால் கொன்றோமென்று அதனை அறிவார் ஒருவருமில்லை. இவரைக் கொன்றுவிட்டால் நாமே ஏக ராஜ்ஜியம் பண்ணி இருக்கலாம் என்று தம்பியை அவ்விடத்திலே கொன்று போட்டான். மனசாட்சி வருந்த தான் கொன்றதைக் கண்டவர்

யாரேனும் உண்டோ? என்றே பார்த்தான். அப்பொழுது மலைமேல் நின்ற விருட்சங்களெல்லாம் நடுங்கின. வானளாவிய மரம் தன்னால் அசைந்ததேயன்றி மனுஷர் ஒருவரும் அசைக்கவில்லை என்பதை அறிந்து, தமயன், விருட்சமே! ஏன் நீ நடுங்குகிறாய்? ஆயிரம் வருஷம் கழிந்தாலும் அவரவர் செய்த குற்றம் அவரவரே அனுபவிப்பர். அனுபவியாமல் தப்ப இயலாது. ஒருவரும் அறியாத இடத்திலே கொன்றேனாகில் நானே துன்பப் படுவேன். நீ ஏன் நடுங்குகிறாய்? என்று சொல்லி போய் தன் இராஜ்ஜியம் புகுந்து ஏக ராஜ்ஜியம் பண்ணிக் கொண்டிருந்தான்.

இப்படியாக ராஜ்ஜியம் பண்ணி வந்த நாளிலே ஒருநாள் இரவு அர்த்த ராத்திரியில் நகர்சோதனைக்காக புறப்பட்டு நகர்உலா சென்றான். ஒரு தச்சன் தன்னுடைய மனைவியைப் பார்த்து விரக தாபத்தாலே சொல்வான், 'அழகிய புருவங்களையும், செந்தாமரை கண்களையும், அன்னம் தோற்கும் நடையும், நுண்ணிடையும் உடையாய்! என் நெஞ்சை ஏன் நடுங்கவைக்கிறாய்? ஆரண்யத்தில் நின்ற மரங்கள் இராசாவைக் கண்டு நடுநடுங்கி நின்றதுபோல் நீயும் என்னை நடுங்கவைத்தாய்' என்று கூறினான். ராசாவும் அவன் சொல் கேட்டு எப்பரிசினால் இதனை அறிந்தான் அதனை நாம் அறியவேண்டும் என்று அவனை அழைத்து மரங்கள் நடுங்கினதைக் கண்டபடி கூறு என்று கேட்டார். அவனும் தான் மான் வேட்டைக்குச் சென்றபொழுது ராசா தம்பியைக் கொன்றதையும், அதனைக் கண்டு விருட்சங்கள் நடுநடுங்கின தையும் தான் கண்டபடி கூறி இராசாக்கள் இழிவரவு செய்தால் பர்வதங்களும் விருட்சங்களும் நடுங்கும், இராஜ்ஜியம் நில்லாது இராசாக்கள் துரோகங்களும் பழிகளும் செய்யலாகாது என்று சொன்னான். இராசாவும் தாம் ஒருவரும் அறியாமல் கொன்றோம் என்றிருக்கிறோம். இப்படி எல்லோரும் அறிந்துள்ளனரே என்று வெட்கி தன்னையே அழித்துக்கொண்டான். ஆதலால் சகல பிராணிகளுக்கும் மரணம் தப்பாது. நீங்களும்லோபியாது நான் இறங்க ஒருவழயைக் காட்டுங்கள் என்றது. அதற்கு கிறுக்கீனன் என்னும் மண்டூகம் சொல்லும்.

**ஆராயாமல் செய்தால் ஆபத்துவரும்**

மகாநாகம் தன்னுடன் உறவு செய்யும்பொழுது விசாரித்து உறவாகவேண்டும். விசாரியாமல் ஒரு காரியம் செய்தால் ***இரகுகுல வம்சம் இழந்து*** ராசா பட்ட துயர்படுவீர் (என்ன) அது எப்படி எனில் கேட்க,

முன்னே இரகுகுல வம்சத்திலே ஒரு ராசா ஒருதேர் கொண்டு இந்திரபகவானைப் பகைவரிடமிருந்து காத்தான். அதனால் தசரத சக்கரவர்த்தி என்று பெயர் பெற்றான். அந்த தசரதன் என்னும் ராசா ஒருநாள் வேட்டைக்குச் சென்றான். ஆரண்யத்திலிருந்த ரிஷிகள் ஆசிரமத்திற்குச் சென்று ரிஷிகளிடம் ஆசீர்வாதம் பெற்றான். நாங்கள் இருக்கும் ஆரணியத்திலுள்ள ஆற்றின் கரையிலிருந்து தவம் செய்யும் பொழுது காட்டு யானைகள் வந்து துன்புறுத்து கின்றன. இத்துன்பத்தினின்று எங்களைக் காக்க அவ் யானைகளை இன்றைக்கே கொன்று தரவேண்டும் என்று வேண்டும் என்று கேட்க, ராசாவும் அதற்கு இசைந்து யானைகள் தண்ணீர் அருந்தவரும் படித்துறைகளிலே ஒளிந்திருத்தான்.

அப்பொழுது அந்தகன் என்னும் ரிஷியும் அவர் தேவியாகிய சுகதேவி என்பாளும் தங்கள் அன்பின் கனியாகிய சுந்தரன் என்னும் புத்திரன் வழிகாட்ட இருந்துதவம் செய்வார்கள். இவ்வாறு இருக்க ஒருநாள் ராத்திரி தண்ணீர் தாகிக்க முனிவர் தன் மகனை அழைத்து கமண்டலத்திலே தண்ணீர் வேண்டும் என்றார். கமண்டலத்தில் நீர் இல்லாத படியால் அச்சாமத்தில் புறப்பட்டுத் தண்ணீர்த் துறையிலே போய் தண்ணீர் முகவா நிற்க, ஒளிந்திருக்கும் ராசாவும், கமண்டலத்தில் தண்ணீர் முகக்கும் சத்தத்தினை யானை வந்து தண்ணீர் குடிக்கும் சத்தம் என்று எண்ணி அம்பு எய்தான். அம்புபட்டு ரிஷி குமாரனும் அய்யோ என்று அலறி விழுந்தான். மனித குரல் கேட்டு ராசாவும் அஞ்சி சென்று பார்த்து அம்பெய்து கிடந்த முனிவர் மகனை மடியில் கிடத்தி நீ யார் பிள்ளாய்? என்ன, அவனும் தான் யார் என்றும், தான் வந்த காரியத்தையும் சொல்லி இந்தத் தண்ணீரை வாய்

திறவாதே சென்று என்னுடைய மாதாபிதாவிற்குக் கொடுப்பாயாக என்று சொல்லி அப்பொழுதே உயிர் நீத்தான்.

அர்த்த ராத்திரியிலே ராசாவும் தண்ணீர் கொண்டுவந்து ரிஷிகள் முன்னே வைத்து வாய் திறவாது நின்றான். ரிஷிகள் தன் மகன் வந்துள்ளான் என நினைத்து இந்நேரம் தாழ்ப்பானேன் என்று கேட்க, தசரதன் ரிஷிகளிடம் பொய் சொல்ல ஒண்ணாது உள்ளபடி சொல்வோம் எனச் சொல்லலானான்.

தான் அரசன் என்றும், ரிஷிகளுக்கு உபகாரம் செய்ய வேண்டி வந்த படியும், உண்மை அறியாமல் யானை என்று அம்பு எய்தபடியும், அதனால் ரிஷிகள் மகன் இறந்தபடியும் கூறி, அதற்குப் பரிகாரம் செய்ய வந்துள்ளேன். நான் மரிக்கத் தயாராக உள்ளேன். என் இராஜ்ஜியத்தை நீங்கள் ஆளுங்கள் என்று கூறினான். அந்தகனான ரிஷியும், அவர் மனைவி சுக தேவியும் நீ அறியாமல் என் மகனை உயிரிழக்கச் செய்தாய். ஆதலால் புத்திர சோகத்தால் மரணம் எனச்சபித்து மரித்தார்கள். ஆதலால் ராத்திரி காலத்திலே விசாரியாமல் ரிஷிகுமாரரை ஆனை என்று கொன்ற தசரத சக்கரவர்த்தி துயர்பட்டதுபோல பின்பு துயர்பட வொண்ணாது என்று சொல்ல.

மண்டுக அரசனும் எனக்கு மித்துருவாய் வந்தது மரிக்கலாகாது. நம்முடைய மித்துரு இந்த (வத்தாரனை) குளத்தில் வாழ வர சம்மதிப்போம் என்று சொல்ல, மற்ற மண்டூகங்களும் மண்டூகராசன் எண்ணத்திற்குச் சம்மதித்து மகாநாகத்திற்கு வழிகாட்டி இடம் கொடுத்தார்கள். மகாநாகமும் இறங்கி சில நாட்களுக்கு நல்ல ஆகாரம் பெற்றோம் என்று மனத்தினுள் மகிழ்ந்து, நித்தமும் வேண்டும் பேரை கொன்று பட்சிக்கும். அதுகண்டு மண்டூகங்களெல்லாம் வருந்தி மண்டூக ராசாவைப் பார்த்து பண்டு கேட்டினை அடைந்தவாறு போல நாமும் கெடும் படிக்கு பாம்புக்கு இடம் கொடுத்தாயோ ராசாவே என மண்டூக ராசா பண்டு கேட்டினை அடைந்தவாறு எங்கனே என குரவனென்னும் மண்டூகம் சொல்லும்.

## நரி கேடு அடைந்த கதை

கவுமீல விசேஷத்து ராசா இரண்டு கிடா வளர்த்தான். அந்தக் கிடாக்கள் மேயப் போன இடத்திலே இரண்டும் ஒன்றை ஒன்று எதிர்த்துப் பாய்ச்சலுக்கு நின்றது. அவை பாய்ந்து போரிட்டு நிற்பதைக் கண்ட ஒரு நரி மகிழ்ச்சி கொண்டு இவை இற்றுப்பட்ட துண்டாகில் நமக்குப் பட்சன மாகும் என்று காத்து நின்றது. அவையும் ஒருகாலும் விடுதல் படுதல் இன்றி பாய்ந்து சலிக்காமல் இரண்டும் போரிட்டு நிற்பதைக் கண்ட நரி இவை இற்றைக்கு மரிக்காது. நாம் எதற்காக காத்திருக்கவேண்டும். இவற்றின் தலையில் பாய்கிற உதிரத்தையாவது நக்கிப்போவோம் என்று கருதி மினவுவாரைப் போலச்சென்று உதிரத்தை நக்கும் அளவில் இரண்டு ஆட்டுக் கிடாய்களும் பாய்ந்து போரிட நடுவே அகப்பட்டு நரி செத்தது.

## பிராமணன் கெட்டது

ஒரு பிராமணன் முன்னாள் மணம் கொண்ட பெண் சோரம் போனது கண்டு அவளை வெறுத்துத் துறந்து தீர்த்த யாத்திரை போனான். மீண்டு வரும்பொழுது சாதுவாய் ஒருவரையும் தரிசிக்காமல் இருப்பாள் ஒரு பெண்ணை விவாகம் பண்ணவேண்டும் என்று தேடி நின்றான். அப்பொழுது அந்நிய தேசத்திலே பிராமணனுக்கு ஒரு பெண் பிறந்தது. அக்குழந்தைக்குச் சாதகம் பார்த்தபொழுது இந்தப் பெண்ணை இரும்புக் கூட்டுக்குள் வைத்து வளர்த்தாலும் சோரம் போவாள் என்றிருந்தது. அதனால் அவளை இரும்பு அறைக்குள் வைத்து அந்நிய புருஷர் முகம் காணாது கண்ணைக் கட்டி வளர்த்தான். தீர்த்தயாத்திரைப் போய் திரும்பி வருகிற பிராமணன் இச்செய்தி கேட்டுவந்து, இந்தப் பெண்ணை எனக்குத் தரவேண்டும் என, அந்த பிராமணன் எனக்கு இவள் ஒருத்தியே பிள்ளையாக உள்ளாள். இவளைச் சந்ததியாக வளர்த்தேன். இவளை ஒரு மாமி, நாத்தனார் நெருங்காமல் வஞ்சிக்காமல் தன் சுதந்தரத்தில் வாழ வகை செய்தால் பெண் தருவேன் என்றான். தீர்த்த யாத்திரை வந்த

பிராமணனும் அப்படியே சத்தியம் பண்ணிக்கொடுத்து விவாகம் பண்ணினான். இவளும் பத்தினியாய் வாழ்ந்து ஒரு புத்திரனைப் பெற்றாள். பிள்ளைக்கு முலை கொடுத்துச் செல்லா நிற்க இவளும் சோர பத்தா வண்டைக்குப் போவதை இந்தப் பிராமணன் கண்டு சோதிடம் சொன்னபடியே ஆயிற்று என்று அவள் சோர பத்தாவண்டை செல்வதைத் தானே கண்டறிந்து இவள் சோரம் போனாள் என்று நிச்சயித்து இவளை இம்சை பண்ணினால் சத்திய தோஷமாகும். இவள் முகத்திலே விழித்த தோஷம் கெட கங்கா ஸ்நானம் ஆட வேண்டுமென்று அவளை விட்டுச் சென்றான்.

**மூன்றாவது கெட்டது**

கங்கைக்குப் போற இப்பிராமணன் ஒரு சாலியன் அகத்தே சென்று இற்றை இராத்திரி அளவும் நித்திரை பண்ண இடம் தரவேண்டும் என்று கேட்க, சாலியனும் முன் கூடத்திலே படுத்திருந்து போம் என்ன, அவனும் அந்தக் கூடத்திலே படுத்திருக்கையில் சாலிச்சி சோரஞ் செய்தாளென்று சாலின் அவளை அடுத்துத் தறியுடனே கட்டி வைத்து உள்ளே போயிருந்தான். அதன் பின்பு இவளுக்கு நட்பாள் ஒரு நாவிச்சி வந்து சோரப் பத்தாவை அழைத்து வந்து ஒரு இடத்திலே வைத்து இவளை வாவென்று அழைக்க நான் அவனிடத்தே போய் வருமளவும் இந்தத் தறியுடனே கட்டுண்டு நில், உன்னை என் புருஷன் அடித்தாலும், குத்தினாலும் என்ன செய்தாலும் நீ ஒரு மறுமாற்றமும் சொல்லாதே என்று நாவிச்சியைக் கட்டிவைத்துப் பொனாள்.

இவர்கள் இரகசியமாகப் பேசிய பேச்சின் ஒலியைக் கேட்ட சாலியன் வந்து அடிபட்டுக் கட்டுண்டு இருக்கையிலும், சோர பத்தாவுடனே பேசினாயோ என்று தன் புடவை அறுக்குங் கத்தியாலே மூக்கை அறுத்துப்போட்டு உள்ளே புகுந்தான்.

பின்பு சாலிச்சி வந்து இவளைப் பார்த்து வியாகுலப் பட்டு நீ அஞ்சாதே நானுன்னைப் பரிகரிக்கிறேன் என்று

நாவிச்சியைக் கட்டவிழ்த்து விட்டு போகச் சொல்லி தான் கட்டுண்டு நின்றாள். பின்பு சாலியன் வந்து யாருடன் பேசி நின்றாய். மூக்கறுப்புண்டும் இன்னமும் தீக்குணம் தவிர்க்க வில்லையோ என்ன, நீ என்னை விசாரியாமல் செய்கிறாய். நான் சோர ஸ்ரீயானால் மூக்கறைச்சியாகிறேன். பதிவிரதை யானால் அற்ற மூக்குப் பொருத்தி இருப்பதென்ன என்றுகூற இவனும் விளக்குக் கொண்டுவந்து பார்க்கையில் இவள் மூக்கு நன்றாய் இருந்ததுகண்டு நாமறியாமல் செய்தோம். இவள் பதிவிரதையாம் என்று பயப்பட்டு இவளுக்கு அனேகம் வஞ்சனை, அவஸ்தைகளைப் பண்ணினேன். செய்த பிழையைப் பொறுத்துக்கொள் என்று மன்றாடி வேண்டி பின்னையும் அவளை ஆண்டுக்கொண்டு சமுசாரம் பண்ணினான்.

இதையெல்லாம் முன்கூடத்திலே படுத்திருந்த பிராமணன் கண்டு நங்கை உபாயத்தாலே பதிவிரதையானாள் என்று அங்கிருந்து புறப்பட்டு சவரச்சியின் நிலையையும் அறிவோம் என்று சவரம் பண்ணிக்கொள்வான் போல நாவிதன் பக்கம் சென்றான். நாவிச்சியுங் கருவி எடுக்கப் புக்க போது நழுவி மூக்கிலே விழுந்து மூக்கற்றது என்று கூறாநிற்ப இதனை நாவிதன் மெய்யென்று எண்ணி தன்னுடைய பாரியாள் ஒன்றும் அறியாப் பேதை கத்தி எடுக்கப்போய் கத்தி நழுவி விழுந்து மூக்கற்றது என்று மூக்குப் பொருத்திக் கட்டி நாவிதனும் துக்கித்திருந்தான். இவற்றையெல்லாம் பிராமணன் கேட்டு நின்று ஸ்ரீகளை ஒருவராலும் நம்ப இயலாது. தன் மட்டிலுமல்ல என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டுபோனான்.

ஆதலால் நரியும், பிராமணனும், நாவிச்சியும் தன்னால் வருங்கேட்டினை அடைந்தாற்போல சர்ப்பத்தின் வார்த்தையைக் கேட்டு விசுவதித்து இடம் கொடுக்கலாகாது. நம்பி இடம் கொடுத்தால் நாம் கேடு அடைவோம் என்றது.

நம்பி இடம் கொடுத்து நாம் அடையும் பரிசு என்போல் என்னில் பண்டு உத்தியோகம் சொல்லிக் கேட்டவரைப்போல

உள்ளது என்ன, அது எப்படி என்று மண்டூகராசன் கேட்க, வினசாரியன் என்னும் மண்டூகஞ் சொல்வது.

அவந்தி தேசத்து ராசா ஒருவன் அருருடன் ஆட்சி செய்துவந்தான். எட்டுத் திக்கு ராசாக்களும் பணிவிடை செய்ய இந்திர லோகத்து இந்திரன் வீற்றிருப்பதுபோல சிங்காதனத்தில் எழுந்தருளி இருந்தான். அவன் விருத்தனாக இருந்தவிடத்தும் வாலப் பிராயத்தான் போல் உடற்கட்டுக் கொண்டவனாய் வெகு சாதுரியத்துடன் இருப்பான்.

இப்படி இருக்கும் நாளில் ஒருநாள் இவனைக் காண்பதற்காக செம்படவன் ஒருவன் ஒரு கனத்த கன்னி வாளையைக் கொண்டு வந்து காணிக்கையாக்கி, ராசா அருள் வேண்டி நின்றான். அப்போது இந்த ராசா மச்சத்தைப் பார்த்து இந்த மச்சத்திற்குப் பூமான சிரத்தை இல்லையோ என்ன, இந்த வார்த்தைக்குச் செம்படவன் பிரத்தியுத்தரம் சொல்ல பயப்பட்டு நின்றான். அப்பொழுது இந்த மச்சம் ராசாவைப் பார்த்து நகைத்துச் செத்தது. ராசாவும் தன் மந்திரியை அழைத்து இந்த மச்சம் நகைத்த காரணம் என்ன என்று கேட்க, அவனும் பதில் ஒன்றும் அறியாது தொழுது நின்றான். எட்டு நாளையில் காரணத்தை விசாரித்துச் சொல்லவேண்டும். இல்லை எனில் ஆக்கினைக்கு ஆளாவாய் என்றுகூறிச் சென்றான்.

ராசா சென்றபின் மந்திரியும் தன் கிரகம் புகுந்து எப்பொழுதும் போல பாரபத்தியம் பண்ணாமல், ஒருவருடனும் உரையாடாமல் பெருமூச்சுவிட்டவனாய் நித்திரை பண்ணினான். இந்த மந்திரி மகன் துட்டனாய், துற்பத்தி உடையவனாய் தந்தையால் வெறுக்கப்பட்டவனாய் இருந்தான். அவன் தன் தந்தையின் மாறுபட்ட நிலையைக் கண்டு தன் மாதாவைப் பார்த்து, அய்யன் பெருமூச்செறிந்து வருந்தி இருக்கக் காரணம் என்ன என்று நல்புத்தி உடையவனாய் கேட்க, அதைக் கண்டு அவன் அன்னை அதிசயித்து மகிழ்ந்து, இருவருமாக மந்திரி பக்கம் சென்று, நித்திரையினின்று எழுப்பி மஞ்சனமாடி, அமுது அருந்த

வேண்டும் என்றார். மந்திரியும் தன் குமாரனைக் கண்டு பெருமூச்சுவிட்ட அளவில், இப்படி வருந்தி மூர்ச்சித்திருக்க காரணம் என்ன என்று மகன் கேட்க, மந்திரியும் ராசா சொன்ன செய்தி, மச்சம் நகைத்த செய்தி, இட்ட தவணையில் சொல்லாவிட்டால் பெற இருக்கும் ஆக்கினையையும் கூறி இந்த மட்டில் என் வாழ்வு உள்ளது. இதில் போசனம் என்ன, நீராடல் என்ன வந்த வழியே போங்கள் என்று தன் மனைவி யையும் மகனையும் கோபிக்க, மந்திரி மகன் தந்தை அருகு சென்று நான் அறிவற்றவன், துர்ப்புத்தியாளன்தான். எனினும் தேவரீரை ஆக்கினை இடாதபடிக்கும் ராசாவின் உத்தாரச்சீட்டு வாங்கி வருகிறேன் என்று கூறினான். மந்திரியும் நாம் ஆக்கினை பெறப்போவது உண்மைதான். இவனுடைய புத்தியையும் அறிவோமே என்று அரசனிடம் போவாயாக என்றான்.

மந்திரி மகனும் ராசாவைக் கண்டு தெண்டனிட்டு அஞ்சலித்தவனாய் நின்ற அளவில் வந்த காரியம் என்ன என்று அருளிச் செய்ய மந்திரி குமாரன் விண்ணப்பஞ் செய்தான்.

தேவரீர் தகப்பானார் இராச்சியம் பண்ணின நாள் முதல் பிரதான மந்திரியாய் இருந்தவர் அடியனுடைய பிதாவானவர் அவருடைய வார்த்தையைக் கேட்டு அவர்களும் இராச்சியம் பண்ணினார்கள். தேவரீரும் இந்நாள் வரை அப்படியே காரியம் பண்ணி வந்தீர்கள். இப்பொழுது அற்பகாரியத் திற்காக பிரதான மந்திரி ஆக்கினை பெற்றான் என்றால் தேசத்திற்கு அபகீர்த்தியாகி விடும். மந்திரியானவன் கெட்ட காரியம் சொல்லமாட்டாமல் ஆக்கினை பெற்றான் என்றால் ராசாவாகிய தங்களுக்கும் அபகீர்த்தியாகிவிடும். தண்ணீர் குளத்து மச்சம் நகைத்தது என்றால் சும்மா ஒன்றும் சொல்ல வொண்ணாது. தேவரீர் சித்தத்திற்குச் சரியான விண்ணப்பஞ் செய்கிறேன். விண்ணப்பஞ் செய்யமாட்டாத பொழுது அடியேனை ஆக்கினையிடும் என்று விண்ணப்பம் செய்தான்.

ராசாவும் எண்ணிப்பார்த்து பிரதான மந்திரி சொல்லாத பொழுது ஆக்கினையிட வேண்டும். அதற்குப் பதில் இவனை

ஆக்கினைக்கு ஆளாக்கினால் அவகீர்த்தி வாராது. இது ஏற்புடையது என்று மனதிற்குள் எண்ணி இட்ட தவணையில் சொல்லாவிட்டால் அவசியம் ஆக்கினை இடுவோம் என்றுகூறி தவணையும் இட்டு பிரதான மந்திரிக்கு ஆக்கினை தேவை இல்லை என்று உத்தாரச் சீட்டும் கொடுத்து அனுப்பினான். மந்திரி மகனும் உத்தாரச் சீட்டை வாங்கிக் கொண்டு போய் பிதாவிடம் கொடுத்து நிற்க, பிதாவும் இவன் ஆற்றலைக் கண்டு சந்தோஷித்து தன் மகனுடன் மஞ்சனமாடி ஒருநாளும் கூடவைத்து உண்ணாப் புத்திரனைக் கூடவைத்துக் கொண்டு போசனம் பண்ணினான்.

பின்பு ராசா இட்ட தவணையில் சொல்லாத பொழுது ராசா ஆக்கினை இடுவான். அதைவிட தேசாந்திரம் புறப்பட்டு போதல் மேல் என்று தன் வீட்டை விட்டுப் பிரிய மிகவும் வருந்தி பட்டணத்தைவிட்டு புறப்பட்டு அனேகம் ஊரும் கரடும் கடந்து நிற்கையில் ஒரு மகத்தான தாய் இருப்பதொரு அடவியிலே ஒரு பாதையாய் வழிப்போவதுங்கோடி வழியாக ஒரு வழிபோவதும் கண்டு அவ்விடத்திலே திகைத்து நிற்க,

அந்த வழியிலே ஒரு ராசா ஒரு காரியத்தினாலே தன்னுடைய மந்திரியைத் தண்டித்து உன் விருப்பப்படி பயணம் பண்ணிக்கொண்டிரு, நம் சமயத்திற்கு வாராதிருப் பாயாக என்று விடுத்துச் செல்ல அந்த மந்திரியும் வியாபாரம் பண்ணுகிற செட்டிகளுடன்கூடி வியாபாரம் பண்ணித் திரிவான். அந்த மந்திரி அந்த வழியிலே ஆயிரம் சகடையிலே சரக்கேற்றிக்கொண்டு வாராநிற்ப அவனைக் கண்டு மந்திரி மகன் தானும் உடன் வருகிறேன் என்று வேண்டி நிற்ப, மந்திரியும் நீயும் கூடவருவாயாக. நம்மை நீ நம்பிவர நம்முடைய பயணத்திலே இட்டுப் போய் விடுகிறோம் என்று கூட்டிக்கொண்டுபோனான்.

அந்த அடவியைக் கடந்துபோய் பின் ஒரு ஊர் கண்டனர். அவ்வூரிலே ஒரு வாவியும், செங்கழுநீர் ஓடையும் தாமரையுமுடைத்தாய், அழகு இருப்பிடமாய், புட்ப

விருட்சங்களும் நிறைந்து நீரும் சௌந்தரியமாய் இருந்த படியினாலே சகடை பூண்ட எருதுகளுக்கும் தண்ணீர் காட்டி அங்கே அசனம் பண்ணி இருந்தனர்.

அவ்வூரிலே வேளான் பூடுபாலன் என்பான் ஒருவன் ஆயிரம் எருது பயிர் செய்து விளைந்த நெற்குவியலை வகைப்படியே கொட்டாரத்திலே சேர்த்து வைத்தான். பின்பு நல்ல நாளிலே பிராமணர் இட்ட முகூர்த்தத்திலே கிராம தேவதைகளுக்குப் பூசை பண்ண, தன்னுடைய மித்துருவாய் ஊரில் உள்ள அனைவரையும் கூட்டிக்கொண்டு சங்கு, தாரை, பேரிகை மற்றுமுண்டான வாத்தியத்துடனே ஆரவாரமாய் சென்றான்.

மந்திரி மகனும் ஆரவாரிக்கிறது என்னவென்று அறிந்து வருகிறேன் என்று மந்திரியாகிய செட்டியாரைக் கேட்க, அவர் வழிமேலே போகிற நமக்கு இதனால் ஆகிறது ஒன்றுமில்லை வேண்டாம் என்று கூறினார். மந்திரி மகனும் அவர் சொல் கேளாமல் சென்று பார்த்து மீண்டு வருகிறேன் என்று மகா வேகத்துடன் ஓடிச்சென்று பார்க்க, குறிப்பிட்ட முகூர்த்தத்திலே நெல்லு எடுப்பிக்கிற நேரத்திலே, பூமி பாலனே இது உண்ணும் பண்டமோ உண்ணாப் பண்டமோ என்று கேட்டான். பூமிபாலன் இவனைக் கோபித்து தன்னுடைய ஆளடியாரைப் பார்த்தான். அவர்களும் இவனை மிலாறு கொண்டு அடித்தனர். பின் ஓடிப்போய் மந்திரியாகிய செட்டிப்பின்னே ஒதுங்கினான். தொடர்ந்து வந்த அடியாளர்கள் செட்டியைப் பிடித்துக்கொண்டு உன்னுடைய ஆளைக்கொண்டு இப்படி சொல்லுவிப்பாயா என்று கோபிக்க செட்டியும் அவர்களுக்கு நல்ல வார்த்தை சொல்லி அனுப்பிவைத்தான். துஷ்டரைச் சேர்ந்த தோஷம் பலித்தது என்று வியாகுலப்பட்டு பின்பு நம்பி வந்தவரை வெரட்ட ஒண்ணாதே என்று கோபமாய் அவனையும் கூட்டிக் கொண்டுபோனான்.

நாகப்பட்டணம் என்னும் நகரிலே நாபாலன் என்கிற ராசாவுக்கு ஆயிரம் குதிரை கொண்டுவந்து, அதில்

இலச்சணமுள்ள குதிரையிலே ராசா ஏறவேண்டும் என்று பிராமணர் இட்ட முகூர்தத்தத்திலே ஏறுவதற்காக முந்தின அசனமுட்டி அங்கவடியிலே பாதம் வைத்து ஏறும் அளவில் அந்த ஆரவாரம் அறியவேண்டும் என்று மந்திரியாகிய செட்டி விலக்கவும் கேளாமல் மந்திரி மகன் ஓடிவந்து ராசாவைப் பார்த்து இந்தப் பட்டணமும் குதிரைகளும் ஏற்றமோ இறக்கமோ என்று கேட்டான்.

அதனைக் கேட்டு ராசா கோபம் கொண்டு பரிவாரத்தைப் பார்த்த அளவில் மந்திரி மகன் ஓடிப்போய் சகடையிலே மறைந்து ஒளிந்தான். தொடர்ந்து வந்த சேவகர்கள் செட்டியாரைக் கோபித்து அவரிடம் இருந்த சில சரக்குகளைப் பறித்துச் சென்றனர். செட்டியும் இன்றைக்கு இந்த மட்டில் பிழைத்தோம் என்று சகடைகளை ஓட்டிக் கொண்டுசென்றான்.

இவ்வாறு சகடைகளை ஓட்டிக்கொண்டு செல்லும் அளவில் வழியிலே ஒரு பட்டணத்தைக் கண்டனர். அந்தப் பட்டணத்திலே ஒரு கனத்த செட்டி நாகநதை செட்டியார் என்றவன் செத்துப்போக அவனை மயான பூமியிலே பறைமேளத்துடன் சுற்றத்தார் எடுத்துக்கொண்டு போகா நிற்கக் கண்டு இந்த மந்திரி மகனும் அவர்களைக் கேட்டால் முன்னைப்போல ஏதேனும் விளையும் என்று பயந்து, பிறகே பிந்திப் போறபேரைக் கண்டு செத்து எடுத்துப் போறவாறென்ன என்று கேட்க அவர்களும் இந்தப் பட்டணத்திலுள்ள பெரிய செட்டியார் நாகநதை செட்டியார் என்றுகூற மந்திரி குமாரன் இந்தச் செட்டியார் செத்துச் செத்தவரோ, சாகாமல் செத்தவரோ என்று கேட்க அவர்களும் போடா பைத்தியக்காரா என்று கூறிப் போனார்கள். செட்டியாரும் இவனுக்கு வாய் சும்மா இராது. இவன் வாயாலே கெட்டுப் போறவனே. இதில் சந்தேகமில்லை என்றுகூற, மந்திரி மகனும் என்னுடைய துர்புத்தியாலே கேடுகள் வந்தன. இனி இப்படி ஒத்த காரியங்களை வாராது என்று கெஞ்சிக்கேட்க, செட்டியாரும் கோபம் மாறி இவனையும் கூட அழைத்துக் கொண்டு சென்றார்.

சிறிது தூரம் சென்ற பின்பு பெரிய பட்டணம் ஒன்று கண்டனர். மந்திரி குமாரன் இப்பட்டணத்தின் பேர் என்ன என்று கேட்க செட்டியாரும் இது நாமிருக்கிற ராசமாபுரி என்கிற பட்டணமாய் இருக்கும். இதனை மகேந்திரன் என்கிற ராசா ராஜ்ஜியம் பண்ணிக்கொண்டிருக்கிறார் என்றார். மந்திரி மகன் செட்டியாரே ! உம்மை ஒரு காரியம் கேட்கவேண்டும் என்று இருக்கிறேன் என்றான். செட்டியாரும் அதனைச் சொல்லும் என்ன, உமக்குப் பிள்ளைகளுண்டோ, என்ன, செட்டியாரும் நமக்குப் பிள்ளைகள் உண்டென்றார். மந்திரி மகன் அதில் உமக்குப் பிறந்த பிள்ளைகள் எத்தனை பேர் என்று கேட்டான். கேட்ட அளவில் செட்டியாரும்மெத்த கோபித்து அவனை வைது தோளிலே இருக்கிற துலாக் கோலாலே அடித்து ஓட்டிவிட்டு செட்டியாரும் வீடு போய்ச் சேர்ந்தார்.

வீட்டிற்கு வந்த செட்டியார் தன்கைப் பிள்ளைகள் முகம் பாராமல், தன்னுடைய ஸ்ரீயையும் முகம் பாராமல் (கோபமாய்) முசிப்பாய் இருந்தான். செட்டியாரைப் பார்த்து முசித்திருக்கக் காரணம் என்ன என்று அவர் புத்திரியாகிய கன்னிகை சர்வலட்சணமுடையவள், இளவயதுடையாள், வாழ்க்கைப் படாதிருப்பாள் மதனமோகினி என்பாள் வினவின விடத்து உன்னுடன் பேசும் செய்தி அல்ல உன்னுடைய மாதாவிடம் சொல்லுகிறேன் நீ போவாயாக என்று சொல்ல அவளும் ஒதுங்கிப் போய் ஒற்றாளாய் கேட்டு நின்றாள்.

மந்திரியாகிய செட்டியாருடைய ஸ்ரீயும் வந்து காரணம் என்னவென்று கேட்டவிடத்து தான் போனவாறும், சரக்கேற்றி வந்தவாறும், வழியில் அந்நியன் வாலவயதாயிருப்பான் ஒருவனைக் கண்டு தன்னுடன் கூட்டிக் கொள்ள, அவனைக் கையுதவியாய் இருப்பான் என்று அழைத்துக்கொண்டு வந்த வாறும், அவனாலே நாலிரண்டு இடத்திலே விபத்து வந்ததும், பின்பு தன்னை வினவின வர்த்தமானமும் சொல்லி வியாகுலப்பட, உமக்கு வியாகுலம் வருவானேன். உம்முடைய மகிமையைப் பாரீர் என்று கோபித்துக் கொண்டார்.

இந்தச் செய்தியை ஒற்றாளாய் கேட்டிருந்த புத்திரியாகிய மதனமோகினியும் தன் பிதாவைத் தெண்டனிட்டு அவன் வித்தையில் பெரியவன், அவனைக் கூட அழைத்துவராமல் ஓட்டிவிடலாமோ என்று கேட்டாள். அவன் வித்தையில் பெரியவன் என்பதற்கு ஏது சொல்லென் மதனமோகினியும் சொல்வாள்.

வேளாளனுக்கு உண்ணும் பண்டமோ, உண்ணாப் பண்டமோ என்றது ராசா வானவனும் நீதியாக ஆறிலொன்று கடமை கொண்டு விட்ட பண்டம், கடன் படாமலிருந்த பண்டம் தன் வீட்டில் வைத்து உண்டு சுகமே இருக்கிறதே உண்ணும் பண்டமாகும். உண்ணாப் பண்டமாவது ராசாவானவன் நீதியல்லாமல் எடுத்துக்கொண்டு மீதியாய் விட்டதை முன்னே கடன் வாங்கினப் பேருக்கு கொடுக்கிறதே உண்ணாப்பண்டம் என்றாள். அதனை அறியாமல் அவன் கோபித்தான்.

ராசாவுக்கு சொன்ன ஏற்றமோ இறக்கமோ என்றது, ஏற்றமாவது மறு மண்டலத்திலே ராசாவுக்குத் திறையிட மறுமண்டலத்தார் கப்பம் அனுப்பின அசுவத்திலே ஏற்றமாக ஏறுவதே ஏற்றமாகும். இறக்கமாவது மறு மண்டலத்தார்க்கு கப்பம் அனுப்பிக்கையில் பொன்னிட்டு, தெண்டனிட்டு இறக்கத்துடன் வாழுகிறதே இறக்கம் என்றாள். இதையறியாமல் ராசாவும் கோபித்தார்.

செத்து எடுத்துக் கொண்டு போற செட்டியாரைச் சொன்னது. செத்துச் செத்தவனாவது, உயிரோடு இருக்கையிலே செத்தவனாகிறவன் கோள்கள் சொல்லியும், ஒருவர் குடியைக் கெடுத்தும், பிறதாரத்திற்கு இச்சித்தும், இதனால் இழிவுபட்டு நாலுபேர் முன்னே திரிய வெட்கியும், தர்மம் அல்லாமல் அதர்மமே பண்ணி வாழ்பவன். அனைவரும் இவன் பொல்லாதவன். இவனுக்குச் சாவு வராதோ என்று வெறுக்கும்படியாக வாழ்கிறவன் உயிரோடும் செத்தவனாவன். அப்படி வாழ்ந்து செத்தவன் செத்துச் செத்தவனாவான்.

சாகாமல் செத்தவன் யார் என்றால் தர்மங்களைப் பண்ணியும், கன்னிகா தானங்கள் செய்தும், குளத்தை வெட்டியும், தோப்பு வைத்தும் இப்படி அழியாப் பதவியாகிய தர்மங்களைப் பண்ணி இன்னான் என்று பெயர் பெற்றவனே சாகாமல் செத்தவன். ஆதலால் செத்தவன் புண்ணியவானா? பாவியா? என்று கேட்டான். அவனும் இதை அறியாமல் கோபித்தான்.

செட்டியாரே உனக்குப் பிறந்த பிள்ளைகள் எத்தனை? பிறர்க்குப் பிறந்த பிள்ளைகள் எத்தனை? என்று கேட்டது, புத்திரனாய் பிறந்து, இவனுடைய உடைமைகளுக்கு உரியனாய் இடங்கொடுக்கவும், தனங்குலையாமல் காக்கவும் பிண்டக் கிரிகையும் தகனக்கிரியையும் செய்ய உரித்தானவனே தனக்குப் பிறந்தவன். பிறர்க்குப் பிறந்த பிள்ளையாவது புத்திரியாகப் பிறந்து போற்றிமையுடனே வளர்த்து, பிறரகம் புகுந்து, புக்கவிடத்து ஆதினத்திற்குக் கர்த்தாவாகாமையானே பெண்ணாகப் பிறந்ததே பிறர்க்குப் பிறந்தது. ஆதலால் உமக்கு ஆண் பிள்ளை எத்தனை? பெண் பிள்ளை எத்தனை என்று கேட்டால் அதனை அறியாமல் கோபித்தீர். இப்படி அறிவால் மிகுந்தவனை அரிதாகத் தேடி அழையும் என்று மதனமோகினி சொன்னாள்.

செட்டியாரும் அவனைத் தேடி அலைந்து கேட்ட பொருள் கண்டாற்போல சந்தோஷத்துடன் அழைத்து கொண்டுவந்து ஊரும், பேரும், குலமும் கேட்டு, தம்முடைய நிலையும் சொல்லி ஒத்த குலமென்று அறிந்து மகிழ்ந்து பலர் மதிக்கும்படி மதனமோகினியைப் பாணிக்கரணம் பண்ணிக் கொடுத்தார். இருவரும் அதிக போகங்களை அனுபவித்துக் கொண்டு கரணமுயக்கத்திலே அழுந்தி இருவரும் ஒரு பிராணன் என்ன இரவு பகல் அறியாமல் இன்பமாய் வாழ்ந்தார்கள்.

இப்படி இருக்கிற நாளிலே ஒருநாள் மந்திரிகுமாரன் தன் பெற்றோர் எண்ணம் வர தன்னுடைய மாதா பிதாவும் என்ன செய்தாரோ ராசா மூர்க்கன்? நாம் வருமளவும் சம்மதித் திரும்பாரோ. அல்லது தன்னுடைய பிதாவை ஆக்கினைப்

பண்ணியிருப்பானோ தெரியவில்லையே என்று விசாரத்துடன் இருந்தான். மதனமோகினியும் மந்திரி குமாரனின் முகத்தைப் பார்த்து அனேகம் விசாரத்துள்ளாய் இருக்கிறீர். அடியேன் செய்த குற்றம் ஏதாகிலும் உண்டோ, என்னுடைய மாதா, பிதாவினால் அவமானமடைந்த தேனும் உண்டோ என்று விண்ணப்பம் செய்ய, மந்திரிகுமாரனும் வாராய் மதனமோகினியே உங்களால் ஒரு குற்றமும் இல்லை. நம்முடைய பட்டணத்து வர்த்தமானத்தை சிந்தித்தேன் என்ன, உம்முடைய பட்டணத்து வர்த்தமானத்தை அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டும் என்று மதனமோகினி கேட்க, மந்திரகுமாரனும் இவள் புத்தியிலே அதிகமானவளாய் இருக்கிறாள். இவளுக்குத் தோன்றினாலும் தோன்றும் என்று கன்னி மீன் நகைத்த வர்த்தமானமும், ராசா தன்னுடைய பிதாவாகிய பிரதான மந்திரியை மீன் நகைத்த காரணம் சொல்லாவிட்டால் ஆக்கினை இடுவேன் என்றவாறும், தான் போய் தவணை கேட்டுப் புறப்பட்டு வந்தவாறும் சொல்லி, இப்பொழுது தன் மாதா, பிதாவுக்கு என்ன இம்சை பண்ணி உள்ளானோ என்று விசாரமிட்டு இருந்தேன். அல்லாமல் உங்களால் எனக்கொரு குறையும் இல்லை என்றான்.

மதனமோகினியும் இதனைக்கேட்டு இதற்கு மனஸ்தாபம் படுவான் ஏன்? ராசாவுக்கு ஏற்புடையதைச் சொல்வதில் பாரமொன்றும் இல்லை என, மந்திரி குமாரனும் தவணையிட்டு வந்தேன். தவணை தப்பியதால் தன்னுடைய பிதாவை என் செய்வ ானோ தெரியாதென்ன, ராசாக்கள் சொன்ன சொல் தவறாதவர்கள். ஆக்கினை மந்திரிக்குத் தேவை இல்லை என்று உத்தாரச் சீட்டுக் கொடுத்த பிறகு வேறு செயல் செய்யார். மாதா பிதா யாதொரு இம்சையும் இல்லாதிருப்பர். நீ ஏன் விசாரப்படுகிறாய் என்றுகூற, ஒருவாறு மனம்தேறி மந்திர குமாரனும், மதனமோகினியும் மகிழ்வுடன் இருந்தனர்.

மற்றொரு நாள் மந்திரி குமாரன் தன் பெற்றோரை எண்ணி விசாரமிட்டு மாதா பிதாவைக் காணவேண்டுமென்று எண்ணி ஊருக்குப் போகவேண்டும் என்று செட்டியாருக்கு அறிவிப்ப செட்டியாரும் சம்மதித்து மந்திரிகுமாரனுக்கும் மதனமோகினிக்கும் வேண்டும் வஸ்திராபரணங்களும் தனதிரவியங்களையும் ஸ்ரீசனங்களையும் வரிசைப்படி கொடுத்து அனுப்ப மந்திரிகுமாரனும் அவந்திபுரம் புகுந்து தந் மாளிகை அணுகி மாதா பிதாவைக் கண்டு வணக்கம் செய்துவந்தான்.

பின்பு அவந்தி அரசனும் மந்திரிகுமாரன் வரவு கேட்டு மந்திரிகுமாரனை அழைப்பித்து சிந்தித்த கருமம் சொல்வாயாக என்ன, அப்படியே ஒரு வெள்ளாட்டியைக் கொண்டு சொல்விக்கிறேன் என்ன, ராசாவும் அப்படியே சொல்வீரென்று அன்னேரம் அனுப்பினான். இவனும் வந்து ராசாவிடம் கற்றோம். அலட்சியமாகச் சொல்லி வந்தோம். இனி ராசாவுக்கு என்ன உத்தாரம் சொல்லப் போகிறோம் என்று முசித்திருந்தான்.

மதனமோகினியும் இவன்மேல் வைத்திருந்த சினேகத்தாலே சொல்வாள். நீர் முசித்திருப்பான் ஏன்? என் ஆருயிரே! என் கணவா! எழுந்திருந்து நீராடாததற்குக் காரணம் ஏதென்று கேட்க, முன்பே வந்த காரணமெல்லாம் சொன்னான். சொல்லக் கேட்டிருந்தும் இவ்வளவோ என்றாய். இப்பொழுதும் ராசா அழைப்பித்து மச்சம் சிரித்த காரணம் சொல், சொல்லாயாகில் ஆக்கினையிடுவேன் என்றான் என்று சொல்ல மதனமோகினியும் இதற்குத்தானோ உரையாடாதிருந்தீர். என்னை அழைத்துப்போய் ராசாவின் முன்னே நிறுத்தும். நானே சொல்லுகிறேன். நீர் இதற்கு வருந்தவேண்டாம் என்றாள்.

மற்றை நாளும் மன்னன் மறவாமல் அழைப்பிக்க மந்திரிகுமாரன் மதனமோகினியையும் அழைத்துக்கொண்டு போய் ராசாவைக் கண்டு நின்றான். ராசாவைக் கண்டு

மதனமோகினி வணக்கத்துடன் ஒடுக்கத்துடன் நின்று ராசாவிடம் மச்சம் நகைத்த காரியம் சொல்கிறேன். அடியேனுக்கு எட்டு நாளைக்குத் தவணை தரவேண்டும் என்ன, ராசாவும் அப்படியே என்றான். மந்திரி குமாரனும் நீ விசாரித்துச் சொல்லாதபோது உன்னை ஆக்கினை இடுவான். சத்தியம், இதற்குத் தப்ப இயலாது என்றான். இருவரும் துன்பத்துடன் தன் மனை புகுந்தனர்.

மதனமோகினியும் விசாரமிட்டு இருந்தாள். குறிப்பிட்ட நாளும் ஒவ்வொன்றாய்க் கழிந்தது. இனி ஒரு நாளே இருப்பது. இதற்கு என் செய்வோம் என்று விசாரமிட்டு இருந்தனர். இது சொல்லாதபொழுது ராசா ஆக்கினை இடுவான். அதைவிட நம்முடைய பிராணனை வலுவிலே விட்டால் சொல்லமாட்டாமல் செத்தான் என்று இழிவாகும் என்று வருந்த வேறொரு நினைவு தோன்றியவளாய் ஊரிலே உள்ள காளி மகா உக்கிரமான காளி. அக்காளி கோவிலிலே போய் உபவாசத்துடனே அத்தகிரியையுடனே அர்த்த ராத்திரியிலே பலிபீடத்தின் மேல் நாம் படுத்துக்கிடந்தால் பூதங்கள் நம்மைப் புசிக்கும். அது ஒழிய நாமே வலிய வதைத்துக் கொண்டு சாகிறது தோஷம் என்று விசாரமிட்டு அப்படியே போய்க் காளி கோவிலிலே பலிபீடத்தின்மேல் படுத்துக்கொண்டாள்.

அந்நேரம் தேவி கோட்டத்துப் பேய்கள் பூதபிசாசுகள் எல்லாம் பலிபீடத்தின்மேல் நமக்கு உணவு கிடைக்குது. இதைத் தின்னவேண்டும் என்ன. சில பேய்கள் தேவி கோட்டத்தின் பலிபீடத்தின் மேலுள்ள மானிட யாக்கையைத் தேவி உத்தரவில்லாமல் தின்னால் ஆக்கினை வரும். தேவிக்கு அறிக்கை இட்டுத் தின்போம் என்ன, அப்படியே தேவியைப் போய்த் தரிசித்து, நமஸ்கரித்து இன்றைக்கு ஆகாரம் கிடைக்காமல் நொந்தோம். பலிபீடத்தின் மேலே கிடக்கிற மானிட யாக்கையைப் போஜிப்பதற்கு உத்தாரம் தரவேண்டும் என்ன, தேவியும் நம்மிடம் வந்தபேரைத் தின்னலாகாது என்றாள். ஆனால் இந்தப் பட்டணத்திலே ராசா ஆக்கினை

இட்டபேர் உண்டாகில் போசிக்க அருளிச் செய்யவேண்டும் என்று பேய்கள் கேட்டக தேவி சொல்வாள்.

அவந்தி ராசனுக்கு ஐந்து தேவிமார் உண்டு. ராசா ஐந்து நாளைக்கொருநாள் முறையாக நித்திரை கொள்ளுங் காலத்தில் அந்தத் தேவிமாரும் பேசிக் கொண்டு அஞ்சு பேரும் சோரப் புருஷனை வைத்துக்கொண்டு முறையாகக் குறிப்பிட்ட நாளில் ராசாவுடனும், மற்ற நாட்களில் சோரப் பத்தாவை அனுபவித்துக் கொண்டிருப்பர். இன்னும் பல செய்திகளைச் சொன்னது. பொழுது விடிகிற நேரத்தில் பலி பீடத்தின் மேல் படுத்திருந்த மதனமோகினியும் தேவி வருங்காரியங்களெல்லாம் சொன்னாளோ, நாமும் ராசாவுக்குப் பிரதியுத்தாரம் சொல்வோம் என்று எழுந்திருந்து தன் வீடு நோக்கிச் சென்றாள்.

**துணை நின்ற நூல்கள்**

*1.* கலைக்களஞ்சியம், தமிழ்வளர்ச்சிக் கழக வெளியீடு, முதல் பதிப்பு, *1956*.

*2.* பஞ்சதந்திரக்கதைகள் - முல்லை பி. எல். முத்தையா, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.

*3.* Sanskrit Literature - H. H. Wilson Asian Educational Service - New Delhi, 1984.

*4.* History of Classical Sanskrit Literature - Gaurinath Shastri - 1987.